Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஒக். 14-20, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 584



## புலிகள் மீது அதிகரிக்கும் சர்வதேச அழுத்தம்

ரஜினி இரசிகர்களுக்கு இனிப்பான செய்தி

உள்ளே!

ஆரம்பம்

ஒரு தாய் ஒரு மகள்

புதிய தொடர்

## ஆன்மீகம்



### பிரதோஷ விரதமும் அதன் மகிமையும்

பிரதோஷம் சிவபெருமானுக்கும் நந்திக்கும் உகந்தது. பிரதோஷம் ஐந்து வகைப்படும். நித்திய பிரதோஷம், பக்ஷப் பிரதோஷம், மாதப் பிரதோஷம், மஹாபிரதோஷம், பிரளயப் பிரதோஷம்.

சூரியாஸ்தமனத்திற்கு மூன்று நாழிகைகள் முன்பாக நட்சத்திரங்கள் உதயமாகும் வரைக்கும் உள்ள காலகட்டம் நித்தியப் பிரதோஷம்.

மாதமிருமுறை வரும் சுக்ல கிருஷ்ண பக்ஷ திரியோதசியிலும் வருவது மாத பக்ஷ பிரதோஷம். (மாதமிருமுறை) கிருஷ்ண திரியோதசி சனிக்கிழமையில் வந்தால் அதுவே ஒப்பற்ற மஹா பிரதோஷம்.

பிரளய காலத்தில் அகில லோகங்களும் சிவனிடத்தில் அடங்கியொடுங்கும். அதுவே பிரளய பிரதோஷமாகும். பிரதோஷ நாள் உபவாசமிருந்து மாலை நேரத்தில் சிவ ஆலயம் சென்று சிவனையும், நந்திகேசுவரரையும் வழிபட வேண்டும். பின் உணவு அருந்தலாம். எம்பெருமான் அமரர்களைக் காக்க ஆலகால விஷத்தை உண்ட வேளைதான் பிரதோஷ காலமென்பது. சனிக்கிழமை சந்தியா வேளையில் இந் நிகழ்வு நடந்ததாகப் புராணம் கூறுகிறது.

பகலில் உறங்காது, வீண் பேச்சுப் பேசாது, மௌனமாக விரதம் அனுஷ்டித்து நினைத்த காரியத்தில் வெற்றி அடையலாம்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

### முன்னே செல்லுகிற தேவன்

"நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" ஏசாயா 45 :2 கர்த்தர் எமக்கு முன்னே செல்லுகிறவராயிருக்கிறார். மேகஸ்தம்பமாகவும் அக்கினிஸ்தம்பமாகவும் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திச் சென்றவர், உங்களையும் வழி நடத்திச் செல்லமாட்டாரோ? ஆனால் அவர் வழியிலே நடப்பது எம்முடைய கடமை. அப்பொழுது மாத்திரமே அவர் எமக்காக என்னென்ன மகத்தான காரியங்களைச் செய்து வைத்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய் போகையில்; இயேசு அவர்களுக்கு முன்னே நடந்து போனார்; அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே பயத்தோடு போனார்கள். மாற்கு 10:32. பாவிகள் இரட்சிக்கப்பட்ட பரமன் இயேசு முன்னே நடந்தார். மரணம் அங்கே காத்திருக்கிறது. சிலுவை தயாராயிருக்கிறது. ஆனாலும் அவர் முன்னே நடந்தார். அதனால் சீடர்கள் பயந்தார்கள். சகோதரனே! சகோதரியே! அன்றைக்கு எமது பாவங்களுக்காக முன்னே சென்று மரித்தவர் இன்றைக்கு இராஜாதி இராஜாவாக உயிர்த்தெழுந்து வல்லமையுடன் உனக்கு முன்னே போய்க்கொண்டிருக்கிறார். அவரையே பின்பற்றிச் செல். அநாதிதேவன் உனக்கு முன்னே செல்கிறார். யார் எந்தத் தடையைப் போட்டாலும் அது உன்னை நிறுத்தப்போவதில்லை. நீ சேனைகளின் கர்த்தருக்குச் சொந்தமானவன். அற்புதங்களின் தேவன் உனக்கு முன்னே போகிறார். நீ செய்கிற காரியங்கள், செல்கிற வழிகள் எல்லாவற்றிலும் உனக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறவர் முன்னே சென்று கோணலானவைகளைச் செவ்வையாக்குகிறவராயிருக்கிறார் என்பதை விசுவாசி, இயேசு வெற்றியைக் கொடுப்பார். ஆமென்.

-சகோ போல் ஜோன், தெல்தெனிய.

### சகோதர பந்தம்

தனது முஸ்லிம் சகோதரனுடன் மூன்று இரவு (பகலுக்கு மேல்) வெறுத்திருப்பது கூடாத செயலாகும். எனவே மூன்று இரவு வெறுத்திருக்கும் நிலையில் மரணிப்பவன் நரகம் நுழைவான்.

அறிவிப்பவர் :- அபூஹுரைரா (ரலி)

நூல் :- அபூதாவூத், அஹ்மது.

ஒரு முஸ்லிம் சகோதரனுக்குக் கெடுதல் செய்பவனும் அவருக்கு எதிராகச் சதி செய்பவனும் சாபத்திற்குரியவன்.

அறவிப்பவர் :- அபூபக்கர் (ரலி)

நூல் :- நிர்தி

ஒரு முஸ்லிம் சகோதரனுக்கு நன்கொடை அளித்து (அதனை) திரும்பப் பெறுபவர் நாயைப் போன்றவர். (நாய்) அது உண்டதைக் கக்கிவிட்டுப் பின்னர் அதனையே மீண்டும் தின்றுவிடுகிறது.

அறிவிப்பாளர் :- இப்னு அப்பாஸ்

நூல் : முஸ்லிம்

எவன் ஒரு முஸ்லிம் சகோதரனை பயமுறுத்துகின்றானோ அவனை அல்லாஹ் மறுமை நாளில் பயமுறுத்துகின்றான்.

நூல் :- புஹாரி.

செல்வி செய்யது புஹாரி ஸஹானா, வாழைச்சேனை - 05.

## கவிதைப் போட்டி இல.581



பரிசுக்குரிய கவிதை

### வளரட்டும்!

சந்தாப் பணத்தில்
பந்தா காட்டும்
அரசியல் வாதிகளின்
அழைப்பின்றி...
அணிவகுப்பற்ற...
உழைப்பாளிகளின்
உரிமைப் போராட்டங்கள்
மலையகத்தில்
வலுப் பெறுவதற்கான
விடியல் அடி வானில்
தோன்றுகின்றதோ?

-கா.சுபாஷ்,
டிக்கோயா.

### என்னத்தை சாதிக்கப் போகிறீர்கள்

மனிதாபிமானமில்லா
மனிதர்கள் செய்யும்
மனிதப்
படுகொலைக்கே
இன்று வரை
எல்லையில்லாமல்
இருக்கும் போது
வெறும் மண்ணுக்கு
எல்லை போட்டு
என்னத்தை ஐயா
சாதிக்கப்
போகிறீர்கள்?

-எஸ்.பி.பி.கணேஷ்,
தாண்டியடி.

### எதற்கு?

எம் தலைமைகள்
கறுப்புக் கொடி
தாங்கி
காரிருளில் மக்களை
இழுத்துச் செல்வது
இன விடிவுக்கா,
அன்றேல்
இன அழிவுக்கா?

-அ.சந்தியாகோ,
கண்டி.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### தேடல்

வெளிச்சத்தினில்
தொலைத்துவிட்டு
இருட்டினில் தேடுகிறீரோ?
எம் நாட்டு சமாதானம் போல.....!

-'முனையூரான்', வெள்ளம்பிட்டி.

### இரவில் மட்டும்!

நீங்கள்
யாருக்காய் கொடி
பிடித்தாலும்
இரவில் மட்டும்
முகம் தெரியாதவாறு
கொடி
பிடித்துக்
கொள்ளுங்கள்.
இல்லையேல்,
உங்களை
உங்கள் நிழல்களே
கொலை செய்யும்

-சபினா நஸ்புள்ளாஹ்,
கிண்ணியா - 03.

## கவிதைப் போட்டி இல.584



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 20.10.2004

கவிதைப் போட்டி இல.584
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஏன்?

அரசுக்கு ஆதரவு
கொடுத்த
இ.தொ.கா.வை
துரோகி என்று
தூற்றுபவர்கள்
தமிழனை தமிழனே
கொன்றொழிக்கும்
போது
வாய் மூடி மௌனமாக
இருப்பதும் ஏனோ?

-த.நந்தலேஸ்வரன்,
மட்டக்களப்பு.

### புரிந்துணர்வு உடன்படிக்கை

மண்ணில்,
மதிப்பிழந்த மனிதம்....
விண்ணில்,
விண்ணப்பம் விடுத்ததாம்,
செவ்வாய் வாசிகளே!
எம்மையும்
சேர்த்துக் கொள்ளுங்கள் என்று.....

-மு.முகைல், பாலையூற்று.

### எம் விடிவு தொலைவில் தான்!

கோஷங்கள் பல எழுப்பினாலும்
கோரிக்கை பல வைத்தாலும்
கொடி பிடித்தாலும்
சாத்வீகப் போராட்டம் செய்தாலும்
சத்தியாக்கிரகம் செய்தாலும்
தடியடி பெற்றாலும் - சிறைத்
தண்டனை - பெற்றாலும்
இயக்கங்கள் பல இருந்தாலும்
எம் இனத்தின் ஒற்றுமை இன்றேல்
எம் விடிவு தொலைவில்தான்!

-உ. சசி சுதாஜினி,
திருகோணமலை.

### எலும்புக் கூடுகள்!

எங்கே போகின்றீர்
சூனிய தேசத்திற்கா....
'துரோகி' என்று
களை எடுத்த பின்
மிஞ்சி நிற்பது
எங்கள் தேசத்தில்
எலும்புக் கூடுகளே....!

-ம.ருத்ரா, மாத்தளை.

### போராட்டம்

கண்டதுக்கெல்லாம்
ஹர்த்தால் போட்டதால்
ஹர்த்தாலை
வெறுத்தவர்களின்
போராட்ட முறையா
இது.

-ஹிஷாம்,
திருகோணமலை.

### அடையாளம்!

எங்கள்
தேசத்து மண்ணில்
எங்களின்
காலடிச் சுவடுகளும்
பதியும் - எங்களின்
நிழல்களும் படும் -
நாங்கள்
பிறந்த தேசத்தின்
முத்திரை அடையாளம்.

-காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா.

## உங்கள் பக்கம்

### நானாட்டான் வைத்தியசாலை நாதியற்று கிடக்கிறது

மன்னார் மாவட்டத்தின் முதுகெலும்பு நானாட்டான் பிரதேசம். மன்னார் மாவட்டம் கடற்றொழிலைப் பிரதானமாகக் கொண்டிருந்தாலும், அதிகப்படியாக விவசாயம் செய்யப்படுவது நானாட்டான் பிரதேசத்தில்தான். அறுவடை காலங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து வேலைக்கு வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுக்கும் புனித பூமி நானாட்டான்.

இந்த நானாட்டான் பிரதேசத்தின் பள்ளங்கோட்டை, கட்டைக்காடு, மடுக்கரை, மோட்டக்கடை, எருவிட்டான், அச்சங்குளம், ஆவனம், அளவக்கை இன்னும் பல கிராமங்களை உள்ளடக்கி 3,500க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக் கிராமங்களின் மத்தியில் நானாட்டான் பிரதேசம் அமைந்துள்ளது. இப் புனித பூமியில் பழைமை வாய்ந்த வைத்தியசாலை ஒன்று உள்ளது. இது எந்த அடிப்படை வசதியும் அற்றுக் கவனிப்பார் இல்லாமல் உள்ளது. அவசரச் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் முறையான சிகிச்சை வழங்கப்படாததால் இறந்துவிடுகின்றார்கள். அம்புலன்ஸ் வசதியோ, தொலைபேசி வசதியோ, வைத்திய தேவைக்காக வரும் பொதுமக்களுக்கு மலசலகூட வசதியோ இல்லை. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். அத்தோடு தமிழ் கூட்டமைப்பில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ததில் நானாட்டான் மக்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் இந்த நன்றியை மறந்துவிடாது எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று எமது பொதுமக்களின் சார்பில் கேட்டுக் கொள்வதோடு, வைத்தியசாலைக்குத் தேவையான அம்புலன்ஸ், தொலைபேசி, மலசலகூட வசதிகள் செய்து தருமாறு சம்பந்தபட்டவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.
உண்மையுள்ள
தமிழாம்பிகை எஸ்.ஜெகன்,
நானாட்டான்.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசக(ர்) சாலை



### முரசே வாழ்க!

கொத்தாகப் பூத்த
எங்களுக்கு
முத்தான
கருத்தெடுத்து
சத்தான கல்வியைப்
போதிக்கும்
முத்தான முரசே....!
திக்கற்ற ஓடங்களுக்கு
திசை காட்டும்
கலங்கரை விளக்கு
நீ!
இருண்ட உலகிற்கு
ஒளிவீசும்
கதிரவனும் நீயல்லவா!
உனது சேவை
வளர்க!
உனது புகழ் ஓங்குக!.

-றமீஸ் சஜாத், புத்தளம்.

**அபிமான என் முரசே!!**
**தினந்தோறும் உனை**
**பார்ப்பதில் என்**
**மனம் மகிழ்ச்சியில்**
**குதூகலித்திடும்காலம்**
**தவறாது என்றும்**
**இனிய பல**
**தகவலுடன் வலம்வர**
**என் வாழ்த்துக்கள்.**

வாசகி
எம். பானு, கொழும்பு.

அன்பான முரசுக்கு! காலத்தின் தேவையறிந்து ஒவ்வொரு செய்திகளையும் எமக்கு விரைந்து அளித்திடும் உன் சேவை என்றும் பாராட்டுக்குரியது. அத்துடன் உண்மைச் செய்தியை உடனுக்குடன் தருவதில் உனக்கு நிகர் நீதான். என்றும் உன் சேவை வளம் பெற என் இனிய வாழ்த்துக்கள்.

அன்பு வாசகன்
எஸ் சாரங்கன், யாழ்ப்பாணம்.

### காத்திருப்பு!

வியாழ திசை
உனக்காக
வென்றாய் நன்றே.
வேண்டுவன
தந்தாய் நாம்
கொண்டோம்
நலமே!
கவிதை பல
தந்தாய் நாம்
கருத்து மல்க.
காத்திருப்போம்
உன் வரவு
காண நாளும்.

-எம்.ஐ.அப்றோஸ்,
மருதமுனை.

### இனிய முரசே!

கடந்த 582ஆவது முரசில் முன் பக்கத்தை அலங்கரித்து புன்முறுவலுடன் காட்சி தந்த பூவையின் தோற்றம் பிரமாதம். பாருக் எழுதிய 'காதல் உணர்வுகளில் காத்திருக்கும் சங்கதிகள்' என்ற ஆக்கம் மிகவும் அருமையாக இனிமை சொட்டும் வகையில் அமைந்திருந்தது. இன்னும் இதுபோன்ற ஆக்கங்களை சுமந்து வர வேண்டுகிறேன்.

எம்.ரி.எம். யூனுஸ், காத்தான்குடி - 01

# மல்வத்தை தேரரின் முன்னிலையில் சுரேஷ், சம்பந்தர் மௌனம்
# படுகொலைகளை கண்டிக்கிறார் சிவாஜிலிங்கம் எம்.பி.

"அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பலரைப் புலிகள் கொன்றுவிட்டனர். இன்றும் கூட இவ்வாறான படுகொலைகளைப் புலிகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இதற்காகப் புலிகள் இயக்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று கடந்த பதினோராம் திகதி தன்னைச் சந்தித்த கூட்டமைப்பு எம்.பி.க்களிடம் மல்வத்தை பீடாதிபதி வண. திப்பொட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தன் சந்தித்துப் பேசுவதற்குத் தமக்குச் சந்தர்ப்பம் தருமாறு மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு கோரிக்கை விடுத்திருந்தார். இக் கோரிக்கைக்கு அளிக்கப்பட்ட சம்மதத்தையடுத்தே கண்டி, மல்வத்தை பீடத்தில் இச் சந்திப்பு நிகழ்ந்தது.

"ஜனநாயக ரீதியில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று விரும்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கொலை செய்ய வேண்டாமென்று புலிகளுக்குச் சொல்லுங்கள்" என்று மகாநாயக்கர் கூறியபோது, ஆர். சம்பந்தனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் மௌனம் சாதித்தனர். ஆனால், சந்திப்பில் கலந்துகொண்ட ரெலோ எம்.பி.மட்டும் வாய்திறந்து மகாநாயக்கருக்குப் பதிலளித்தார். "அமைச்சர் டக்ளஸின் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொல்லப்படுவதை நாமும் விரும்பவில்லை. புலிகள் எமது ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோரைக் கொன்றனர். நாமும் ஈ.பி.டி.பி.யினரைப் போன்றே அமைதி பேணினோம். பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பவில்லை" என்று சிவாஜிலிங்கம் பதிலளித்தார்.

"பௌத்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை சரியென்று நாம் கூறவில்லை. பௌத்தர்களின் புனிதத் தலமான தலதா மாளிகை தாக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்திலிருந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவன் நான். ஆனால், இச் செயலுக்காகப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டாமென்றும் கோரினேன் என்று சிவாஜிலிங்கம் அங்கு தெரிவித்தார். "இந்த நாட்டில் இன ரீதியான பிரச்சினைகளில் பல வரலாற்றுத் தவறுகள் நிகழ்ந்துள்ளன. தலதா மாளிகை புலிகளால் தாக்கப்பட்டது. பல விகாரைகள் உடைக்கப்பட்டன" என்று குறிப்பிட்ட மகாநாயக்க தேரர், "எமது பகுதிகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமாதானமாக, சௌஜன்யமாகவே வாழ்கின்றனர். ஆனால், வடக்கில் சிங்கள மக்கள் இல்லையென்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆயுதம் தாங்கிய ஒரு குழுவே இந்த நிலைக்குக் காரணம்" சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பை எதிர்த்து மல்வத்தை பீடத்துக்கு வெளியே பதாகைகள் தாங்கிய வண்ணம் விரல் விட்டெண்ணக் கூடியவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்குப் புனர்வாழ்வு அமைச்சராக திரு.டக்ளஸ் தேவானந்தா பணியாற்றிய போது, பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்துப் பேசியிருந்தார். அப்போது சிங்கள பௌத்த பேரினவாதிகளின் சதித்திட்டத்துக்கு டக்ளஸ் தேவானந்தா துணை போகிறாரென்று கண்டனம் தெரிவித்த அதே கூட்டமைப்பின் எம்.பி.க்கள், மல்வத்தை பீடாதிபதியிடம் சந்திப்புக்குச் சந்தர்ப்பம் தருமாறு கோரியே சந்தித்துப் பேசியுள்ளனர். இந்த மாற்றத்தை அல்லது விமர்சனத்தை எப்படி வர்ணிப்பதென்று தெரியவில்லை என்கிறார் ஈ.பி.டி.பி.யின் ஊடகப் பேச்சாளர்.

## மருத்துவ மாணவிக்கு வெளிச் செல்வாக்கு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவி புஷ்பமாலா உண்ணாவிரதமிருப்பேன், சத்தியாக்கிரகம் செய்வேனென்றெல்லாம் பல்கலைக்கழக அதிகாரிகளை மிரட்டியது பழைய கதை. அவருக்கிருக்கும் இயக்கச் செல்வாக்கைப் பயன்படுத்தியே பல்கலைக்கழக உபவேந்தர் போன்ற புத்திஜீவிகளைக் கலக்கியடித்து வருகிறாரென்று மருத்துவ பீட மாணவரொருவர் தெரிவித்தார். இவரது குடும்பத்தைச் சேர்ந்த இருவர் இயக்கத்தில் உள்ளனரென்றும், இதனால்தான் தனது விடைத்தாள்கள் உரிய முறையில் திருத்தம் செய்யவில்லையென்று கூறிப் பேராசிரியர்களையே இந்த அம்மணி கலக்கியடித்து வருகிறாராம். இரண்டாம் வருட மாணவியான இவரது செய்கைகள் சக மாணவர்களை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளதென்றும் கூறப்படுகிறது.

## கடற்புலித் தளபதி சூசை தனித்து இயங்க முடிவு?

புலி இயக்கத்துக்குள் கருணா விவகாரம் வெடித்துச் சிதறி ஆறு மாதங்கள் கழிவதற்கிடையில் மற்றொரு பிளவு முளைவிடுகிறதென்று உள்ளகத் தகவல்கள் நம்பகமாகத் தெரிவிக்கின்றன. கடற்புலிகளின் தலைவர் சூசையும், கருணா பிரச்சினையை அடுத்து பிரபாகரனால் இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட சொர்ணமும் கூட்டாகத் தலைமைக்கு எதிராக இயங்குவதாகக் கடந்த பத்தாம் திகதிய 'சண்டே ஒப்சர்வர்' பத்திரிகை முன்பக்கச் செய்தி வெளியிட்டுள்ளது. சொர்ணம் திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் புலி எதிர்ப்புச் செய்திகளை வெளியிடத் தயங்கிய இப் பத்திரிகை அரசியல் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகை என்பது குறிப்பிடத் தக்கது. மட்டு - அம்பாறைப் புலித் தளபதியாக விளங்கிய ரமேஷ்க்குப் பதிலாக அரியாலையைச் சேர்ந்த பானு என்பவர் நியமிக்கப்பட்டமையும் ரமேஷ் மற்றும் பதுமனின் விவகாரங்களைத் தலைமை கையாண்ட விதமும் இவ்விருவரையும் கடும் அதிருப்திக்குள்ளாக்கியிருப்பதாகவும் உள்ளகத் தகவல்கள் உறுதியாகக் கூறுகின்றன. கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் கடந்த பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற எழுச்சி விழாவில் சூசை பங்குபற்றுவாரெனப் பிரசாரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், கடைசிவரை சூசை பங்குபற்றவேயில்லை. சூசையின் இந்த நடத்தை புலி இயக்கத்துக்குள் முரண்பாடுகள் வெடித்துவிட்டமைக்கு ஆதாரமென்கிறார் தமிழ்ச்செல்வனின் சகோதரரான மூர்த்தி. இவரும் புலித் தலைமையோடு அதிருப்தியுற்றாலும் இன்னமும் கிளிநொச்சியில் வாழ்ந்து வருகிறாரென்பது குறிப்பிடத் தக்கது. தன்னை வந்து சந்திக்குமாறு பிரபாகரன் சூசைக்குப் பல தடவைகள் தகவல் அனுப்பியபோதும் இன்னமும் சூசை அவரைச் சந்திக்கவில்லையென்றும் மூர்த்தி கூறுகிறார். சூசையின் சொந்தச் சகோதரியை மணம் புரிந்தவரே ரமேஷ் என்றும் தெரியவருகிறது. "நான் ஓடி ஒளியப் போவதில்லை. என்னிடம் இராணுவ பலம், புலனாய்வுப் பலத்தோடு, தளப் பிரதேசங்களும் இருக்கின்றன" என்று அண்மைய கூட்டமொன்றில் சூசை கூறினாரென்று வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

## ஜப்பானுக்கு மரமுந்திரிகை

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் கடந்த ஆறாம் திகதி ஜப்பானுக்கு ஐம்பதாயிரம் மரமுந்திரிகைப் பொதிகளை ஏற்றுமதி செய்துள்ளது. 1972ஆம் ஆண்டு மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் உற்பத்திப் பொருட்களை இக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதி செய்தமை இதுவே முதல் தடவையென்று மேற்படி கூட்டுத்தாபனத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான குணசேகரம் சங்கர் தெரிவித்தார். மாதாந்தம் இருபதாயிரம் பொதிகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுமென்றும் அவர் சொன்னார்.

## நவராத்திரி விழா

இம் மாதம் 14ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நவராத்திரி விழா கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கதிரேசன் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை இந்துசமய கலாசார அமைச்சு செய்துள்ளது. இந்த விழா நடைபெறுகின்ற ஒவ்வொரு தினத்திலும் பிரதம விருந்தினர்களாக வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் அமைச்சரின் இந்துசமய கலாசார அலுவல்கள் தொடர்பான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் விழாவினை ஏற்பாடு செய்துள்ளார்.

## கொலைகளை நிறுத்துமாறு தமிழ்ச்செல்வனிடம் சர்வதேச உரிமை அமைப்புகள் வலியுறுத்தல்

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இச் சமயத்தில், மாற்றுக் கருத்துகள் கொண்ட தமிழ் அரசியல் வாதிகளைக் கொலை செய்யும் நடவடிக்கைகளைப் புலிகள் கணிசமானளவு அதிகரித்திருப்பதோடு, இன்னமும் வயது குறைந்த சிறுவர், சிறுமிகளைத் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்கின்றனர். புலிகள் இயக்கத்தின் கருத்துக்களோடு இணைந்து போகாத தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள புலிகளுடன் முரண்பட்டுக்கொண்ட போட்டிக் குழுவைச் சேர்ந்தவர்களே கொல்லப்படுகின்றனர் என்று ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பணிப்பாளரான லப்னா பிரெய்த், எஸ்.பி.தமிழ்ச்செல்வனிடம் கூறினார். சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழுவொன்று, கடந்த ஐந்தாம் திகதி ஜெனீவாவுக்குச் சென்றுள்ள புலிகளின் குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே இந்த ஆதங்கம் வெளியிடப்பட்டது. புலிகளின் குழுவுக்குத் தலைமை தாங்கிய தமிழ்ச்செல்வன் பதிலளிக்கையில், "இக் கொலைகளை நாம் செய்யவில்லை. ஆனால் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் இக் கொலைகளை நிறுத்தி, நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை எடுப்பது குறித்துக் கவனம் செலுத்துவோம்" என்று குறிப்பிட்டார். சகல இலங்கையர்களினதும் வாழ்வுரிமையையும் மனித உரிமைகளையும் மதிப்பதாகவும், அதனைச் செய்யக் கூடிய ஆற்றல் தம்மிடம் உண்டென்பதையும் புலிகள் உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் நிக்கோலஸ் ஷோவன் வலியுறுத்தினார். சர்வதேச மனித உரிமைகள், மனித உரிமைகளின் தரம் மற்றும் அதனைக் காத்திரமாகச் செயற்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியச் செயற்பாடுகளுக்கான தமது பகிரங்கமான கடப்பாட்டைப் புலிகள் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஷோவன் கோரிக்கை விடுத்தார். இன்று எழுந்துள்ள பீதி, குறிப்பாகக் கிழக்கில் நிலவும் பீதி மனோபாவம் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றினைக் காண்பதை மேலும் சிக்கலாக்கியுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஜெனீவா பிரதிநிதியான பீற்றர் ஸ்பின்ரர் எச்சரிக்கை விடுத்தார்.

## மரணத்தின் பின்னரும் நிம்மதியில்லை

கடந்த மாதம் 28ஆம் திகதி பாரிஸில் காலமான அரசியல் விமர்சகரும் படைப்பாளியுமான உமாகாந்தனின் மரண அறிவித்தல் தொடர்பாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் விஷமிகளால் கிழித்தெறியப்பட்டன. மீண்டும் ஒட்டப்பட்ட மரண அறிவித்தல் சுவரொட்டிகளையும் விஷமிகள் கிழித்திருந்தனரென உமாகாந்தனின் நெருங்கிய தோழர்கள் தெரிவித்தனர். ஏகப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டையும் சகோதரப் படுகொலைகளையும் வன்மையாகக் கண்டித்து எழுதியவர் உமாகாந்தன். தமது அராஜகக் கொள்கைகளுக்குச் சரணம் பாட மறுத்தவர்களை மரணத்தின் பின்னரும் பழிவாங்குபவர்கள் காட்டு மிருகங்களேயெனச் சுட்டிக்காட்டுகிறார் அவரது நெருங்கிய தோழரான நவரட்ணம்.

## இ.போ.ச. அதிகாரி மறுப்பு

'இ.போ.ச. அதிகாரி சவால்' என்ற தலைப்பில் கடந்த 30.09 - 06.10.2004 திகதிய 582ஆவது தினமுரசு இதழில் பிரசுரமான செய்தி தொடர்பாக மறுப்பறிக்கையொன்றினை கோண்டாவில் பஸ் டிப்போவின் பொது முகாமையாளர் அனுப்பிவைத்துள்ளார். தனது பெயரைக் குறிப்பிடாமல் பொது முகாமையாளர் என்ற பதவிநிலையை மட்டுமே குறிப்பிட்டு அனுப்பிய அந்த மறுப்பில், கோண்டாவில் இ.போ.ச. டிப்போவில் சபையின் செயற்பாடுகள் தொடர்பாகப் புலிகளுடன் எவ்வித கலந்துரையாடலும் செய்தியில் குறிப்பிட்ட வாரத்தில் நடைபெறவில்லையென்றும் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான தான் புலிகளுக்கு எவ்வித சவாலையும் விடுக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யுத்தம் நின்றாலும் நிற்காத அட்டூழியங்கள்

யுத்த நிறுத்தம் அமுலிலிருக்கும் கடந்த 28 மாத காலப் பகுதிக்குள் (2002ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் கடந்த ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை) புலிகளுக்கு எதிராக 4903 முறைப்பாடுகளும் அரசாங்கத்துக்கெதிராக 961 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 2439 முறைப்பாடுகள் புலிகளால் மீறப்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் சம்பந்தப்பட்டவையாகும். 111 முறைப்பாடுகள் அரசினால் செய்யப்பட்ட யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் பற்றியதாகும். இதேவேளை இக் காலப் பகுதிக்குள் புலிகள் 146 பேரைக் கொன்றுள்ளனரென்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## இறுதித் தீர்வை வலியுறுத்துகிறது ஈ.பி.டி.பி.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் மீள ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு பிரிட்டன் போன்ற நாடுகள் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று பிரிட்டன் தொழிற் கட்சியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான திருமதி கிளேயர் ஷோட்டிடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தூதுக்குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது. தொழிற்கட்சி அரசாங்கத்தில் முன்னாள் அமைச்சராகவும் பணியாற்றிய இவரைக் கடந்த பத்தாம் திகதி ஈ.பி.டி.பி. தூதுக்குழு சந்தித்து உரையாடியது. ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர், திருமதி ஷோட்டைச் சந்தித்து ஒரு மணித்தியாலம் வரை கலந்துரையாடினர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசிய மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றியும் பிரிட்டிஷ் எம்.பி.யிடம் எடுத்துக் கூறப்பட்டது. இனப் பிரச்சினைக்கு விரைவில் இறுதித் தீர்வு காண இரு தரப்பும் முன்வர வேண்டியதன் அவசியம் பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்திக் கூறினார்.

## மனித உரிமை மீறல்கள் பற்றி பிரிட்டிஷ் எம். பி.க்களுக்கு விளக்கம்

புலிகள் இயக்கம் எவ்வித நிபந்தனைகளுமின்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உடனடியாக மீளத் திரும்பி இறுதித் தீர்வு பற்றி பேசவும், அவர்கள் மேற்கொண்டு வரும் படுகொலைகள் உட்படச் சகல மனித உரிமை மீறல்களையும் நிறுத்தவும் உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தூதுக்குழு பிரிட்டிஷ் எம்.பி.க்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான தூதுக்குழுவை, நால்வர் கொண்ட பிரிட்டிஷ் எம்.பி.க்கள் குழு கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை அமைச்சரின் வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த கிரகம் அலன், அல்ரின் மிக்கேல், திருமதி லிண்டா பேகம், கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த எரிக் பேர்த் ஆகியோரே இச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களாவர். ஈ.பி.டி.பி. சார்பில் அமைச்சர் தேவானந்தா தலைமையில் முன்னாள் எம்.பி. கே. தவராசா, செல்வி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் கலந்துகொண்டனர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சி, யுத்த நிறுத்தத்தின் பின்னரான முப்பது மாதங்களில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்டோர் புலிகளால் கொல்லப்பட்டமை, வடக்கு - கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் பற்றியும் ஈ.பி.டி.பி. தூதுக்குழுவினர் பிரிட்டிஷ் எம்.பி.க்களிடம் விலாவாரியாக விளக்கினர்.

## புலிப் போர்வைக்குள் 'சிங்கங்கள்' சத்யனைச் சாடுகிறார் ஆனந்தசங்கரி

"புலிகள் இயக்கத்துக்குள் கருணா விவகாரம் கிளம்பியபோது, அது அவர்களின் உள் விவகாரம்; அதில் தலையிட எனக்கு உரிமையில்லையென்று நான் கூறியிருந்தேன். ஆனால் சில நாட்களில் இந்த விவகாரத்தை தமக்கே உரித்தான இராணுவப் பாணியில் கையாண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் உட்கட்சிப் பிரச்சினை எழுந்தபோது, எனது கட்சிக்குரிய வழியில் தலைமைப் பதவியைத் தக்க வைத்துக்கொள்ள ஜனநாயக வழியில் போராடினேன். அதிலென்ன தவறு" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் 'சங்கரிக்கு சத்யன்' என்பவர் எழுதிய கடிதத்துக்குப் பதிலளிக்கையிலே இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார். "யாழ். மாவட்டத் தேர்தல் பிரசாரமும் வாக்களிப்பும் எப்படி நடந்தனவென்பது அனைவருக்கும் தெரியும். வேட்பாளர்கள் மிரட்டப்பட்டமை, தேர்தல் பிரசார பிரசுரங்கள் எரிக்கப்பட்டமை, வேட்பாளர்களுக்கு மலர்வளையங்கள் அனுப்பி வைக்கப்பட்டமை சத்யனுக்குத் தெரியாத சங்கதிகளா? கூட்டமைப்பின் பெண் வேட்பாளருடைய ஆட்களால் எமது வேட்பாளர்கள் தாக்கப்பட்டமை இன்னமும் உங்களுக்கு சிதம்பர சக்கரமாகத் தெரிகிறதோ?" என்று, கள்ளவாக்குப் போடுவது எப்போதும் நடப்பதுதானேயென்று நியாயம் கற்பிக்கும் சத்யனைக் கேட்கிறார் சங்கரி.

# முரசம்

## தேர்தல்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ள அடையாள அட்டைச் சட்டமூலம்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

கடந்த பாராளுமன்ற அமர்வுகளின்போது நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியமான ஒரு சட்டமூலம், தேர்தல்களுக்கு அடையாள அட்டைகளைக் கட்டாயமாக்கும் சட்டமூலமாகும். இச் சட்டமூலம் இலங்கையின் தேர்தல் கலாசாரத்தில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்துமென நம்பப்படுகிறது. நீதியான தேர்தல்களுக்கான சர்வதேச அமைப்பான பவ்ரல், இச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதை வரவேற்று, இதை நிறைவேற்ற உதவிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துமிருந்தது. இலங்கையின் அரசியலில் இருந்த பிரதானமான ஒரு குறைபாடு, நீதியான தேர்தல்களை நடத்த முடியாத அரசியல் கலாசாரமாகும். இதனால் தேர்தல்களில் மக்களின் உண்மையான அபிப்பிராயங்கள் என்ன என்பதை வெளிக் கொணர முடியாத நிலைமை இருந்தது. பண பலம், ஆட்பலம், அதிகார பலம், ஆயுத பலம், குண்டர்கள் போன்றவையே தேர்தல்களில் தீர்மான சக்திகளாகும் நிலைமை இருந்து வருகிறது. கள்ள வாக்களிப்பு என்பது வெளிப்படையான ஒரு தேர்தல் கலாசாரமாகவே ஆகிவிட்டது. அண்மைக் காலத் தேர்தல்களில் இத்தகைய கள்ள வாக்களிப்பானது வடக்கு - கிழக்கில் மிகப் பகிரங்கமாக நிகழ்ந்தது. இக் கள்ள வாக்களிப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பகிரங்கமாகவே ஈடுபடுத்தப்பட்டனர். அந்த அளவு நிறுவனப் படுத்தப்பட்ட செயற்பாடாக அங்கு கள்ள வாக்களிப்பு மாறியிருந்தது. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்களிப்பில் ஈடுபட்டதன்மூலம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மாறாத கறையைப் பதித்துவிட்டார்களென்று தனது உரையில் தெரிவித்திருந்தார். எத்தனையோ, அறிஞர்களையும் நிபுணர்களையும் உருவாக்கிய யாழ்ப்பாணத்தின் அறிமையம், பேராசிரியர் மனம் வருந்தித் தெரிவித்திருந்தவாறு கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டது. கடந்த பொதுத் தேர்தலிலோ கள்ள வாக்களிப்பென்பது வடக்கு - கிழக்கில் வரலாறு காணாத உச்ச நிலையை அடைந்தது. சர்வதேச கண்காணிப்பாளர்களின் கண்முன்னேயே, சாரி சாரியாக வந்து, சிறுவர்கள் கூட கள்ள வாக்களித்த நிலைமை காணப்பட்டது. சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது அறிக்கையில் வடக்கு - கிழக்குத் தேர்தல்களை முற்றுமுழுதாக நிராகரித்து அவற்றைத் திரும்ப நடத்தும்படி சிபாரிசு செய்தனர் இந்தளவு மோசமான நிலைக்கு தேர்தல்கள் சென்றிருப்பதற்குப் பிரதான காரணம் தேர்தல்களில் எளிதாக ஆள் மாறாட்டம் செய்யக் கூடியதாக இருந்த நிலைமையே. அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவதன் மூலம் ஆள் மாறாட்டத்தைக் கணிசமான அளவு தடுக்க முடியும். இதனால் கள்ள வாக்களிப்பது இனி வருங் காலங்களில் சாத்தியமில்லாமல் போய்விடுமென்ற அச்சம் கள்ள வாக்குகளின் மூலம் தெரிவானவர்களுக்கே உண்டு. அதனால்தான் தமிழர் கூட்டமைப்பினர் இச் சட்டமூலத்தை எதிர்த்தனர். எனினும் பாராளுமன்றத்தில் இச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதேவேளை அனைவருக்கும் அடுத்த ஒரு தேர்தலுக்கு முன்னர் அடையாள அட்டை கிடைப்பதற்கான வழிவகைகளைத் துரிதமாக மேற்கொள்வது அவசியமாகும். அப்போதுதான் இச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கம் எய்தப்படும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும், அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நரன்**

# புலிகள் மீது அதிகரிக்கும் சர்வதேச அழுத்தங்கள்

சர்வதேச பிரசார வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டு புலிகளின் உயர்மட்ட அணியொன்று வன்னியிலிருந்து சென்று இராஜதந்திர சந்திப்புகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே. சர்வதேச நாடுகளின் மத்தியில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள பாரிய அதிருப்தியே இதற்குப் பிரதான காரணமென நம்பக்கூடியதாக உள்ளது. இத்தகைய அதிருப்திகள் விபரீதமான அளவுக்கு வளர்ந்துள்ளதுடன், சர்வதேச நாடுகள் பிரதிகூலமான முடிவுகளுக்குச் செல்ல விழைந்துள்ளதையும் அடுத்தே அவற்றை உடனடியாகத் தணிக்கும் பொருட்டு இக் குழு சென்றுள்ளதாக அறியப்படுகிறது. எனினும் அது அவ்வளவு சுலபமானதாக அமையவில்லை. மாறாக, சர்வதேச நாடுகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், புலிகள் அரசியற் படுகொலைகளையும் சிறுவர் ஆட்சேர்ப்பையும் உடனடியாக நிறுத்தி, அவ்வாறு நிறுத்திவிட்டதாக தமக்கு நிரூபிக்க வேண்டுமென்று இக் குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். சர்வதேச நிலைமை அந்தளவுக்கு இம் முறை மோசமாகியுள்ளது.

இலங்கை இனப் பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் ஈடுபாடு கடந்த ஐந்தாண்டுகளுக்குள் கணிசமான அளவு முனைப்புப் பெற்றுள்ளது. அதற்கு முன்னர் அண்டை நாடான இந்தியாவே இலங்கைப் பிரச்சினையில் அதிகளவு அக்கறை செலுத்தி வந்தது. ஆரம்பத்தில் இந்தியா இலங்கை விவகாரத்தில் மிக நெருக்கமாகச் செயற்பட்டு வந்தது. இந்தியாவின் பிராந்திய அக்கறையும் இதில் இருந்தது. இதை உணர்ந்துகொண்ட சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரத்தில் சற்று விலகியே இருந்து வந்தன. இந்தியாவின் கருத்துக்கே மதிப்புக் கொடுத்து வந்தன.

1987இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா நேரடியாகவே இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இறங்கியது. ஆனால், இலங்கை அச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தத் தவறியது மட்டுமல்லாமல், இந்தியாவிற்கு பலத்த எதிர்ப்பை, புலிகள் தரப்பும் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கமும், அப்போது ஒரு கிளர்ச்சி இயக்கமாக இருந்த ஜே.வி.பி.யும் மும்முனைகளில் மேற்கொண்டன. இந்தக் கசப்பான அநுபவத்துடன் இந்தியா பின்வாங்கிக்கொண்டது. ஆனால், அது அத்துடன் நில்லாமல் இந்திய மண்ணிலேயே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்யும் அளவுக்கு இலங்கையின் தமிழ்த் தீவிரவாதம் சென்றது. இதனால் அது இந்தியாவின் தீராத பகையையும் தேடிக்கொண்டது.

இதையடுத்து உலகில் முதன்முதல் புலிகளைத் தடைசெய்த வெளிநாடாக எமது அண்டை நாடான இந்தியாவே ஆகியது. இத் தடையைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலை தொடர்பான புலனாய்வுக் கண்டுபிடிப்புகளால் இந்திய நீதிமன்றமும் புலிகளைக் குற்றவாளி களாகத் தீர்ப்பளித்து, அதன் உயர்மட்டத் தலைவர்களுக்குப் பிடியாணையும் பிறப்பித்தது. இவர்களைக் கைது செய்வதற்கு சர்வதேச புலனாய்வு நிறுவனமான இன்டபோலது உதவியையும் நாடியது.

அத்துடன் நில்லாது இலங்கை அரசாங்கத்திடம் அவ் வழக்கில் தேடப்படுபவர்களை நாடு கடத்தும்படியும் கோரிக்கை விடுத்தது. இன்றுவரை அக் கோரிக்கையையும் புலிகள் மீதான தடையையும் அது நீடித்துக்கொண்டே வருகிறது.

இருந்தபோதிலும் இத்தகைய விரும்பத் தகாத நிகழ்வுகளுக்குப் பின்னர் இந்தியாவின் நேரடி ஈடுபாடு நிறுத்தப்பட்டது மட்டுமன்றி, ராஜீக ஈடுபாட்டிலும் மாற்றம் ஏற்பட்டது. அது அதன்பின் தலையிடாக் கொள்கை ஒன்றையே கடைப்பிடிக்கத் தொடங்கியது.

இதேவேளை இலங்கையில் நிகழ்ந்து வந்த மும்மரமான யுத்தம் சர்வதேச நாடுகளிலும் பிரதிபலிக்கவே செய்தன. அதிகப்படியான அகதிகள் அங்கே குவியத் தொடங்கினர். இதனால் இலங்கை விவகாரத்தில் அந் நாடுகள் அதிகளவு அக்கறை செலுத்த நேரிட்டது.

இந்தியா மந்தநிலையான பாத்திரத்தை வகிக்க ஆரம்பித்ததையடுத்து சர்வதேச நாடுகள் படிப்படியாக இலங்கையில் தமது ஈடுபாட்டை அதிகரிக்கத் தொடங்கின. முதலில் அவற்றின் மனிதாபிமான செயலணியினரான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு இலங்கையில் பெருமளவு அதிகரித்தது. இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து அவர்களின் செயற்பாட்டுப் பரப்பில் இலங்கையில் நிலவும் அதிகார சக்திகளுடனான தொடர்பாடல்களும் அதிகரித்தன. இவற்றையடுத்து இலங்கையின் நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள் சர்வதேச நாடுகளுக்குத் தாராளமாகக் கிடைக்கத் தொடங்கின.

சம்பந்தப்பட்ட தரப்புகளின் கூற்றுகளுக்குப் புறம்பாக, உண்மையில் என்ன நிகழ்கிறதென்று சுயமாக அனுமானிக்கக்கூடிய அளவுக்கு அவற்றின் வலையமைப்புகள் அமைந்திருந்தன. இத்தகைய நிலையில்தான் இலங்கையில் நிகழ்ந்த சில பாரிய அனர்த்தங்களைத் தொடர்ந்து, அமெரிக்கா புலிகளைச் சர்வதேச பயங்கரவாத இயக்கமென வகையீடுசெய்து தடைசெய்தது. புலிகளைத் தடைசெய்த முதலாவது மேற்குலக நாடாக அமெரிக்காவே அமைந்தது. தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பிரித்தானியாவும் புலிகளைத் தடைசெய்தது.

இதைத் தொடர்ந்து கனடா ஒரு வரையறைக்குட்பட்ட தடையொன்றை மேற்கொண்டது. அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளிலும் இத் தடை அறிமுகமானது.

இத்தகைய பிரதிகூலமான சர்வதேசப் போக்குகளை நிறுத்த வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டது. இத்தகைய போக்குத் தொடருமானால் தற்போது புலிகளுக்கு அதிகளவு நிதியுதவி வழங்கி வரும் புலம்பெயர்ந்த மக்களின் நிதியுதவிகள் சட்டவிரோதமானதாகக் கருதப்பட்டு அது அவர்களின் வெளிநாட்டு வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிவிடுமென்ற காரணத்தால் இந் நிதியுதவிகள் நிறுத்தப்படக்கூடிய ஒரு நிலைமை உணரப்பட்டது. அத்துடன் தடைசெய்யப்பட்ட அமைப்புகளைச் சார்ந்தவர்களென அல்லது அவர்களின் சட்டவிரோதச் செயற்பாட்டுக்கு உதவியவர்களென அடையாளம் காணப் படுபவர்கள், நாடு கடத்தப்படக்கூடிய ஆபத்தும் தலைதூக்கியிருந்தது. அவ்வாறு கணிசமான அளவில் நாடு கடத்தப்பட ஆரம்பித்தால் அது புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்ற நிலைமை இருந்தது.

எனவேதான் இதனைக் கையாளும் பொருட்டு புலிகள் அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. இந் நிலையில் இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு புலிகள் முன் வந்தனர். அதனால் மீண்டும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கான சூழ்நிலை தோன்றியது. இப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று வலியுறுத்தப்பட்டது.

புலிகள் விடயத்தில் இந்தியா எடுத்துக் கொண்டுள்ள நிலைப்பாடு காரணமாக, புலிகளைத் தடைசெய்துள்ள நிலையில் இந்தியாவால் மத்தியஸ்தப் பங்கை வகிக்கும் நிலை இருக்கவில்லை. மேலும் பேச்சுவார்த்தையில் இந்திய மத்தியஸ்தத்தைப் புலிகளும் விரும்பவில்லை. இந்திய மத்தியஸ்தத்தை ஏற்பதற்கு முன்னிபந்தனையாக அவர்கள் தம் மீதுள்ள தடையை நீக்கும்படி கோரினார்கள். இதற்கு இந்தியா சம்மதிக்கவில்லை.

> **ஈ.பி.டி.பி. தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் திசைமாறி, அமெரிக்க தூதுவராலயத்துக்கு முன்னால் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வெடித்துப் பலரைப் பலிகொண்டது. வழமை போலவே புலிகள் இதனை மறுத்தாலும், தற்கொலைத் தாக்குதலில் உதவியாளராகச் செயற்பட்ட பெண்ணொருத்தி இலக்கில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதால் தோல்விகண்ட தற்கொலைத் தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதுதான் என்பதை எடுத்துக்காட்டும் பல தகவல்கள் புலனாய்வுத் துறையினருக்கும் சர்வதேச நாடுகளுக்கும் கிடைத்தன.**

இதனால் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு இந்தியாவைக் கடந்து சர்வதேச மத்தியஸ்தம் ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியம் தோன்றியது. நோர்வே மத்தியஸ்தராகச் செயற்பட ஏற்பாடாகியது. நோர்வேயின் சுபாவம் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்புடையதாக இருந்ததால் இம் மத்தியஸ்தத்துக்கு நோர்வேயை முன்னிறுத்துவது சுலபமாக இருந்தது. எனினும் நோர்வேயின் பின்னணியில் சர்வதேச நாடுகளின் மறைமுகச் செயற்பாடுகள் இருக்கவே செய்தன. குறிப்பாக அமெரிக்காவின் செயற்பாடு இருந்து வந்தது.

இவ்வாறு ஏற்பட்ட சமாதானப் பேச்சுக்களில் புலிகளைப் பொறுத்தவரை பிரதானமான சர்வதேச இலக்குகள் சில அடங்கியிருந்தன. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது, சர்வதேச ரீதியில் புலிகள் பற்றி ஏற்பட்டிருந்த பயங்கரவாதிகளென்ற மதிப்பீட்டை மாற்றஞ் செய்வது புலிகள் மீது சர்வதேச நாடுகள் விதித்திருந்த தடைகளை நீக்க வைப்பது, பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கத்தை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதவர்களாக சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்தி, தமது போராட்டத்துக்கான நியாயாதிக்கத்தை எடுத்துக் காட்டுவது. அவ்வாறான நிலையில் தனி நாடொன்றுக்கான அங்கீகாரத்தை சர்வதேச நாடுகளிடம் ஈட்டிக்கொள்வது என்றவாறு அவர்களின் சர்வதேச இலக்குகள் அமைந்திருந்தன.

இந்த வகையில் புலிகள் ஓரளவு அனுகூலங்களையும் பெற்றுக்கொண்டனர். சர்வதேச ரீதியில் புலிகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற ஸ்தானம் கிடைத்தது. சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்கள் புலிகளின் தலைமையகமான வன்னிக்கும் சென்று புலிகளைச் சந்தித்தனர். இலங்கைக்கான நிதியுதவிகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் புலிகளின் உத்தரவாதங்கள் கோரப்பட்டன.

ஆனாலும் புலிகள் எதிர்பார்த்த அளவு யாவும் நிகழ்ந்துவிடவில்லை. புலிகளை அங்கீகரித்த போதிலும் பேச்சுவார்தையின் முடிவுகளுக்குப் பின்னர்தான் சர்வதேச சமூகம் இறுதிக் கணிப்பீட்டைச் செய்யத் தயாராக இருந்தது. மாறாக, ஆரம்பத்திலேயே அல்ல. இதனால் புலிகள் எதிர்பார்த்தவாறு சர்வதேசத் தடைகள் எவையும் நீக்கப்படவில்லை.

இதில் அமெரிக்கா போன்ற நாடுகள் புலிகளிடம் வன்முறை மார்க்கத்தைக் கைவிடவும் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடவும், ஐக்கிய இலங்கைக்குள்ளே சமாதானத் தீர்வு காண முன்வரவும் தெளிவான உத்தரவாதங்களை நேரடியாகவே கோரின. ஆனால் புலிகளால் அதற்குச் சாதகமான பதிலளிக்க முடியவில்லை. அமெரிக்காவின் இத்தகைய நிர்ப்பந்தத்தைத் தொடர்து புலிகளிடத்தே சர்வதேச சமூகம் குறித்த சந்தேகம் எழத் தொடங்கியது. ஒரு புறத்தில் அன்ரன் பாலசிங்கம் போன்றவர்கள் சர்வதேச சமூகத்திற்கு இணக்கமாகச் செயற்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தனர். இந்த எண்ணத்துடன்தான் பேச்சுவார்த்தையில் கோரிக்கையை முன்வைத்து சமஷ்டித் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டதாகச் சர்வதேச நாடுகளுக்குக் காண்பிக்க முனைந்தனர். ஆனால், புலிகள் இதற்கு முழு அளவில் உடன்படவில்லை. அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடாத நிலையிலேயே சமஷ்டித் தீர்வொன்றை முன்வைப்பதாகக் கருதியிருந்தார்கள். அதாவது தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டு சமஷ்டிக்கு வந்ததாகக் கூறுவதற்கும், சமஷ்டித் தீர்வு காணப்பட்டால் அதன் பின் தமிழீழத்தைக் கைவிடுவதாகக் கூறுவற்கும் பாரிய வித்தியாசம் இருந்தது. மேலும் அன்ரன் பாலசிங்கம் இன்னுமொரு படி சென்று தமிழீழமென்ற சொல் ஒரு நிலப் பகுதியையே குறிப்பதாகவும் அது சமஷ்டிக்குள்ளும் அடங்குமென்றும் வியாக்கியானம் கொடுத்திருந்தார். ஆனால், உண்மையில் புலிகளின் கருத்துணர்வில் தமிழீழம் என்பது தனிநாடொன்றையே குறித்து நின்றது. பாலசிங்கம் சர்வதேச சமூகத்துக்கு சில சொல்லாடல்களால் வேறு பிம்பமொன்றைக் கற்பிக்க முனைந்திருந்தார்.

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

# படுகொலைகள் ஒரு பார்வையும் சர்வதேச கண்டனமும்

சென்ற வாரத் தொடர்ச்சி......

அலசுவது

**- மதியூகி -**

சமாதான முயற்சிகள் இழுபறி நிலையைத் தோற்றுவித்துள்ளன. யுத்தம் தன் கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு ஆயத்தமாக இருக்கிறது என்று எங்கள் பத்திரிகை எழுத்தாளர்கள் அறைகூவிக் கொண்டிருக்கையில், எந்தப் பக்கமிருந்து யுத்தம் ஆரம்பிக்கப்படும் என்பதை மக்களும் சர்வதேச சமூகமும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தனர். இந்த இடைவெளியில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை அரசியல் படுகொலை செய்யும் நிழல் யுத்தம் நடத்தப்பட்டது. நிராயுதபாணிகளாக நிற்பவர்களை ஆயுதம் கொண்டு தாக்கிவிட்டு தலைமறைவாகிப் போவது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. கொலையாளி பிடிபடாவிட்டாலும் கொலை செய்யப்பட்ட விதமும் கொலையாளிகள் குறித்துக் கிடைக்கும் தகவல்களும் புலிகளே மேற்படிக் கொலைகளைச் செய்தார்கள் என்று சந்தேகமின்றி ஊர்ஜிதமானது. ஒரு சில கொலைகளைப் புலிகள் நேரடியாக மறுத்தனர். சிலவற்றை ஏனைய கட்சிகளுக்குள்ளேயே ஏற்பட்ட குழப்பம் காரணமான கொலைகள் என்றும் கூறிவந்தனர். இவை இரண்டுமே சர்வதேசத்துக்கு சரியான வாதங்களாக எடுபடவில்லை. என்னதான் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டபோதும் குறிவைக்கப்பட்ட சிலரை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கொலை செய்வது என்ற நோக்கத்திலிருந்து புலிகள் பின்வாங்கவில்லை. தடாலடியாக அடுத்தடுத்து அரசியல் படுகொலைகள் நடந்தேறின.

மறுபுறத்தே இதே படுகொலைகளை அரசு சர்வதேசத்தின்முன் தமது வாதங்களில் நியாயமிருப்பதாக வாதிடவும் செய்தது. அரசின் இந் நிலைப்பாடு எதிர்பார்த்ததை விடவும் சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களிடமும் உதவி வழங்கும் நாடுகளிடமும் கொண்டுசேர்க்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் புலிகளின் சர்வதேச ஆதரவாளர்களால் படுகொலைகளினால் புலிகளுக்கு ஏற்படக்கூடிய பாதகநிலை குறித்து விளக்கிக் கூறப்பட்டது.


ஆகவே, இறுகிவரும் இந்தச் சூழலில் படுகொலைகளுக்குப் பின்னரான சர்வதேச நாடித்துடிப்பு எவ்வாறு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்காகவும், சமாதான முயற்சிகளில் புலிகள் இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை சர்வதேசத்தின் கவனத்துக்கு உணர்த்துவதற்காகவுமே தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் குழு ஜெனிவாவிற்குப் பயணமானது. இவர்களுடன் இணைந்துகொள்ள அன்ரன் பாலசிங்கமும் தனது துணைவியாருடன் ஜெனிவாவிற்கு வருகை தந்திருந்தார்.

இக் குழுவினரை முதலில் சந்தித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரான விதார் ஹெல்கீசன், படுகொலைகளைக் கண்டிப்பதாகவும், இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அழுத்திக் கூறியுள்ளார். புலிகளுடனான சந்திப்பொன்றில் ஹெல்கீசன் இவ்வாறு கண்டனம் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். இதற்கு அடுத்து நடந்த சந்திப்புகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் ஆகியோர் புலிகளைச் சந்தித்தபோது, நடைபெற்று வரும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், அவற்றை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளதோடு, சிறுவர்கள் படைகளுக்கு சேர்க்கப்படுவதையும் கண்டித்துள்ளனர். ஆக, இலங்கையிலிருந்து கற்பனைபண்ணிக்கொண்டு சென்று எதையும் சாதிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. இலங்கையில் நடக்கும் விடயங்கள் சர்வதேச சமூகத்துக்குத் தெரியாது என்று கற்பனைக் குதிரை விரட்டிக் கொண்டிருந்தவர்களின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது. கொலைகளையும், வன்முறைகளையும் ஆரம்பத்திலேயே கண்டிக்கத் தவறிய ஊடகவியலாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள் குறித்தும் பலத்த சந்தேகங்களும் விவாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவற்றின் தாக்கங்கள் இப்போது நேரடியாகவே புலிகளைச் சங்கடத்துக்குள் தள்ளிவிட்டுள்ளபோதும், மாற்றுக் கருத்துக் கொண்டோர் மீதான கொலை அச்சுறுத்தலும், கொலைக்கான திட்டமிடல்களும் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கிடையே மட்டக்களப்பில் பிரபா அணி உறுப்பினர் ஒருவரை, கருணா அணி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்ல, அவரை அதிரடிப்படை சுட்டுக் கொன்று விட்டதாகக் கூறப்பட்டது. அதன் பின்னும் கருணா அணியினர் மீதான தாக்குதல்கள் நின்றபாடில்லை. இங்கே கொல்லப்படுவது யார் என்பதல்ல முக்கியம், கொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதும், அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்பதுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எவரும் எவர் மீதும் புரியும் கொலையை நியாயப்படுத்தவோ, மௌனித்துக் கொண்டிருக்கவோ முடியாது. தேசம் தாண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த அரசியல் படுகொலைகளைப் பற்றிப் போன வாரம் எழுதப்பட்டது. அதன் தொடர்ச்சியை இனி....

## படுகொலை - 05



சிவகுமார்

செப்டெம்பர் 18ஆம் திகதி ஈ.பி.டி.பி.யின் மற்றுமொரு முக்கியஸ்தரான பவான் என்று அழைக்கப்படும் தம்பித்துரை சிவகுமார் சுடப்பட்டார். ஈ.பி.டி.பி.யின் ஆரம்பகால உறுப்பினரான இவர், யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டபோது அநாதரவாகப் புத்தளம் வந்து சேர்ந்தவர்களைப் பராமரித்ததோடு, அவர்களுக்கான அவசரத் தேவைகளை நிவர்த்திக்கும் வேலைத்திட்டத்தைச் செய்வதற்காக புத்தளத்தில் அலுவலகம் அமைத்து, அதன் அமைப்பாளராகச் சேவையாற்றியவர். யாழ். மாவட்டத்தின் பிரதி அமைப்பாளர்களில் ஒருவராகவும் இருந்தவர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் போட்டியிட்டவர். இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையுமானவர்.

சம்பவ தினம் தனது இரண்டாவது மகளுடன் சைக்கிளில் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது தில்லையடியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலிகளால் சுடப்பட்டார். குழந்தையோடு குப்புற விழுந்து உயிர் நீத்தார். விவரம் அறியாமல் அழுதுகொண்டிருந்த பிள்ளையிடம் கொலையாளிகள், அப்பா செத்திட்டார், அம்மாட்ட சொல்லு" என்று கூறியுள்ளார்கள் இதுபற்றிக் கூறும்போது, அந்த மாமாமார் தலைக் கவசத்தோடு இருந்ததால் அடையாளம் தெரியாது என்று பிள்ளை சொல்கிறது. பின்னர் இவரது பூதவுடல் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு, நோர்வே தூதரகத்தின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இவரது இறுதிக் கிரியைகள் 21ஆம் திகதி நடைபெற்றன.

## படுகொலை - 06

செப்டெம்பர் 23ஆம் நாள். ஈ.பி.டி.பி.யின் மற்றுமொரு முக்கியஸ்தரான சிங்கம் என அழைக்கப்படும் சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம், கொழும்பு வெள்ளவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலிகளால் சுடப்பட்டார். ஈ.பி.டி.பி.யின் ஆரம்ப கால உறுப்பினரும், முன்னாள் மானிப்பாய் பிரதேச சபையின் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கடந்த கால வெற்றிகளில் மிக அர்ப்பணிப்போடு செயலாற்றியவருமான மூன்று பிள்ளைகளின் தந்தையுமாவார். சம்பவ தினம் வெளிநாட்டிலிருந்து நண்பரொருவர் பணம் அனுப்பியிருப்பதாகவும், அதைக் கொடுக்க வந்திருப்பவர்களாகவும் கூறிய இரு புலிகள், வீட்டுக்கு வந்த இவரிடம் கையொப்பம் வாங்கிவிட்டு பணத்தை எடுப்பதாகக் கூறி, பைக்குள் கையை விட்டுத் துப்பாக்கியை எடுத்து மனைவிக்கு முன்பாகவே தலையில் சுட்டனர். கணவனின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் மனைவி பாய்ந்து தடுத்தார்.


வர்ணகுலசிங்கம்,

அவரது கையிலும் ஒரு சூடு பட்டது. மனைவியின் மடியில் இரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்து உயிர் நீத்தார். இவரது புகழுடல் நோர்வே தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல் வைக்கப்பட்டு நீதி கேட்கப்பட்டது. பின்னர், படுகொலையைக் கண்டிப்பதாகவும், அதுகுறித்து புலிகளுடன் பேசப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டதையடுத்து கொட்டும் மழையிலும் சுமார் மூன்று மணிநேரத்துக்குப் பின்னர் புகழுடல் மலர்ச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன. இது 27ஆம் திகதி நடந்து கொண்டிருக்கையில் மற்றுமொரு சம்பவம்.....

## படுகொலை - 07

செப்டெம்பர் 27ஆம் திகதி ஈ.பி.டி.பி.யினரின் தீவிர ஆதரவுப் போக்குடையவரும் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் முக்கியஸ்தருமான வல்லி சுந்தரம் (வயது 61) என்பவர் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது, மோட்டார் சைக்கிளில்


வல்லி சுந்தரம்

வந்த புலிகளால் சுடப்பட்டார்.

இவர் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளில் அர்ப்பணிப்போடு உழைத்தவரும் முன்னாள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் அங்கத்தவருமாவார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த முறையும் அதற்கு முந்தைய தடவையும் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர். எந்தக் கருத்தையும் வெளிப்படையாகப் பேசும் பண்புள்ளவர் என்பதால் மக்களின் விருப்பத்தை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. வயதான காலத்தில் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்த இவர், மாற்றுக் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பவராகவும் அதற்காக மக்கள் மத்தியில் துணிந்து வேலை செய்பவராகவும் திகழ்ந்தார். இவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு ஓடியவர்களில் ஒருவரை இராணுவத்தினர் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததும், அவரை அப்பாவி என்றும், உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் யாழில் இயங்கும் மனித உரிமைவாதிகள் பொலிஸாரிடம் தர்க்கப்பட்டதும் தெரிந்ததே. இச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் கூறும்போது, "அரசியல் எதிராளிகள், துரோகிகள் என்ற போர்வையில் கொலை செய்யப்படும்போது, அதை ஒரு மனித உரிமை மீறலாக ஒரு வார்த்தை பேசாத மனித உரிமையாளர்கள், கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவருக்காக அடுத்த விநாடியே பொங்கி எழுந்தார்களே இப்போது தெரிகிறது எத்தனை கறுப்பு ஆடுகள் மக்களுக்குள்ள உலாவுதென்று" என்று நிகழ்காலத்தை விவரித்தார். குற்றவாளிகளை நீதிமன்றங்கள் இனங்காட்டட்டும். மக்களின் பெயரால் மக்களின் மீது திணிக்கப்படுகின்ற கொலைகளையும், வன்முறைகளையும், பழிவாங்கல்களையும் மக்களே நிராகரித்துப் பதிலளிக்க வேண்டும்.

---

## அதிரடி அய்யாத்துரை



**ரெண்டெழுத்தார்ர** வெளிநாட்டுப் பிரசாரக் குழுவுக்கு தமிழானவரெல்லே தலைவர். வழமையா லண்டன் சிங்கத்தார் தான் நடுநாயகமாய் நிண்டு ஆங்கிலத்திலயும் தமிழிலயும் அசத்தித் தள்ளிறவர். ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கும் அவர்தான் தலைமை தாங்கினவர். இப்ப ஏதோ கிரக மாற்றம் நடந்திருக்குது போல. அரசியலுக்குத் தான், ஆயுதத்துக்குத் தலைவர் எண்டு அவர் இறுமாந்திருந்ததெல்லாம் வெறுமாப்பாய்ப் போயிடும் போல கிடக்குது. தமிழானவற்ர தலைமைக்குக் கீழதான் அவருக்கு இந்தமுறை இடங் குடுக்கப்பட்டிருக்கு. பாவம். பொறுக்கேலாமல் வருத்தத்தைச் சாட்டிக்கொண்டு வீட்ட திரும்பி விட்டாராம். சிங்கத்தின் தேகம் பழுதுபட்டதால சீற்றம் குறைஞ்சிட்டுதெண்டு நினைச்சிட்டினம் போல.

"**வெளிநாட்டுக்கெண்டு** வெளியால விட்டால் பெடியள் பழுதாகிவிடுவாங்கள். கருணாவையும் வெளியால விட்டு, பெரிய பெரிய கூட்டமெல்லாத்திலயும் பெருமையாப் பேச விட்ட பிறகுதான் பிளவு வந்தது. இவையால பிளவெண்டு வராட்டாலும் மனதில ஏதும் கசிவுகள் வந்திடக்கூடும். வெளியுலகத்தில வீசிற சுதந்திரக் காத்தும், சௌகரிய மோகமும் போராட்ட உணர்வை மழுங்கடிச்சிடும். இனியுஞ் சண்டைக்குப் போனால் இதெல்லாத்தையும் இழந்திடுவோமெண்டொரு சலனம் முகத்தில தெரியாட்டாலும் மனத்தில படிஞ்சிடும். அதோட வெளிநாடுகளின்ர அழுத்தங்களுக்குப் பணிஞ்சு, தாங்கள் ரெடி தலைமைதான் பிடிவாதஞ் செய்யுதெண்டு தனியக் கதைக்கேக்க மாத்தியும் கயித்தக் குடுப்பினம். எந்த வழியால சுத்தி வந்தும் இப்ப சண்டைக்குப் போகக் கூடாதெண்டொரு காரணத் தைக் கற்பிச்சுக்கொண்டு தாங்கள் சொகுசாயிருக் கத்தான் தெண்டிப்பினம்" இப்பிடிச் சொன்னாராம் கனடாவில இருக்கிற ரெண்டெழுத்தாருக்கு ஆதரவான ஒரு முக்கிய போதகர். இது உண்மையோ பொய்யோ, அவற்ர எண்ணமென்ன பாத்தீங்களோ? தாங்கள் உலக இன்பத்தை அநுபவிக்க வேணும். அதுக்காகப் பெடியள் மட்டும் அடிபட்டுக்கொண்டே இருக்க வேணும். அப்பதானே அசைலங்கள் கிடைக்கும். என்ன சுயநலமப்பா இது!

**ரெண்டெழுத்தார்ர** வெளிநாட்டுக் குழுவில அங்கம் வகிச்ச முன்னாள் ஈரோஸ் தலைவர் ஒருத்தர், அங்கயிருக்கிற தன்ர பழய சகாக்களைச் சந்திச்சுக் கதைச்ச நேரம், கேள்விக் கணைகளால நல்லா நொந்து போனாராம். சின்ன பாலாவுக்கு நடந்த கதிக்கு நியாயப்படுத்த ஏலாமல் திக்குமுக்காடிப் போனாராம். கடைசியாச் சொன்னாராம், "நானென்னடாப்பா செய்ய, நல்லா மாட்டுப்பட்டிட்டன்" எண்டு. இதக் கேட்ட அவற்ர பழய கூட்டாளியொருத்தர் சொன்னார், அவர் நல்ல நாசூக்கான மனிசர். ஆபத்தில மாட்டிக்கொண்டன் பாவத்தில பங்கில்லையெண்டு கை விரிச்சுப் போட்டார். எந்த வழி பிழைச்சாலும் தான் தப்பிக்க யன்னலொண்டத் திறந்துதான் வைச்சிருப்பாரெண்டு. வெல் டன் சார்!

**இந்தமுறை** ரெண்டெழுத்தாற்ர வெளிநாட்டுப் பயணம் பெரிசாக் களைகட்ட யில்லையாம். ஆரவாரத்தை விட நெருக்கு வாரந்தான் அதிகமாம். அரசியல் படுகொலைகள், சிறுவர் திரட்டல்களைக் கைவிட்டாச்செண்டத நிருபிச்சுக் காட்டச்சொல்லி வெளிநாட்டு அரசாங்கங்களும் மனித உரிமை அமைப்புகளும் நேருக்கு நேராவே சொல்லியிருக்கினமாம். தங்களுக்குச் சம்பந்தமில்லையெண்டு திரும்பத் திரும்பச் சொன்னாலும் அங்க நம்பிற நிலைமை இல்லையாம். இதுவரை காலமும் கொஞ்சம் நசியல் போக்கோட நடந்துவந்த நோர்வே கூடக் கடுப்பாப் பேசியிருக்காம். இதுக்கிடையில எங்கயோயிருந்த டென்மார்க் தானும் தடைசெய்யப் போறதாய்ச் சொல்லி, ஐரோப்பிய யூனியனையும் தடைசெய்ய நிர்ப்பந்திக்குது. நிலைமை நல்லாயில்லைப் பாருங்கோ. போன தடவை இந்தியாவைப் பகைச்சிட்டம். பிறகு அமெரிக்கா, பிரிட்டன் எண்டு ஒண்டொண்டாத் தடைசெய்யத் துடங்கி சமாதானப் பேச்சோட இடைநிறுத்தியிருந்திச்சினம். இப்ப படுகொலைகள் சூடுபிடிக்க, திரும்பவும் வெளிநாடுகள் குழம்பத் தொடங்கிட்டுது. என்னாகப் போகுதோ, ஏதாகப் போகுதோ?

**ஜனாதிபதி** கூட்டின அரசியல் ஆலோசனைச் சபை பேச்சுவார்த்தையைக் குழப்பிற சதியெண்டு கொதிச்சுத் தள்ளியிருக்கிறார் சம்பந்தன். ஆலோசனைகளைப் பெறுகிறதில என்ன தப்பு, உங்களிட்டயும்தானே ரெண்டெழுத்தார் ஆலோசனை கேக்கினம் எண்டு கேட்டால் முழுசுறாராம். இதே சம்பந்தனார்தான் முன்னம் நீலனாரோட முன்னால நிண்டு ஜனாதிபதியின்ர பழய அரசியலமைப்புச் சீர்திருத்த ஆலோசனைகளைத் தயாரிச்சவர். தயாரிச்ச கையோட, அதை வரவேற்று அறிக்கையும் விட்டவர். அதை ரெண்டெழுத்தார் நிராகரிச்சதுக்குப் பரிகாரமா குண்டு துளைக்காத காரொண்டையும் ஜனாதிபதியின்ர கலைப் பிடிச்சு வாங்கிக் கொண்டவர். இன்னும் அதிலதான் உலா வந்தபடியிருக்கிறார். இருந்தும் இபபிடிப் பேசிறாரேயெண்டு கேட்டால் அதுதான் அரசியலெண்டு சின்னக் குழந்தையும் பதில் சொல்லும். ஆனால் பாருங்கோ, அரசியலுக்குள்ள ஓடுற அரசியலெண்டும் ஒண்டு இருக்கு. அதென்ன தெரியுமோ? இப்ப கஜேந்திரகுமாருக்கும் ஜோசெப்பாருக்கும் குடுக்கிற ஸ்தானம் சம்பந்தனாருக்கு இல்லையாம். அமெரிக்கப் பயணத்தில கிடைச்ச கறுத்தக் கறைக்குப் பிறகு நல்லா இறங்கிப் போட்டாராம் கணிப்பில. அதைத் திரும்ப எட்டிப் பிடிக்கத்தான் இப்ப வில்லங்கத்துக்குக் கத்திப் பாக்கிறாராம். ட்ரை, ட்ரை, ட்ரை பெஸ்ட்!

**தேர்தலுக்கு** ஐடென்டிக் கார்ட் கட்டாய மெண்டு சட்டம் பாஸாகியிருக்கு. இனித்தான் எங்கட கள்ள வோட்டுக்காறருக்கு வில்லங்கமிருக்கு. இந்த ஐடென்டிக் கார்ட் சட்டத்தை எப்பிடியெண்டாலும் முறியடிக்கிறதுக்கு எங்கட கூட்டமைப்புக்காறர் முக்கி முனைஞ்சவை. மலையகக் கட்சிகளைப் பிடிச்சு, அவைக்கு ஐடென்டிக் கார்ட் பிரச்சினை யாயிருக்குமெண்டு பயங்காட்டி, தங்கட திட்டத்துக்க விழுத்த ட்ரைபண்ணிப் பாத்திச்சினம். ஆனால் அவை மசியேல்லை. எப்பிடியோ, ஆள் மாறாட்டம் நடக்காமல் உறுதிசெய்ய இப்பிடியெண்டாலும் ஒரு வழி பிறந்தது நல்லது. நீதியான தேர்தலுக்கான பவ்ரல் அமைப்பு இந்தச் சட்டத்தை பாஸாக்க உதவின எம்பிகளுக்கு வாழ்த்துச் சொல்லியிருக்கு. ஆனால் அடுத்த விசயந்தான் முக்கியம். அனைவருக்கும் ஐடென்டிக் கார்ட் கிடைக்கிறதுக்குத் துரித வழி பண்ண வேணும். இல்லாட்டால் இந்தச் சட்டம் வந்து அர்த்தமில்லாமல் போயிடும்.

**ஜனாதிபதியின்ர** பதவிக் காலம் இன்னும் ஒரு வருடத்தால நீடிக்கப் போகுதெண்ட செய்தி நம்மட கூட்டமைப்பு எம்.பிமாருக்கு புண்ணில புளி கரைச்ச மாதிரி இருக்குதாம். அதிலையெண்டாலும் ஒரு குழப்பம் வந்து ஆட்சி மாறாதோவெண்டு கணக்குப் போட்டிருந்தவையாம். ஜனாதிபதி தேர்தல் நடந்த நாளிலயிருந்து பாத்தால் அடுத்த வருசம் பதவி முடியுது. ஆனால் அவவின்ர போன பதவிக் காலம் முடியிற நாளிலயிருந்து பாத்தால் இன்னும் ஒரு வருடம் கூடுது. நீதிமன்றம் எதைச் சரியெண்டு எடுக்குதோ பொறுத்துப் பார்த்தால்தான் தெரியும்.

# இளைஞர்களின் உயிர் குடிக்கும் போதைப் பொருள்!

நம் நாட்டின் முதுகெலும்புகளான இளைஞர்களின் சக்தி இளைஞர்களுக்கே தெரியவில்லை. இன்றைய இளைஞர்கள் ஏன் போதைப் பொருட்களை நாடுகின்றனர். அவர்கள் வாழ்வில் அவர்கள் அநுபவிப்பவை எவை? இக்கால இளைஞர்கள் இன்று பல காரணிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவற்றில் இருந்து விடுதலை பெற போதைப் பொருள்களை நாடுகின்றனர். இவற்றினால் ஏற்படும் பக்கவிளைவுகளை இவர்களில் பலர் அறிந்திருப்பதில்லை. இவற்றுக்கு அடிமையான பிறகுதான் இதனால் ஏற்படும் விளைவுகளை அறிகின்றனர், சந்திக்கின்றனர். அதனால் இப் பழக்கத்தில் விடுபட முயன்றாலும் முடிவதில்லை. உட்கொள்ளும்போது மனதிலும், உடலிலும், வாழ்விலும் மாற்றங்களை உண்டு பண்ணும் இரசாயனப் பொருள்களே போதைப் பொருளாகும். இன்று பல வகையான போதைப் பொருட்கள் பாவனையில் உள்ளன. இவற்றில் சில வைத்தியத் துறையில் பாவிக்கப்பட்டவை, பாவிக்கப் படுபவை.

இக்கால இளைஞர்கள் ஆறு வகையான போதைப் பொருட்களைப் பாவிக்கின்றனர். அவை யாவன காந்தமூட்டிகள், தியக்கிகள், மயக்கிகள், எழுச்சியூட்டிகள், நித்திரையூட்டிகள் எனப் பல விதமானவை. இவை மன அமைதியையும் உண்டுபண்ணும். ஏக்கம், மன உளைவு ஆகியவற்றைக் குறைக்கவும் பயன்படுத்தப்படும் பொருட்களாகும். இளைஞர்கள் தமது வீடுகளில் பாடசாலைகளில், ஏனைய பொது இடங்களில், வேலைத்தளங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துப் பார்ப்போமானால், இவ் இளைஞர்களின் நிலை பரிதாபத்துக்குக்குரியதே! இயந்திரமயமான இவ்வுலகில் இளைஞர்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்படாது உள்ளன. இதற்குக் காரணம் பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்பவர்களாக இருக்கின்றமையும், இவர்கள் தங்களது சொந்தப் பிரச்சினை பற்றியே தங்கள் சிந்தனையை வைத்துள்ளனர். அடுத்து இன்றைய மாணவர்கள் அதிகளவில் போதைப் பொருள் அடிமைகளாகவுள்ளனர். பாடசாலைகளில் இம் மாணவர்களுடன் ஆசிரியர்கள் நடந்து கொள்ளும் முறையும் ஒரு காரணமாக அமைகின்றது.

இதற்கு எம் நாடும் ஒரு நல்ல உதாரணமாகும். பொறுப்பற்ற ஆசிரியர்களினால் இம் மாணவர் சமுதாயம் சிதைக்கப்படுகின்றது. மேலும் இன்று படித்தும் வேலையில்லாமல் உள்ள இளைஞர்களை நோக்கி குடும்பத்தினர் காட்டும் வெறுப்பு, சமுதாயம் இவர்களை மதியாமைப் பருவக் கோளாறுகளான தன்னடக்க கட்டுப்பாடற்ற காதல் தோல்விகளினால் இவர்கள் சொல்ல முடியாத துயரத்தை அநுபவிக்கின்றனர். இதனால் இவர்களும் இவ்வுலக வாழ்வை வெறுக்கின்றனர்.

சமூகமும் இவர்களில் வாழ்வை பார்த்து ஒதுங்கும் அல்லது வெறுக்கும். இந் நிலையிலும் இவர்கள் கண்கண்ட நிவாரணமாகப் போதைப் பொருள்களை உடனே நாடிவிடுகின்றனர்.

அது மட்டுமா? படித்த சமுதாயத்தினரால் மேற்கொள்ளப்படும் பகிடிவதையிலும் கூட மது அருந்துவது, புகைபிடித்தல் போன்ற விடயங்களை ஒரு சிலர் விடாப்பிடியாகச் சிக்கித் தவிக்கின்றமையும் உண்மையல்லவா! இவ்வாறான நிலைமையினால் தனது உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியை இழந்து பல்வேறுபட்ட நோய்களில் சிக்கித் தவிக்கின்றனர். இவற்றில் ஒன்று எயிட்ஸ் நோயும் கூட. மேலும் பல நோய்கள் இலகுவாகப் பற்றிக்கொள்ளக் காத்திருக்கின்றன. இவ்வழியில் வெகு விரைவில் மரணத்தையும் தளுவ வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும் அல்லவா? புகைப் பிடித்தல் பழக்கம் உள்ளவர்களுக்கு சுவாசப்பை புற்றுநோய் ஏற்படுகின்றது. அத்துடன் புகையிலையிலுள்ள நிக்கொட்டின் இரத்தக் குழாய்களான நாடிகளில் கொலஸ்ரோல் படிவதை ஊக்குவிக்கின்றது. இதனால் பல மாரடைப்புப் போன்ற நோய்களையும் ஏற்படுத்தும்.

இது மட்டுமா? மதுப் பழக்கம் உள்ளவர்களுக்குப் பாலியல் பலவீனம், கோபம், சண்டை பிடித்தல், வெட்கமில்லாத்தன்மை என்பவை ஏற்படுகின்றது. இப் பழக்கத்தினால் இளைஞர்கள் தங்களின் நற்பெயர் களைக் கெடுத்துவிடுகின்றனர். மதுவானது அதிகளவு மூளையையே பாதிக்கின்றது. இதனால் இவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர். பாலியல் குற்றச் செயல்களைப் புரிகின்றனர். அத்துடன் ஈரற்குழியங்களில் அழிவு ஏற்பட்டு ஈரல் சிதைக்கப்பட்டு இதன் தொழிற்பாடுகள் நிறுத்தப்படுகின்றது. எனவே மேற்கூறப்பட்டவாறு இக்கால இளைஞர்கள் போதைப் பொருட்களில் சிக்குண்டு தமது நல்வாழ்வை அழித்துக்கொள்ளாமல் தனக்கும் தனது குடும்பத்திற்கும் தமது சமூகத்திற்கும் இதைவிட மேலாக நம் நாட்டுக்கும் பயனுள்ள பிள்ளையாக வாழ வேண்டும் என்பது எனது அளவற்ற மன வாஞ்சி.

**ஜே.ஜேசுதாஸ்,**
**வெலிஓயா, ஹட்டன்.**


## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825,00940777488219. Balu Sothidar @ hotmail.com

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



## www.athirady.com

விரைவில் ஆரம்பமாகும் புதிய இணையத்தளம்
www.athirady.com

உண்மை, நடுநிலை, அஞ்சாமை

இலங்கை, இந்திய செய்திகளையும் மற்றும் அனைத்துத் தமிழ்த் தரப்புகளின் கருத்துக்களையும் தாங்கி வெளிவருகின்றது இவ் இணையத்தளம்

ஈமெயில் முகவரி:-
athirady@yahoo.com

குறிப்பு:- மேற்படி இணையத்தளத்திற்கு உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றை ஈமெயில் மூலம் அனுப்பி வைக்கவும்.



## தபால் மூலம் தையற் கலை பெயின்ரிங்

திறமை வாய்ந்த டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை, பெயின்ரிங் வகுப்புக்கள் நடாத்தப்படுகிறது. 3 மாத பயிற்சியின் பின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். உடனே முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 066-2231019
திருமதி - சித்தி காமிலா ராபி, 5/1 போமலுவ ரோட், மாததளை.





## சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
**10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.**



Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

## மலையாள மாந்திரீக சக்தி
## கை கண்ட பலன் பெற





பேராசிரியர்
கருணாகரபூஷணம்
உலக மலையாள மாந்திரீக
ஜோதிட சக்கரவர்த்தி

எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்






**சிவகுமார் வத்தளை!**

மதிப்பிற்கும் பெருமைக்கும் வணக்கத்துக்கும் உரிய சாமி ஐயா அவர்குகளுக்கு எனது அக்கா மகளை விடுமுறைக்காக மட்டக்களப்பின் ஆச்சி வீட்டில் கொண்டு போய் விட்டிருந்த நேரத்தில் அங்க அவர் ஒருவரோடு பழகி வீட்டை விட்டு போய்விட்டார். அந்த சமயத்தில் தங்களிடம் வந்து எனது அக்கா மகளை (விஜயகுமாரி) மீட்டுதரும்படியும் காதலை விட்டு எங்கள் வசம் வரவேண்டும் என்று தங்களிடம் வேண்டி பரிகாரம் செய்து கொண்டதின்பேரில் ஐயாவின் அருள்சக்தியாலும் துர்க்கையின் ஆசீர்வாதத்தாலும் எனது அக்கா மகள் விஜயகுமாரி எந்தகுறையுமில்லாமல் நல்லபடியாக வீடு வந்து சேர்ந்துள்ளார். தனது காதலையும் மறந்து நல்லபடியாக எங்கள் சொல் கேட்டு நலமாக உள்ளார் என்பதை தங்களுக்கு பல ஆயிரம் நன்றிக்கடன் நானும் எனது குடும்பத்தாரும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி


**சந்திரன் இங்கிலாந்து!**

திரு ஐயா அவர்களுக்கு
நான் திருமதி ஆனந்தி ரண சந்திரன் எழுதுவது ஐயா நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம் தயவு செய்து எந்த காரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டிய நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கி விடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.

**நாகம்மா திருக்கோணமலை**

கௌரவத்திற்குரிய சாமி ஐயா அவர்களே பலகோடி வணக்கத்துடன் நான் உங்களுக்கு இந்த கடிதத்தை எழுதுகின்றேன். மார்கழி மாதம் 2003ம் ஆண்டு எனது கணவனின் நேரங்காரணமாக தாங்களிடம் ஆசீர்வாதம் கேட்டு வந்த போது எந்த வெளிநாட்டு பயணம் தடைபட்டு கொண்டிருப்பதை தங்களிடம் சொன்னபோது அதற்கு பயப்படாதே என்று எனக்கு அச்சார கூடு கட்டி விட்டீர்களா ஐயா ஆனால் தாங்கள் சொன்ன தினத்தில் நாளை 08.02.2004 அதிகாலை 4.00மணிக்கு எயாபோட் போகின்றேன் ஐயா. உங்களுக்கு மிகுந்த நன்றி கூறி விடை பெறுகின்றேன். வெளிநாடு போய் சுபீட்ச வாழ்வு கிட்ட எனக்கு ஆசீர்வதியுங்கள் ஐயா

நன்றி

**கமலகுமாரி மட்டக்களப்பு!**

கனம் மேன்மைதாங்கிய பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களுக்கு கமலகுமாரி எழுதிக்கொள்வது!

ஐயா எனது தொழில் அதிகாரிகளின் பிரச்சினைகள் காரணமாக சகோதரன் சாமித்தம்பியின் அறிமுகத்துடன் தங்களிடம் ஆலோசனை கேட்டு வந்தபோது அன்னை துணையுடன் அருட் கடாச்சத்து பரிகாரத்தின் பின் தொழில் அதிகாரிகளின் எதிரி தொல்லை நீங்கி சுபீட்சத்துடன் தொழில் செய்கின்றேன் என்பதை நன்றியுடன் தெரியத்தருவதோடு மேலும் எனக்குள்ள சிறுசிறு பிரச்சினைகளுக்கு ஆசீர்வாதம் தருவீராக என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வராஜ் கொழும்பு-13**

அருள்ஞானசித்தர் ஜோதிட பக்குவ இளமை ஐயா அவர்களுக்கு எனது மகள் ராதிகாவின் ஜாதகத்தை தங்களிடம் கொடுத்து கனித்து பார்த்து அவளின் திருமண விடயம் கேட்ட போது 21-5-2004க்குள் திருமண வாய்ப்பு உண்டு அதுவும் வெளிநாட்டு வரன் தான் அமையும் என்று ஆணித்தரமாக கூறினீர்கள். ஐயா நாங்கள் முற்றிலும் எதிர்ப்பார்க்காத விதமாக ஐயா குறிப்பிட்ட கால எல்லைக்குள் எனது மகளுக்கு வெளிநாட்டு வரன் ஒரு நல்ல இடத்தில் இருந்து வந்து முடிவாகியுள்ளது. சொன்னது பழித்துவிட்டது. ஞானத்துடன் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை என்பது நிருபமாகிவிட்டது. 12-2-2004ம் ஆண்டு எனது மகளுக்கு நிச்சயதார்த்தம் நடக்கின்றது. ஏல்லாம் ஐயாவின் ஆசீர்வாதம். ஐயாவின் சேவை மென்மேலும் வளர ஸ்ரீ துர்க்கையை பிராத்திப்பதோடு நானும் எனது குடும்பமும் என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்பதை கூறிக்கொள்கிரோம்.

நன்றி

**பாதிமா!**

கனம் மதிப்பிற்குறிய சாமி ஐயா அவர்களுக்கு வணக்கத்துடனும் நன்றியுடனும் எழுதும் கடிதம்.

ஐயா எனது தகப்பன் பாரூள் என்பவர் பரம்பரையாக குடிக்கு அடிமைப்பட்டு குடித்து குடித்து தங்களிடம் வந்து முறையிட்ட போது அதை நிறுத்தி தருவதாக கூறி செய்த பிகாரத்தின் பின் எனது தகப்பன் படிப்படியாக முற்றாகவே குடியை நிறுத்தி விட்டார் என்பதை குடும்பத்தில் அனைவரும் சந்தோஷத்துடன் ஐயாவிடம் கூறிக்கொள்வதோடு மேற்படி எனது தகப்பனின் காலில் உள்ள புன் வருத்தத்தையும் குணப்படுத்தி எனது தகப்பனை காப்பாற்றித்தர தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

**குறைம் சுவஸ்!**

அன்புள்ள சாமி ஐயா அவர்களுக்கு பணிவுடன் எழுதிக் கொள்வது யாதெனில் நான் என்னுடைய வருத்தம் சம்பந்தமாக தங்களுடன் தொலை பேசி ஊடாக தொடர்பு கொண்டு எனது வேதனையை தங்களுக்கு தெரித்தேன். தாங்களும் என்மீது கூடிய கவணம் செலுத்தி ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளுடன் எனக்கு உதவி செய்தீர்கள். அதன் பின்பு என்னுடைய வேதனைகள் மிகவும் குறைந்துள்ளது. எனவே தங்களையும் ஸ்ரீ துர்க்கை அம்மனையும் எப்பொழுதும் வணங்க கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P.**
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

**புலிகள் இயக்கத்திலிருந்து அதிருப்தியுற்று வெளியேறிய முன்னாள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி கருணா அம்மான் லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. வானொலிக்கு அண்மையில் அளித்த பேட்டி மேற்படி வானொலியின் பணிப்பாளர் திரு.ராம்ராஜ் பேட்டி கண்டவர்.**

இன்னொருவர் பார்வையில்

# "பிரபாகரனின் கொலைவெறிக்கு முடிவுகட்ட தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவார்கள்"

## -ரெஜி கொலையுண்ட பின்னர் கருணா அம்மான் அளித்த முதல் பேட்டி

*ராம்ராஜ் :-* முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் பல தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அதேவேளை முக்கியமாக புலிகளின் முன்னோடியும் உங்கள் மூத்த சகோதரருமான ரேஜி கொல்லப்பட்டுள்ளாரெனச் செய்திகள் வந்திருக்கின்றன. இந்தச் செய்தியில் எந்தளவு உண்மைகள் இருக்கின்றன?

*கருணா :-* இது உண்மையான செய்தி. இன்று பிரபாகரனின் அடிவருடியொருவரால் என் அண்ணன் கொல்லப்பட்டுள்ளார். இது ஒரு புதிய விடயமெனக் கூறமாட்டேன். ஏனென்றால் என் சகோதரன் போலப் பல புலிகள் பிரபாகரனால் அழிக்கப்பட்டுள்ளார்கள். அழிந்துகொண்டும் இருக்கின்றார்கள். அந்த வகையில் பார்க்கும் போது எல்லாத் தோழர்களும் வேதனைப்பட வேண்டுமேயொழிய தனியே ரெஜிக்காக மட்டும் கவலைப்பட முடியாது. ரெஜி, பிரபாகரனின் ஏகாதிபத்தியப் போக்கையும் தன்னிச்சையான சர்வாதிகாரப் போக்கையும் எதிர்த்து நின்று போராடி மடிந்திருக்கின்றார் என்பது பாராட்டப்பட வேண்டிய விடயம். நாங்கள் விட்டுவிட்டு ஓடிவிட்டோம் என்று தவறுதலான பிரசாரங்களை மேற்கொண்டார்கள். என்றைக்கும் எமது மக்களை விட்டு நாம் போகமாட்டோம். மக்களுடன்தான் இருக்கின்றோம். நாம் எங்களுடைய பணிகளைத் தொடரத்தான் போகின்றோம். நாங்கள் ஏதோவொரு வகையில் பிரபாகரனது சர்வாதிகாரப் போக்கை எதிர்க்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, எல்லா மக்களும் அணிதிரண்டு, சகல இளைஞர்களும் ஒன்றுசேர்ந்து, பிரபாகரனின் வெறித்தனமான கொலைகளையும் பிரபாகரனின் எதேச்சாதிகாரமான கொலை முடிவுகளையும் எதிர்த்து நின்று போராட வேண்டுமெனச் சகல மக்களையும் கேட்டுகொள்கிறேன்.

பிரபாகரனால் நிச்சயமாக இந்த மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தர முடியாது. பிரபாகரன், தான் ஒரு பெருந் தலைவர் என்றும் தேசியத் தலைவர் என்றும் தனக்குத் தானே மகுடத்தைச் சூட்டிக்கொண்டு பிரசாரங்களை மேற்கொண்டுள்ளார். பல்லாயிரக் கணக்கான தமிழ் மனிதர்களைக் கொன்ற ஒரு வெறி பிடித்த மனிதன், எவ்வாறு தமிழ் மக்களது தேசியத் தலைவராக முடியும்? ஒரு தனிப்பெரும் தலைவராக இருக்க முடியும்? என்னோடிருந்த பலமான அரசியல் தலைவர்களைக் கொன்றொழித்துவிட்டார். அமிர்தலிங்கம் போன்ற புத்திஜீவிகள், பலமான அரசியல் தலைவர்கள், அறிவாளிகளைக் கொன்றொழித்துள்ளார். பிரபாகரன் எவ்வாறு தேசியத் தலைவராக முடியும் என்பதைத்தான் இன்றைக்கு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, நாங்கள் தெளிவடைந்ததைப் போன்று எல்லா மக்களும் பிரபாகரனின் தலைமையை நிராகரிக்க வேண்டும். அவரின் ஆயுத வெறியாட்டம் மூலம் எமது விடுதலையைப் பெற முடியாது.

*ராம்ராஜ் :-* நீங்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதாகப் பல முறை கூறப்பட்டிருக்கிறது. இது பற்றி உங்களது கருத்து என்ன?

*கருணா :-* இது முற்றுமுழுதான பொய்ப் பிரசாரம். இது பிரபாகரனால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரமாகும். உண்மையில் அப்படியான வேலைகளைப் பிரபாகரன்தான் செய்வார். இந்தியப் படைகளோடு போரிட்ட காலத்தில் அவர் சிங்களப் படைகளிடம் தான் ஆயுதங்களைப் பெற்றார். வெலிஓயா காட்டுக்குள் போய் சிங்களப் படைகளிடம் கையேந்தி ஆயுதம் பெற்றுத்தான் இந்தியப் படைகளுடன் பிரபாகரன் போரிட்டார். அதை அப்போதே நாங்கள் துரோகம் என்று கூறியபோது அதை அவர் இராஜதந்திரம் என்றார். அப்படியான ஒரு துரோகிதான் பிரபாகரன். நாங்கள் இராணுவத்துடன் இணைந்து போரிடவில்லை. இராணுவத்துடன் இணைந்து போரிட வேண்டிய தேவையும் எமக்கில்லை. ஏனென்றால், எமது மக்களின் ஜனநாயக ரீதியான சுதந்திரத்துக் காகவே நாங்கள் இப்போது குரல் கொடுக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கம். அதாவது பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள், கொள்ளைகள், வெறியாட்டங்களை உலகத்துக்குச் சொல்ல வேண்டும். வன்னிக் காட்டுக்குள்ளே அவர் இராஜபோக வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றார். இப்படியான இவர் எவ்வாறு தமிழ் மக்களின் தலைவனாக இருக்க முடியும்? இன்று அவர் மக்களைச் சந்திக்கின்றாரா? இல்லை சாதாரண மக்களுடன்தான் பழகுகிறாரா? அவர் ஒளிந்துகொண்டு இருக்கின்றார். தொடர்ந்து அவ்வாறு மறைந்து இருந்துகொண்டு அவர் செயற்பட முடியாது. எனவே, எங்கள் மீது மக்கள் வெறுப்படைய வேண்டுமென்ற நோக்கில் அவர் செய்கின்ற அவதூறான பிரசாரம்தான் இந்த இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு. அது உண்மையாக இருந்தால் எனது அண்ணனுடன் இராணுவத் தினரும் உடன் இறந்திருக்க வேண்டும். அவர் தனித்து நின்று இவர்களை எதிர்த்தே வீரமரணம் அடைந்திருக்கின்றார். இந்த நேரத்தில் மக்கள் விழிப்பாகவும் ஒற்றுமையாகவும் இருந்து சர்வாதிகாரி பிரபாகரனின் அட்டகாசத்துக் கெதிராகக் குரல் கொடுக்க வேண்டும். பிரபாகரனின் இவ்வாறான வெறியாட்டங்களுக்கு விரைவில் முடிவு வரும். ஏனெனில் தாக்குப்பிடிக்கக் கூடிய நிலையில் அவர் இன்று இல்லை அவரது பலவீனங்கள் நிறைய இப்போது வெளியில் தெரிய வந்துவிட்டன. இப்போது வடக்கு - கிழக்கு மக்கள் அவரை நன்றாக விளங்கிக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.

*ராம்ராஜ் :-* ஏப்ரல் ஒன்பதாம் திகதி நீங்கள் இராணுவ ரீதியாகப் பின்வாங்கியபோது பல ஆயிரக்கணக்கான போராளிகள் உங்களோடு இருந்தார்கள். அவர்களது நிலை என்ன? அவர்கள் மீண்டும் உங்களோடு இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கின்றதா?

*கருணா :-* வீணான உயிரிழப்புக்களை நாங்கள் விரும்பவில்லை. ஒரு சகோதர மோதலைத் தவிர்க்க வேண்டும் என்பதற் காகத்தான் அவர்களை நாங்கள் வீடுகளுக்கு அனுப்பிவைத்தோம். அப்படியான ஒரு தேவை வரும் பட்சத்தில் அவர்கள் எம்மோடு தோளோடு தோள் நின்று போராட இன்னும் தயாராகத்தான்

**பிரபாகரன், தான் ஒரு பெருந் தலைவர் என்றும் தேசியத் தலைவர் என்றும் தனக்குத் தானே மகுடத்தைச் சூட்டிக்கொண்டு பிரசாரங்களை மேற் கொண்டுள்ளார். பல்லாயிரக் கணக்கான தமிழ் மனிதர்களைக் கொன்ற ஒரு வெறி பிடித்த மனிதன் எவ்வாறு தமிழ் மக்களது தேசியத் தலைவராக முடியும்?**

இருக்கின்றார்கள். ஆனால், அப்படியான சகோதரப் படுகொலைகள் இடம்பெறுவதை நாங்கள் விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரையும் சரி, என் அண்ணரைப் பொறுத்த வரையும் சரி, இருபது வருடங்களுக்கு மேலாக நாங்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகத்தான் போராடி வந்திருக்கின்றோம். அண்ணனைப் பொறுத்தவரை அவர் அதிகமாக வடக்கில்தான் போராடிவந்தார். சூரியக்கதிர் போன்ற பல போராட்டங்களில் அவர் பங்கு பற்றியுள்ளார். நீண்டகாலமாக வட பகுதி மக்களுக்காகவே அவரது போராட்டங்கள் அமைந்திருந்தன. அவர் வட பகுதிப் பெண் போராளி ஒருவரைத்தான் மணந்தும் கொண்டார். அவரது வாழ்க்கையில் 90 வீதமான காலத்தை வட பகுதி மக்களின் நன்மைக்காகவே அர்ப்பணித்தார். அப்படிப்பட்ட ஒரு போராளியைத்தான் பிரபாகரனது கொலை வெறி பலிகொண்டிருக்கிறது. இப்படியான வெறியாட்டம் தொடருமாயிருந்தால் மீண்டும் இளைஞர்கள் கிளர்ந்தெழுவதை யாராலும் தடுக்க முடியாது அப்படிப்பட்ட ஒரு நிலை தோன்றக் கூடாது என்றுதான் நாங்களும் விரும்புகின்றோம்.

கடந்த இருபத்தைந்து வருடங்களாகக் கடந்து வந்த போராட்டப் பாதை, பிரபாகரனின் தன்னிச்சையான முடிவுகளால் இன்று தடம்புரண்டு செல்கிறது. தொடர்ந்து பிரபாகரனை நம்பிக் கொண்டிருந்தால் தமிழீழத்தில் எந்த ஒரு தமிழனும் இறுதியில் உயிரோடிருக்கமாட்டான். பெருவாரியான தமிழர்கள் பிரபாகரனுக்கு அஞ்சி இன்று வெளிநாடுகளில் தஞ்சம் அடைந் துள்ளார்கள். பல புத்திஜீவிகள் பிரபாகரனின் துன்புறுத்தலாலும் அச்சுறுத்தலாலும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவற்றைப் பார்க்கும்போது கம்போடியாதான் எனக்கு நினைவுக்கு வருகின்றது. கம்போடிய போராட்ட காலத்தில் எந்த ஒரு அறிவாளியுமே எஞ்சவில்லை. எல்லோரையும் சுட்டுவிட்டார்கள் அதைப் போன்ற ஒரு நிலையைத்தான் பிரபாகரன் தமிழீழத்தில் தற்போது ஏற்படுத்தியுள்ளார். எனவே, தொடர்ந்து அவரை ஆதரித்துக்கொண்டிருந்தால் அவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலைதான் தமிழீழத்தில் ஏற்படும். அவரது வெறியாட்டம் தொடருமாக விருந்தால் தமிழ் மக்களிடமிருந்தே ஒரு எழுச்சிப் போராட்டத்தைப் பிரபாகரன் சந்திக்க வேண்டி வரும்...

*ராம்ராஜ் :-* அண்மைக்காலமாக நீங்கள் உங்களின் பல முக்கிய சகாக்களை இழந்துள் ளீர்கள். இது உங்களுக்கு இராணுவ ரீதியான பின்னடைவை ஏற்படுத்துமா?

*கருணா :-* இராணுவ ரீதியாக என்று கூறுவதை விட, இந்தப் போராளிகள் உண்மையில் வீடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள், அவர்களைப் பிரபாகரனது கொலைவெறி கொண்ட சகாக்கள் வீடுகளுக்குச் சென்று தாக்குவது ஒரு மிருகத்தனமான செயல். எங்களது ஆதரவாளர்கள் என்ற போர்வையில் சாதாரண மக்களையும் அவர்கள் கொன்று குவித்துக்கொண்டிருக் கின்றார்கள். பிரபாகரனது ஆதரவாளர்கள் யார் யார் என்பது எங்களுக்கும் தெரியும். நாங்கள் நினைத்தால் அவர்களை எதுவும் செய்ய முடியும். ஆனால், அவ்வாறானதொரு மிலேச்சத்தனமான செயலை நாங்கள் செய்யப்போவதில்லை. பிரபாகரன் எத்தனையோ போராளிகளது பெற்றோரையும் குடும்பங்களையும் துன்புறுத்திக் கொண்டும் கொலைசெய்துகொண்டும்தான் இருக்கின்றார். ஆனால், பிரபாகரனது தாய் மற்றும் குடும்பத்தினர் சுதந்திரமாகத்தான் இருக்கின் றார்கள். ஆனால், அவரை எதிர்த்தவர்களோ அல்லது அவரது துரோகத்தனத்திற்கு எதிராக குரல் கொடுத்தவர்களோ அவரது குடும்ப அங்கத்தவர்களை ஒன்றுமே செய்ய எத்தனிக்க வில்லை. அது போல செய்யவும் மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் நியாயத்திற்காகக் குரல் கொடுப்பார்கள். அவர்களுக்கு நியாயம் எது அநியாயம் எது என்பது விளங்கிவிட்டது. பிரபாகரனைப் போன்ற மிருக வெறி பிடித்த ஒருவரால்தான் இவ்வாறான அநீதியான கொலைகளைச் செய்ய முடியும்.

சில மாதங்களுக்கு முன் கொழும்பிலே ஒரு செயல் நடந்தது. எங்களால் கொழும்புக்குப் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்ட சில போராளிகளைக் கோழைத்தனமான முறையில் கொலைசெய்தார்கள். சதிசெய்து, தூக்க மாத்திரையைக் கொடுத்து தூக்கத்தில் இருக்கும்போது சுட்டுக் கொன்றார்கள். அவர்களது உடல்களை நீங்கள் பார்த்திருந்தால் உங்களுக்குப் புரிந்திருக்கும். ஒரு வீரத்தனமான போராட்டத்தை நடத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் பிரபாகரன், இவ்வாறான கோழைத்தனமான அளவுக்கு இறங்கிவிட்டார் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். அவரது இந்தக் கேவலமான செயலை முழு உலகமும் மக்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின் றார்கள்.

*ராம்ராஜ் :-* அண்மையில் புலிகள் கிழக்கு மாகாணத்தில் பல இராணுவ ரீதியான மாற்றங்களைச் செய்திருக்கின்றார்கள். விஷேட தளபதியாகச் செயற்பட்டுவந்த ரமேஷ் மாற்றப்பட்டு பானு நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான காரணம் என்னவென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

*கருணா :-* இது ஒரு வெளிப்படையான விடயம். நான் பிரபாகரனோடு பிரச்சினைப்பட்டதும் இதற்காகத்தான். பிரபாகரன் என்பவர் பிரதேச வேறுபாடு பார்க்கின்ற ஒரு வெறி பிடித்த மனிதர். அவரை யாழ்ப்பாணத் தலைவர் என்றும் கூற முடியாது. அவர் வல்வெட்டித்துறைக்காரர்களை மட்டும்தான் நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதுவார். இப்படியான வேறுபாடு பார்க்கும் பிரதேசவாதம் பிடித்த மனிதன்தான், தேசியத் தலைவன் என்று தன்னைத் தானே பிரகடனப் படுத்திக்கொண்டுள்ளார். இவ்வாறான வேறுபாடு எம் மீது காட்டப்பட்டபோது எம்மோடிருந்த சில போராளிகளுக்கு அது சரியாகப் புரியவில்லை. ரமேஷ் என்பவர் எனக்கு அடுத்தபடியாகப் பொறுப்பில் இருந்தவர். அவருக்குப் பிரச்சினை தொடங்கும்போதே நாங்கள் தெளிவுபடுத்தினோம். பிரபாகரன் என்பவர் கிழக்கு மாகாணப் போராளிகளையும் சரி, மக்களையும் சரி நியாயமான முறையில் பார்ப்பவரல்லர். நம்மைப் புறக்கணித்து வரும் ஒருவராகவே அவரது செயற்பாடுகள் தொடர்ந்து இருந்தன. சிலர் அதற்குள் துரோகத்தனமாக எட்டப்பர் வேலை பார்த்துவிட்டார்கள். அவர்கள் நினைத்திருக்கலாம், கருணாவுக்குப் பிறகு தாங்கள் பொறுப்புக்கு வரலாம் என்று. ஆனால், கிழக்கு மட்டு. - அம்பாறை மக்கள் நன்கு புரிந்துவிட்டார்கள். இன்று பிரபாகரன், தன்னைப் போன்ற ஒரு கொலைவெறி பிடித்தவனை மட்டு. - அம்பாறைப் பொறுப்பாளராக நிமித்ததன் மூலம் அவரது பிரதேசவாதத்தை மீண்டுமொருமுறை நிரூபித்துவிட்டார். இதே பானுதான் கதிரவெளிக்கு வந்து நூற்றுக் கணக்கான போராளிகளைக் கொலைசெய்தவர். பல பெண் போராளிகளை மானபங்கப்படுத்தியவர். மட்டக்களப்பு என்றால் என்னவென்றே அறியாத அரியாலையைச் சேர்ந்த பானுவை, இன்று பொறுப்பாளராக பிரபாகரன் நியமித்துள்ளார் என்றால் அனைத்து மக்களும் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள், எனக்கும் பிரபாகரனுக்கும் ஏன் பிரச்சினை ஏற்பட்டதென்று.

பிரபாகரன் தனது ஆதிக்க வெறிக்கு கிழக்கு மாகாண மக்களைப் பலிக்கடாக்களாக்கப் பார்க்கின்றார். அவரது நோக்கம் மக்களது சுதந்திரமோ அன்றி விடுதலையோ அல்ல, கிழக்கு மாகாண மக்களை எவ்வாறு தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதே. இன்னும் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். பத்திரிகையாளர் சிவராமை எடுத்துக் கொள்ளுங்கள். மட்டக்களப்பு மக்கள் மத்தியில் யாழ். மக்களுக்கு எதிரான தீவிரமான பிரசாரத்தை மேற்கொண்டவர் சிவராம். கிழக்குப் பல்கலைக் கழகங்களுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாரையும் எடுக்கக் கூடாது என்று கடுமையாக இருந்தவர்தான் இந்த சிவராம் ஆனால், இப்போது சிவராமை விலைக்கு வாங்கிவிட்டார் பிரபாகரன். பிரதேசவாதத்தைக் கக்கிக்கொண்டிருந்த அவர், இன்று பிரபாகரனுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கின்றார். இது அவருக்கும் ஒரு நல்ல பாடம். அவர் ஒரு பெரிய இயக்கத்தில் இருந்து, அந்த இயக்கக் கொள்கைகள் பிடிக்காமல் வெளியேறியவர்தான். அது போலவே நாங்களும் தலைமையின் கொள்கை பிடிக்காமல்தான் வெளியேறியிருக்கின்றோம். ஆனால் அவரோ இன்று பிரபாகரனின் ஒரு கைக்கூலியாகக் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். வெகு சீக்கிரமே பிரபாகரனின் பிரதேசவாதத்தை அவரும் புரிந்துகொள்வார்.

*ராம்ராஜ் :-* இறுதியாக நீங்கள் இப்போது இலங்கையில் இல்லையென்றும் வெளி நாடொன்றில் தஞ்சமடைந்திருப்பதாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது. இதைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

*கருணா :-* என்னைப் பற்றியும் எனது அண்ணனைப் பற்றியும் இவ்வாறுதான் கூறினார்கள். இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை பிரபாகரன் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கின்றார். அவருக்கு ஒரு பயமிருக்கின்றது. நாங்கள் மக்களோடு மக்களாக இருப்பதால் அவருக்கு உயிராபத்து வரும் என்று அவர் அஞ்சுகின்றார். நிச்சயமாக நான் தாய் மண்ணில்தான் இருக்கின்றேன். நானும் ஒரு விடுதலைப் போராளி. நேரம் வரும்போது நான் எங்கிருக்கின்றேன் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவேன். கடந்த இரு தசாப்தங்களாக உயிரைத் துச்சமென மதித்து கிழக்கு மண்ணில் போராடியவன் நான். இன்றும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றேன். ஆனால், இப்போது எமது போராட்டப் பாதை கொஞ்சம் மாறியுள்ளது. ஏனெனில் தன்னலத்தை மட்டுமே பார்க்கும் ஒரு சர்வாதிகாரியோடு இணைந்து எமது மக்களுக்கான விடுதலையைப் பெற்றுத் தர முடியாது.

இன்று யதார்த்த நிலையைப் பார்க்கும்போது தமிழ் மக்களுக்கொரு நல்ல எதிர்கால மிருக்கின்றது. உண்மையில் இயக்கத்தை விட்டு வெளியே வந்து சுயாதீனமாகச் சிந்திப்பதாலும் பல தலைவர்களோடு உரையாடியதாலும் யதார்த்த நிலையை நன்கு புரிந்துவைத்துள்ளேன். பிரபாகரன் மட்டும்தான் சிறந்த தலைவன் என்ற ஒரு மூளைச் சலவை செய்யப்பட்ட மாயைக்குள் நாங்கள் சிக்கியிருந்தோம். இப்போது வெளியே வந்து பார்க்கும்போதுதான் உண்மை புரிகின்றது. அந்த நம்பிக்கையில்தான் இன்று மக்களோடு நாங்கள் இருக்கின்றோம். அந்த மக்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கூடியது இதுதான். இன்று பல கொலை வெறியாட்டங்கள் கிழக்கு மாகாண மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அதை இன்னுமின்னும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நாங்கள் ஒரு மந்தைக் கூட்டத்தைப் போல அடிமைகளாக இருக்க முடியாது. ஆகவே, இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்காக எல்லா மக்களும் எம்மோடு ஒன்றிணைய வேண்டும் என்று நாங்கள் வேண்டுகின்றோம். நாங்கள் பல வேலைத்திட்டங்களை வைத்திருக்கின்றோம்.

அரசியல் ரீதியான பல நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். சரியான வேளை வரும்போது நாங்கள் வேண்டுகோள் விடுப்போம். அப்போது மக்கள் இணைந்து கொண்டால் போதும். இப்போது மக்களை வீண் பலிகொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இயக்கப் போராளிகளுக்கு உணவு கொடுத்தவர்களையே கொன்றொழிக்கும் இந்தக் கொடூரனின் கொலைவெறிக்கு மக்களைப் பலி கொடுக்க நாங்கள் விரும்பவில்லை.

**உண்மையில் இயக்கத்தை விட்டு வெளியே வந்து சுயாதீனமாகச் சிந்திப்பதாலும் பல தலைவர்களோடு உரையாடியதாலும் யதார்த்த நிலையை நன்கு புரிந்துவைத்துள்ளேன். பிரபாகரன் மட்டும்தான் சிறந்த தலைவன் என்ற ஒரு மூளைச் சலவை செய்யப்பட்ட மாயைக்குள் நாங்கள் சிக்கியிருந்தோம்.**


*ராம்ராஜ் :-* இறுதியாக நீங்கள் எமக்களித்த பேட்டியில் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கப்போவதாகக் கூறினீர்கள். அது எந்த நிலையில் இப்போது இருக்கின்றது?

*கருணா :-* நிச்சயமாக. நாங்கள் ஜனநாயக ரீதியான ஒரு அரசியல் கட்சியை உருவாக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். நிச்சயமாக நாம் ஆரம்பிக்கப்போகும் கட்சி கிழக்கு மக்களின் விடிவுக்காகக் குரல் கொடுக்கும். நாங்கள் அதில் உறுதியாக இருக்கின்றோம். விரைவில் அந்தக் கட்சி பதிவு செய்யப்படும். **'தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்'** என்ற பெயரை நாங்கள் தெரிவுசெய்துள்ளோம். அதற்கான உலகளாவிய ரீதியிலான கிளைகளை நிறுவுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

பம்பாயில் நான் இருந்த போது. எனக்குப் பழக்கமான ஓர் இலக்கிய ஆர்வலர் ஒருமுறை என்னைக் காண வந்தார். ஒருசிறு நினைவூட்டலுக்குப் பிறகே. அவரை நான் இனங்காண முடிந்தது. இன்று மிகப்பெரிய பதவியில் பம்பாயில் இருக்கும் அவர் ஒரு கவிதைப் பித்தர்.



என் திரைப்படப் பாடல்களையெல்லாம் பாகம் பாகமாகப் பிரித்துப் போட்டு, என்னுடன் விவாதத்தில் இறங்கினார்.

"மிஸ்டர் வாலி சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க, சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு என்றெல்லாம் நீங்க படத்துல பாட்டு எழுதறது எனக்கு நியாயமாப் படல்லே.. ஜனனீ! ஜனனீ! ஜகம் நீ! அகம் நீ! என்றெல்லாம் பக்திப் பனுவல் படைத்த கையா, இந்த சிக்கு புக்கு ரயிலைப் படைப்பது....?"

இப்படி அவர் கேட்டவுடன் எனக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

"சார்!.. நான் பாரதமாதா, மாதிரி அசோக் மேத்தாவும் என் பிள்ளைதான்; ஹர்ஷத் மேத்தாவும் என் பிள்ளைதான்.... இதில் நான் விசனிக்க என்ன இருக்கிறது?" என்றேன்.

என் சாமர்த்தியமான பதிலலால் அவர் சமாதானமடையவில்லை. எனக்கோ, சினிமாவில் உள்ள சங்கடங்களை விளக்கி, அவருக்குப் புரியவைக்கும் அளவு அவகாசம் இல்லை.

"சார்! பன்னி பன்னிக் குட்டி போட்டா நான் வருத்தப்பட மாட்டேன். சிங்கம், பன்னிக்குட்டி போடறறேன்னுதான், துக்கமா இருக்கு.. உங்களால் நல்ல கவிதைகளை சினிமாவ்ல எழுத முடியும்... எழுதியிருக்கீங்க.. ஆனா இப்போ...? Why should you stoop to such level....?" என்று சீறினார் அவர்.

'MONEY' என்று ஒரே வாரத்தையில் நான் பதில் சொன்னேன்.

இப்படி நான் பதில் சொல்வேன் என்று அவர் எதிர் பார்க்காததால் விக்கித்து வாயடைத்துப் போனார்.


பிறகு சிறிது நேரம் கழித்து, தன் கைப்பையிலிருந்து, பம்பாய் தனிச் சுற்றுக்கு மட்டுமே பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பழக்கத்திலிருந்து ஒரு சின்னப் பத்திரிகையை எடுத்து என்னிடம் நீட்டினார்.

நான் வாங்கிப் புரட்டிப் பார்த்தேன். அதில் என்னுடைய நீளமான கவிதையொன்று அச்சாகியிருந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன். அவர் சென்னைக்கு வந்து என் பின்னால் அலையாய் அலைந்து அதை அவர் வாங்கிப் போனது 'பளிச்' என்று என் நினைவிற்கு வந்தது. வியப்பு விழிகளில் விரவ, அந்தக் கவிதையை ஆசையோட படித்து முடித்தேன். நான் எழுதியது தான் இருப்பினும் அதை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, நான் படிக்கும் போது என்னுள் ஒரு புத்துணர்வு பரவியது.

"இப்ப சொல்லுங்க, வாலி! இது ஒருசுண்டைக்காப் பத்திரிகைக்கு நீங்க எழிக் கொடுத்தது, நாங்க யாரும் இதுக்காக உங்களுக்குக் காலணா காசுத்தரல்லே... தம்பிடி வாங்காம இவ்வளவு உணர்ச்சிபூர்வமாக ஒரு நவீன கவிதையை எப்படி சார் எழுதினீங்க..? இதுல மட்டும், ஏன் உங்களுக்கு Money முக்கியமாத் தெரியல்லே..?" என்று விளாசித் தள்ளினார் வந்தவர்.


அவர் சொல்வது ஒரு விஷயத்தில் உண்மையானது என்றாலும் ஆத்மார்த்தமாகச் செய்யும் ஒரு காரியத்தையும் பணம் வாங்கிக் கொண்டு பத்துப் பேரைத் திருப்திப் படுத்தச் செய்யும் ஒரு காரியத்தையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க அவரால் முடியவில்லை.

(தொடரும்.......)




---

உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....




## சில அநுபவங்கள்

பனிப்பாறைகள் அந்தக் கருவிகளை அடித்துச் சென்றுவிட்டன. 1967இல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது நந்தாதேவிக்கருகில் உள்ள நந்தாகோட் என்கிற இடத்தில் தங்களுடைய இரண்டாவது கருவியினை அமெரிக்கர்கள் அமைத்தார்கள். ஓராண்டுக் காலம்தான் இந்தக் கருவி இயங்கியது. அதற்குப் பிறகு அமெரிக்கர்கள் இந்தக் கருவியை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டார்கள். இந்தக் கால கட்டத்தில் அமெரிக்க உளவாளிகளும், இந்திய உளவாளிகளும் ஒருங்கிணைந்து சீன அணு ஆராய்ச்சி நிலையங்களை ஆகாயத்தில் பறந்து கண்காணித்து ஒரு ரஷ்ய விவகாரம் தகவல்களைச் சேகரித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் நம்முடைய உளவாளிகள் தகவல்களைச் சேகரிப்பது போலவே வெளிநாட்டு உளவாளிகளும் நம்முடைய நாட்டில் தங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பார்கள் அல்லவா?

இதோ ஓர் சுவையான அநுபவம்.

உலகப் பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் சக்தி வாய்ந்த உளவு நிறுவனங்களை நடத்தி வருவதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அமெரிக்க உளவு நிறுவனம் சி.ஐ.ஏ. என்றழைக்கப்படுகிறது. சோவியத் உளவு நிறுவனம் கே.ஜி.பி. என்றழைக்கப்படுகிறது.

இப்போது விஷயத்திற்கு வருவோம்.

அது ரஷ்யாவில் குருஷ்சாவ் தலைமைப் பொறுப்பில் இருந்த காலம். ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஒரு இந்திய இளைஞர் உதவியாளராக அப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருந்தார். அவர் திருமணமானவர். தன்னுடைய மனைவியையும், இரண்டு குழந்தைகளையும் இந்தியாவிலேயே விட்டுவிட்டு மாஸ்கோ சென்று இந்தியத் தூதரகத்தில் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

மனைவியை விட்டுப் பிரிந்து மாஸ்கோவில் வாழ்கின்ற அந்த இளைஞரின் நடவடிக்கைகளை கே.ஜி.பி. ஆட்கள் கண்காணிக்கத் தொடங்கினார்கள். பெண்களைப் பார்த்தவுடன் அவருக்கு சபலம் ஏற்படுவதைப் புரிந்துகொண்டார்கள். கே.ஜி.பி. உளவாளிகள் தங்கள் தூண்டிலில் விழக்கூடிய மீன்தான் அது என்கிற முடிவுக்கு வந்தார்கள். தூண்டில் முள்ளில் எந்தக் கவர்ச்சியைப் பொருத்துவது என்பதையும் அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள்.

அந்த இளைஞருக்கு ஊரைச் சுற்றுவது என்றால் மிகவும் இஷ்டம். போகின்ற இடங்களில் அழகிகள் யாராவது அவருடைய கண்களில் பட்டுவிட்டால் போதும், மோப்பம் பிடிக்கத் தொடங்கிவிடுவார்.

ரஷ்ய அழகி ஒருத்தி, அவர் அலுவலகத்திற்குச் செல்லும் போதெல்லாம் தொடர்ந்து பின்னால் வருவதைப் பார்த்தால் அவர் சும்மாவா இருப்பார்? அவள் நன்றாக ஆங்கிலம் வேறு பேசினாள். இருவரும் நெருக்கம் ஆனார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---


# இணையத்தளமா? அவதானமாக இருங்கள்!



இவர்கள் பாதையோரங்களில் நின்று வாடிக்கையாளர்களைப் பிடித்துக்கொள்வதில்லை; சில ஆட்டோ சாரதிகள் மூலமாக வாடிக்கையாளர்களைப் பிடித்துக்கொள்ள முயற்சிப்பதும் இல்லை. இவர்கள் தங்களது தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக இணையத்தளங்களையும், மின்னஞ்சல் வசதிகளையும் - கையடக்கத் தொலை பேசிகளையும் உபயோகப்படுத்துகின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சியின் சகல துறைகளையும் இவர்களும் எட்டிவிட்டார்கள் என்றுதான் கூற வேண்டும்.

பியதோர் ட்ரொவுஸ்கி எனும் பிலபல ரஷ்ய எழுத்தாளர் 'குற்றமும் தண்டனையும்' என்றொரு நாவலை எழுதியிருந்தார். அதில் வரும் ரெஸ்கொலனிகோவ் எனும் பல்கலைக்கழக மாணவன் சோனியா என்கிற விபசாரியின் முன் மண்டியிட்டு "நான் உன் தாழ்பணிந்து வணங்குவது உனக்காக அல்ல; உன்னுள் துயருறுகின்ற உனது ஆத்மாவுக்காகவே" எனக் கூறுவான்.

இதே போல் அண்மையில் பார்த்த ஒரு தமிழ்த் திரைப்படத்தில் வருகின்ற ஒரு விபசாரி "நாங்கள் இருப்பதால்தான் உங்களைப் போன்ற பெண்கள் காப்பாற்றப்படுகின்றார்கள்" என கதாநாயகியைப் பார்த்துக் கூறுவாள்.



விபசாரத் தொழில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என எவராலும் கூறமுடியாது. சில வேளைகளில் இத் தொழிலானது, மனிதக் குடும்ப நிறுவனங்களைப் போன்று பழைமை வாய்ந்ததாகவும் இருக்கக்கூடும்.

'கிறீஸ் நாட்டில் ஏதென்ஸ் நகரில் இருந்து வந்த ஒரு சமூகத்தின் வழக்காகும்' என விபசாரத் தொழிலின் ஆரம்பம் குறித்து ஒரு சில மேலைத்தேய மானுடவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனடிப்படையில் விபசாரத் தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம்.

இந்த நகரில் ஒரு தளம் இருந்ததாம். இங்குள்ள அனைத்து யுவதிகளும் மேற்படித் தளத்தின் முன்பாக நிலத்தில் உட்கார்ந்திருக்க வேண்டுமாம். அப்பகுதியால் செல்கின்ற ஆண்கள் அப் பெண்கள் மீது எறிகின்ற நாணயங்களைப் புறக்கணிப்பதற்கான அதிகாரம் அந்த யுவதிகளுக்குக் கிடையாதாம். அந்த நாணயம் எந்த யுவதி மீது விழுகிறதோ, அவள் அந்த குறிப்பிட்ட ஆணுடன் செல்ல வேண்டும் என்பதே அச் சமூகத்தின் வழக்கமாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

எனினும், அன்று போல் பாதையோரங்களிலும் நடுத் தெருக்களிலும் காத்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை தற்போதைய விபசாரிகளுக்கு இல்லை. அதே நேரம் 'விபசாரி' என்ற சொல் இவர்களது அகராதியிலிருந்து முழுமையாகவே ஒதுக்கப்பட்டு, அதற்குப் பதிலாக 'வர்த்தக பாலியல் சேவகிகள்' என்ற சொல் உள்வாங்கப்பட்டுள்ளது.

இந்த 'வர்த்தக பாலியல் சேவகர்களில்' ஆண் - பெண் இரு பாலாரும் அடங்குகின்றனர். இவர்களை கண்ட நின்ற இடங்களில் காண முடியாது. அது அந்தக் காலம்.

மேற்படி கூட்டத்தாரின் தொழில்துறை தொடர்பில் அவர்கள் உபயோகப்படுத்தும் பிரபல ஊடகம் இணையத்தளமாகும். இலங்கையில் 602 இணையத்தளங்கள் செயற்பட்டு வருவதாக இது வரையில் இனங்காணப்பட்டுள்ளன.

இதில் ஒரு இணையத்தளம் என்ன கூறுகிறது என்றால், "உங்களுக்கு ஒரு பெண் தேவை என்றால் தாய்லாந்துக்குச் செல்லுங்கள்; ஆண் தேவை என்றால் இலங்கைக்கு வாருங்கள்" என்று,

மேற்படி இணையத்தளங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இலங்கையினுள் செயற்பட்டு வருகின்ற பல்வேறு துறை களைப் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது.

இணையத்தளங்களில் குறிப்பிப் படுகின்ற சில பெண்களின் விலை 5,000 ரூபாவாகும். சில வேளைகளில் அது உயர்ந்து 75,000 ரூபா வரையில் உயர்ந்து காணப்படுகின்றது.

இதில் சில பெண்கள் முழு நேரமும் இத் தொழிலில் ஈடுபடுவது கிடையாது. இவர்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகின்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெண்கள் மட்டுமல்லாது ஒரு சில ஆண்களும் கூட இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கை திறந்தவெளிப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவொன்று அண்மையில் மேற்கொண்டுள்ள ஓர் ஆய்வின்போது ஓர் இளைஞன் இவ்வாறு கூறியுள்ளான். கதை இது:

இந்த இளைஞன் தென்பகுதியைச் சேர்ந்தவன். இவன் தினமும் இரு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுடன் தொடர்புகளை வைத்துக்கொள்கிறான். இதன் மூலம் பெறுகின்ற பணத்தைக் கொண்டு தனது மேற்படிப்புக்காக செலவு செய்கிறான். படிப்பு முடிந்ததும் தனக்கு ஒரு நிரந்தரத் இல்லை தொழிலைத் தேடிக்கொள்ள இயலும். மேற்படி தொழில் நிரந்தரமாக என்றும் அதன் பின்னர் கைவிட்டுவிட முடியும் என்றும் கூறுகிறான்.

இணையத்தளங்கள் குறிப்பிடுகின்ற வகையில் சிறுவர் வர்த்தக பாலியல் சேவகிகள் அதிகமாக இருந்து வரும் நாடுகளிடையே இலங்கை, முதலிடம் வகிக்கின்றது. தற்போது இலங்கையில் சிறுவர் வரத்தக பாலியல் சேவகிகள் 20,000 பேர் இருக்கின்றனர் என மதிப்பிடப்படுகின்றது.

சிறுவர் பாலியல் தொழிலில் இலங்கை தாய்வானுக்கு அடுத்த படியில் இருந்து வருகின்றது. இவ்வாறானவர்கள் குறித்து மிக அழகான - ஈர்ப்புச் சக்தி கொண்ட இணையத்தள விளம்பரங்களையும் காண முடிகின்றது.

சில நொடிகளை இணையத்தளத்தில் செலவிட்டால் வர்த்தக பாலியல் சேவகிகளின் தொலைபேசி இலக்கங்களைக் கண்டு பிடித்துவிடலாம்.

ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் அட்டைப் படங்களுக்கான மாதிரிகளையும் இணையத்தளம் வழங்கிவருகின்றது. அதற்காக மேற்படி இணையத்தளங்களில் உள்ள விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

கணினி ஊடாக உலகுக்குக் கொடையாகியுள்ள மின்னஞ்சல் கூட விபசாரிகள் தொடர்பான தகவல்களை பரிமாறும் ஊடகமாக இன்று மாறியுள்ளது.

அதன்படி மின்னஞ்சல் உபயோகம் செய்பவர்களுக்கு இலவசமாகவே பெண்களது நிர்வாணப் புகைப்படங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. அப் பெண்ணை சந்திக்க வேண்டுமானால் அங்கு குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் விலாசத்தின் மூலம் தகவல்களை அனுப்ப இயலும்.

அதன் பின்னர் விலை விபரங்கள், அறைக் கூலி போன்ற சகல விபரங்களும் உடனே கிடைத்துவிடுகின்றன.

எனவே, இராப் பெண்கள் இனிமேலும் வீதியோர விளக்குக் கம்பங்களின் அடியில் நிற்கப் போதில்லை. அவர்கள் சகல வசதி, வாய்ப்புகளுடன் உலா வருகின்றனர். நோய்களும் கூட அப்படித் தான்; நவீன தொழில்நுட்பம் வாயிலாகவும் உட்புகலாம்.



*(இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தகவல் பிரிவுக்கு நன்றி)*

-பாரூக்

# மக்களின் முடிவிற்காய் கிழக்கு!

'கிழக்கை யுத்தப் பிரதேசமாக வைத்திருக்கவே அரச தரப்பு முயன்று வருகிறது. என்பதுதான் புலிகளது இப் போதைய குற்றச்சாட்டாக இருக்கிறது. இக் கருத்தை மாற்றுவதற்கு யார், எவ்வள வுக்கு தான் முயன்றாலும் முடியாதென்பது கூட எல்லோருக்குமே தெரிந்த விடயமாகப் போய்விட்டது.

மக்களை இம்சைப்படுத்துவதென்றே கங்கணங்கட்டி நிற்பவர்களை யார் எவ்வள வுக்குப் புத்திமதி சொன்னாலும் திருத்த முடியாதென்பதே யதார்த்தம். இதனைப் பலர் புரிந்துகொள்வதில்லை இதனை அறிவீனம் என்றும் சொல்ல முடியாது. ஏனென்றால், இது அவரவர் வளர்க்கப்பட்ட சமுதாயங்களைப் பொறுத்து, மாறுபடும் விடயமாக இருக்கும்.

கிழக்கைப் பொறுத்தவரை இப் போதைக்கு விடுதலைப் புலிகளின் ஆதர வாளர்களுக்கு அது ஒரு களை பிடுங்கப்பட்ட பிரதேசம். ஆனால் உண்மை நிலைமை எத்தனை பேருக்குத் தெரியும் என்று வினவினால் மக்கள் மக்கர்கள் எனும் பதிலையே நாம் எதிர்பார்க்க முடியும். ஏனென்பது அவர்களது மரண பயத்தின் சீர்தூக்கலைப் பொறுத்துத்தான் அமைவதா யிருக்கும்.

ஜயந்தன் படையணி, கருணாவின் குழுவினரைக் கொன்றொழிக்கிறது. ஆனால் உண்மை அதுவாகத்தான் இருக்கும் என்பது தகவல்களை அறியாத பெரும்பாலானவர் களுக்குப் புரிவதில்லை. இதனைத் தெளிவு படுத்த வேண்டியது ஊடகங்களாக இருந்தாலும், இன்னமும் இவை மௌனம் சாதிக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மக்கள் எவ்வளவுக்கு ஒரு அச்சமான சூழலில் இருக்கிறார்கள் என்பதனை அவர் களுடன் பேச முனைபவர்களின் மூலம் மாத்திரம்தான் புரிந்துகொள்ள முடியும். புலிகள் - அரசு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து மூன்று வருடங்கள் நிறை வடையப்போகிறது. அதற்குள் புலிகளுக் குள் ஒரு பிரதேசவாதச் சிக்கல் ஏற்பட்டு அவ்வியக்கம் கருணா - பிரபா என இரண் டாகப் பிளவுபட்டுள்ளது.

இவ்வியக்கத் துக்குள் ஏற்பட்ட பிளவு கொழும்பு, மட்டக்களப்பு, பொலநறுவை, அனுராதபுரம், குருநாகல், அம்பாறை என இலங்கையின் பிரதான இடங்களிலே பல கொலை நிகழ்வுகளை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. பிளவு ஏற்பட்டு ஏழு மாதங்களில் மாத்திரம் 110 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

தமக்கு விரோதமானவர்களைக் கொல் வதையே போர் நிறுத்த காலச் செயற் பாடாகக் கொண்டிருக்கின்ற புலிகள், தாம் கொல்வதெல்லாம் தமது சகோதரர்களையே என்பதனை மறந்துவிடுகின்றனர். உயிரைப் பறிப்பதென்பது சாதாரணமாகிவிட்ட நிலையில், கடந்த நாலாம் திகதி பதவியேற்ற 59ஆவது பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, அதிகரித்து வருகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் விரைவில நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற தமிழ்க் குழுக்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளவும் தாம் உத்தேசித் துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கட்டுக்கோப்பான பொலிஸ் துறை அமைந்து இத் துறைக்குள் உள்ளவர்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாது எப்போது செயற்படத் தொடங்குகிறார்களோ அப்போது தான் இது சாத்தியம் என்பது உண்மை.

இந் நிலையில் சட்டவிரோதமாகப் பல்வேறு குழுக்களிடம் பாவனையில் இருக் கின்ற ஆயுதங்களை நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்; இவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. வடக்குக் கிழக்கு உட்பட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமே

> **தமக்கு விரோதமானவர்களைக் கொல்வதையே போர் நிறுத்த காலச் செயற் பாடாகக் கொண்டிருக்கின்ற புலிகள், தாம் கொல்வதெல்லாம் தமது சகோதரர்களையே என்பதனை மறந்துவிடுகின்றனர்.**

பாவனையில் இருக்கின்ற ஆயுதங்கள் கையளிக்கப்படுவதும் களையப்படுவதும் சாத்தியமில்லை என்பதும் அரசுக்குத் தெரிந்த விடயமே. இருப்பினும் இவ்வாறான அறிவிப்பொன்றை விடுத்திருக்கிறது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களிடமே பெருமளவு ஆயுதங்கள் பாவனையில் இருக்கின்றன. இவர்களிடமிருந்தே பெரும்பாலானவர்களுக்கு ஆயுதங்கள் கிடைக்கின்றன என்பது பரவலான கருத்து கிழக்கில் புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவாலும் இதே நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மக்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானவர்களாக இருந்தபோதும், வன்முறைகளையும் குற்றச் செயல்களையும் மனித உரிமை மீறல்களையும் வெறுக்கின்றனர் என்பதே உண்மை.

கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரதேசவாதச் சிக்கல் ஏற்படுத்தியிருக்கின்ற வடுவை ஆற்றுவதென்பது மிகப் பெரியதொரு பணியாகவே இருக்கும் என்பது ஆய்வாளர்களது கருத்து. ஆனால் இதனை உயிர்ப் பலிகளால் மாத்திரம் அடைந்திட முடியுமா என்பதே கேள்வி. கடந்த மாதம் வரை ஓரளவுக்குக் குறைந்திருந்த சகோதரப் படுகொலைகள் சூடு பிடித்திருப்பதனை மட்டக்களப்பு, பொலநறுவை எல்லைக் கிராமங்களில் நடந்து வருகின்ற சம்பவங்கள் மூலம் நாம் புரிந்துகொள்ள முடியும்.

வெலிகந்த, மன்னம்பிட்டி, செவனப்பிட்டி என சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களிலும் கூட இவ்வாறான கொலைகள் நடந்து வருகின்றன. கடந்த 5ஆம் திகதி வெலிகந்த சேனபுரவில் இரு குடும்பஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் மீது, கருணா தரப்பினர்களுக்கு உதவினார்கள் என்றே குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. கொலைகளுக்குக் காரணமாக சிலர் புலிகளுக்குள் ஏற்பட்ட சிக்கலைப் பயன்படுத்துகிறார்கள் என்ற விதமான குற்றச்சாட்டுகளும் இவ்விடத்தில் இல்லாமலில்லை.

மயானமாகத் தோற்றமளிக்கின்ற மட்டக்களப்பு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவது எப்போது? என்ற கேள்விக்கு மக்கள் மத்தியில் ஏற்படப் போகின்ற மாற்றங்கள்தான் பதிலளிக்கும்.

மட்டக்களப்பின் தமிழ் மற்றும் நகரப் பிரதேசங்களைக் கலங்கச் செய்துகொண்டிருந்த கிழக்கு வன்முறைகள் எப்படி முஸ்லிம்களுக்குள் புகுகிறது என்பது புதிய சந்தேகம் ஒன்றினைத் தோற்றுவிக்கிறது.

வெலிகந்தையில் 5ஆம் திகதி இருவரும், அக்கரைப்பற்றில் 10ஆம் திகதி இருவரும் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் வித்தியாசமான கலவரத்தினைத் தோற்றுவிக்கப் போகிறது என்பது புதுவித அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் தமிழ்த் தேசிய துரோகிகள் இருவர் பலி எனவும் கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் தேசத்துரோகி கருணாவுடன் இயங்கிவந்தவர்கள் எனவும் புலிகள் தரப்பினரால் கொலைகள் நடைபெற்றவுடன் வெளிவருகின்ற அறிக்கையாக இருக்கும்.

10.10.2004 ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.00 மணியளவில் வெலிக்கந்தை எல்லைக் கிராமமான நாகஸ்தனையில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர்.

மிலேச்சத்தனமான செயல்களில் ஈடுபட்டு தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே இன ஐக்கியத்தைச் சீர்குலைத்து சமாதான சூழ்நிலையை சிதைத்தழிக்கும் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவதாகப் பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இன்னமும் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டிருக்கின்ற கிழக்கு வன்முறைகள் முடிவுக்கு வர வேண்டும் என்பதுதான் அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளபோதும், அதனைப் பெற்றுத் தருவதற்கு முன்வருவதென்பது மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதற்குள் சிக்கித் தவிப்பதெல்லாம் மக்கள்

**இலக்குவன்**


என்பதனை ஞாபகங்கொள்ளுதல் இதில் முக்கியம்.

மொத்தத்தில் ஜனநாயக வழியில் செல்ல முற்படுகின்றவர்களுக்கு எப்போதுமே பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதனை, கிழக்கில் ஏற்பட்ட வன்முறைகளின் வளர்ச்சி காட்டி நிற்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

தளபதி கருணா விடயம் ஏன் இப்படி இன்னமும் கொலைகளையே குவித்து வருகிறது? இக் கொலைகள் பிரதேசவாதத்தை இன்னமும் தூண்டுவதோடு வன்முறைகளையும் வளர்த்து வருகிறது என்பதே உண்மையும் யதார்த்தமும் ஆகும். இத்தனைக்கும் முடிவு காணப் போவது மக்களாகத்தான் இருக்கும்.

# இதய அஞ்சலிகள்

தோற்றம்
16
05
1956



தில்லையம்பலம்
உமாகாந்தன்

மறைவு
28
09
2004

**சிறந்த அரசியல் விமர்சகரும், படைப்பாளியுமான தி.உமாகாந்தன் அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு மற்றுமொரு பாரிய இழப்புத்தான். போராட்டத்தின்பால் உந்தப்பட்டு தமிழரின் விடிவுக்காகப் போராடியவர். போரிடும் விதி திசை மாறியபோதும் ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர். அதற்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர். புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்தாலும், இலங்கையின் அரசியல் மாற்றங்களையும், அதனால் தமிழர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் துயரங்களையும் அவதானித்துக்கொண்டிருந்தவர். ஆக்கபூர்வமான கருத்துக்களை தனது எழுத்துக்களால் ஆணித்தரமாக முன்வைத்தவர். இன்று எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் அனைவருடனும் நாமும் பங்குகொள்கிறோம்.**

-நண்பர்கள், உறவுகள்.




> சக்தி சக்தி என்றால் செல்வம்
> தானே ஊறும் கண்டீரோ!
> சக்தி சக்தி என்றால் கல்வி
> தானே தேறும் கண்டீரோ!.
>
> சுப்பிரமணிய பாரதியார்–

ஜய ஜய



# மதியுள்ள திருடன்

**பாப்பா முரசு சிறுகதை**



ஒரு நாட்டில் ஓர் இளவரசன் இருந்தான். அவனுக்கு ஒரு வியாபாரியின் மகனும் ஓர் அறிஞரின் மகனும் நண்பர்களாவர். இம் மூவரும் குடித்து கும்மாளமிட்டு படாடோபமாக வாழ்ந்து வந்தனர். அதைக் கண்டு அவர்களின் பெற்றோர்கள் அவர்களைக் கண்டித்தனர்.

அதனால் மூன்று நண்பர்களும் செல்வத்தைத் தேடி வீட்டை விட்டுப் போவதென்று தீர்மானித்தனர். அவர்கள் பல நாட்கள் பயணம் செய்து இறுதியில் இரத்தினகிரி மலையை அடைந்து அங்கு மதிப்பு மிக்க இரத்தினக் கற்களைக் கண்டனர்.

''இக் கற்களை நாம் நல்ல விலைக்கு விற்கலாம்!'' என்று வியாபாரியின் மகன் கூறினான்.

''ஆனால் இவற்றை நாம் அருகிலுள்ள நகரத்திற்கு எவ்வாறு எடுத்துச் செல்வது? இடையில் ஒரு காடு இருக்கிறதே'' என்று இளவரசன் கேட்டான்.

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது! நாம் அக் கற்களை எடுத்து விழுங்கிவிட்டால் அவை நம் வயிற்றினுள் சென்றுவிடும். அப்போது திருடர்களாலும் கொள்ளையர்களாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது'' என்று அறிஞரின் மகன் கூறினான்.

பின்பு அவர்கள் தங்கள் உணவுடன் இரத்தினக் கற்களை வைத்து விழுங்கினர். இதனை ஒரு திருடன் மறைவிலிருந்து கவனித்து கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியாது.

'நானும் இவர்களுடன் செல்வேன். இவர்கள் தூங்கும்பொழுது இவர்களின் வயிற்றைக் கிழித்து இரத்தினக் கற்களை நான் எடுத்துக்கொள்வேன்' என்று நினைத்தான்.

அவ்வாறே அவன் அவர்களிடம் சென்று ''ஐயா! எனக்குத் தனியே பயணம் செய்வது பயமாக இருக்கிறது. நான் உங்களுடன் சேர்ந்து வரலாமா?'' என்று கேட்டான்.

அவர்களுக்கும் மற்றொரு துணை தேவையாக இருந்தது. ஆதலால் அவர்களும் சம்மதித்தனர். அவர்கள் நால்வரும் ஒன்றாகப் பயணப்பட்டனர். இரவு வந்தது. எனினும், அவர்களால் இன்னும் காட்டைத் தாண்ட முடியவில்லை.

''நாம் இரவுப் பொழுதை இங்கே கழிப்போம்'' என்று இளவரசன் கூறினான்.

இதைக் கேட்டு அவர்களுடன் வந்த திருடனுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் தனது திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்தான். எல்லோரும் படுக்கத் தொடங்கினர். அப்போது ஒரு கொள்ளைக் கூட்டம் அவர்களைச் சூழ்ந்தது.

''நீங்கள் எல்லோரும் இரத்தினகிரி மலையிலிருந்து வருகிறீர்களா?'' என்று கொள்ளையர் தலைவன் கேட்டான்.

அந்த நால்வரும் அதற்கு 'ஆம்' என்று தலையை அசைத்தனர்.

''அங்கே மதிப்பு மிக்க இரத்தினக் கற்களைக் கண்டெடுத்தீர்களா?'' என்று தலைவன் மீண்டும் கேட்டான்.

அதற்கு 'இல்லை' என்று அவர்கள் தலையை அசைத்தனர்.

''உங்களை நான் நம்பவில்லை! இவர்களை சோதனை செய்யுங்கள்'' என்று அவன் கூட்டத்தினருக்குக் கட்டளையிட்டான்.

அக் கொள்ளையர்கள் அவர்களைச் சோதனை செய்தனர். ஆனால் அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

''இரவு முழுவதும் இவர்களைக் கட்டிப் போடுங்கள். விடிந்ததும் அவர்களின் வயிற்றைக் கிழித்து இரத்தினக் கற்கள் இருக்கின்றனவாவென்று நான் தேடுகிறேன்'' என்று கொள்ளையர் தலைவன் கூறினான்.

அதனால் அந்த நால்வரும் ஒரு மரத்தில் கட்டப்பட்டனர். அவர்களோடு வந்த திருடன் என்ன செய்வது என்று இரவு முழுவதும் யோசித்துக்கொண்டிருந்தான்.

'எப்படியும் இந்தக் கொள்ளையர்கள் என்னைக் கொன்றுவிடப் போகின்றனர். நான் உயிரைத் தியாகம் செய்து அந்த மூன்று இளைஞர்களையும் காப்பாற்ற வேண்டும். அதனால், நான் முதலில் என்னைக் கொல்லச் சொல்வேன். என் வயிற்றில் ஒன்றும் இல்லையென்றால் அவர்கள் இந்த மூவரையும் விட்டுவிடுவார்கள்' என்று அவன் முடிவு செய்தான்.


பொழுது விடிந்தது. கொள்ளையர்கள் வந்தனர். திருடன் முதலில் தன்னைச் சோதிக்கும்படி கூறினான். அதுபோல் அவர்கள் அவன் வயிற்றைக் கிழித்துப் பார்த்ததில் அதில் ஒன்றுமில்லை.

''அடடா! எவ்வளவு பெரிய பாவம் செய்துவிட்டேன்! அவன் ஒன்றும் கொண்டு வரவில்லை என்று கூறினான், அதை நம்பாமல் நான் வயிற்றைக் கிழித்து அவனைக் கொன்று விட்டேனே. சரி! சரி! மற்றவர்களை விட்டுவிடுங்கள்'' என்று கொள்ளையர் தலைவன் உத்தரவிட்டான்.

இதனால் இளவரசன், வியாபாரியின் மகன் மற்றும் அறிஞரின் மகன் ஆகிய மூவரும் உயிர் பிழைத்தனர். அவர்களைக் கொல்ல வேண்டும் என்று திட்டம் போட்ட திருடனே இறுதியில் அவர்களைக் காப்பற்றினான்.

முட்டாள் நண்பனை விட அறிவுள்ள பகைவன் நல்லவன்!என்பது புரிகிறதல்லவா?


## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **20.10.2004**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **566**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 564

**பரிசுக்குரியவர்:**

**என். நிஜாதா, தரம் 8E, கல்/அல் அக்ஷா தேசிய பாடசாலை, 160, புதுக்குடியிருப்பு, கல்பிட்டி.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| றொ. துஷாந்தன், 7ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| வை. சரண்யா, 11/39 தொழில்நுட்பக் கல்லூரி வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை. | ஆர். பேர்ட்டி, மெட்ரோ சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை. |
| பா. கீர்த்தனா, தரம் 5, அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. | பஸீனா பளீல், 37/15 ஹிஜிரா மாவத்தை, மாலவபிட்டிய, குருநாகல. |
| பா. லினோஜன், இல 101/27, பட்டகாடு, வவுனியா. | எம். காயத்திரன், 254, கோயில் வீதி, பலகட்டுவ. |
| க. நிதூஷினி, இல. 20, பஸ் தரிப்பு நிலைய வீதி, இராகலை, ஆழ்கரனோயா. | ரா. கல்பனா, 175, லோவர் வீதி, பதுளை |

## ஆத்திசூடி

### ஆறுவது சினம்

**நீ ஆபத்தையும் துன்பத்தையும் விளைவிக்கக்கூடிய கோபத்தை அடக்கு.**

நன்றி: நிரஞ்சலா, கண்டி. –ஔவையார்

## பாம்பைக் கொன்ற வீரன்



சாலிக் கிராமம் அருகிலே
சைக்கிள் ஓட்டிச் செல்கையில்,
நாலு மீற்றர் இருக்கலாம்;
நடுவே பாம்பு கிடந்தது.

அஞ்ச வில்லை நானுமே;
அலற வில்லை நானுமே;
கொஞ்ச மேனும் தயக்கமும்
கொள்ள வில்லை நானுமே.


நிலவின் ஒளியில் வேகமாய்
நேராய் எனது சைக்கிளைத்
தலையைப் பார்த்து ஏற்றினேன்;
'சட்னி' என்றே எண்ணினேன்.

சிறிது தூரம் சென்றதும்,
திரும்பிப் பார்த்தேன் நானுமே.
சிறுவர் இருவர் என்னிடம்
சிரித்துக் கொண்டே வந்தனர்.

''உண்மைப் பாம்பு என்று நீ
ஓலைப் பாம்பை எண்ணினாய்.
நன்கு வீரம் காட்டினாய்,
நண்பா'' என்றே நகைத்தனர்.

## அதிசய உலகம்

### சாதனை



எந்தவித பிடிமானமும் இல்லாமல் வானில் மிதக்க முடியுமா?

முடியும் என நிரூபித்திருக்கிறார் மார்க்.சி.லீ என்பவர். இவர் வானிலை ஆராய்ச்சி மையமான நாஸாவின் உறுப்பினர்.

பூமியை நோக்கி ஈர்க்கப்படும் புவி விசைக்கும் வானத்தை நோக்கி நகரும் எதிர் விசைக்கும் இடையில் மிதப்பதென்பது சுலபமான விஷயமல்ல. கடுமையான பயிற்சியும் பாதுகாப்பான கவசங்களும் அவசியம். அந்தச் சாதனையினால் சுமார் 130 கடல் மைல் தூரத்துக்கு வானில் மிதக்க முடியும்.

இந்தச் சாதனையை இதுவரை யாரும் முறியடித்ததில்லை. இனி?

### இராட்சத பலூன்




இது என்ன? பெரிய சங்கு அல்லது மின்குமிழ் போல இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? அதெல்லாம் இல்லை. இராட்சத பலூன். இந்த பலூனில்தான் தன்னந்தனியே உலகை வலம் வரும் முதல் நபராக தான் இருக்க வேண்டும் என்று, நான்காவது முறையாக முயன்றார் ஸ்டீவன் ஃபாசெட் என்ற அமெரிக்க மில்லியனர். ஆனால் நடுவழியில் விண்ணில் பயங்கர மின்னல்களும் பனிக்கட்டி மழையும் இவர் பலூனைத் தாக்கி தெற்குப் பசிபிக் கடலில் தள்ளிவிட்டன! அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரை பகுதியில் 800 மைல் தொலைவில் கோரல் (Coral Sea) கடலிலிருந்து அவரை வாரிக்கொண்டு வந்து காப்பாற்றியிருக்கிறார்கள்!

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. கண்ணாடி தயாரிக்கத் தேவையான மூலப்பொருளான மண்ணுக்கு வழங்கும் பெயர் யாது?
   சிலிக்கா.
2. திரவ நிலையில் உள்ள உலோகம் எது?
   பாதரசம்.
3. ஒரே எடையுள்ள இரும்பையும் ஈயத்தையும் எடுத்தால் கனத்தால் கூடியது எது?
   ஈயம்.
4. கலோரி என்பது ஒளி அலகா, வெப்ப அலகா, மின்சார அலகா?
   வெப்ப அலகு.
5. பரனைட் வெப்ப அளவில் 0° சதம் அளவைக்குச் சமமான வெப்பநிலை என்ன?
   பரனைட்.
6. சாதாரண மின்குமிழ்களில் உள்ள மென்கம்பி எதனால் ஆனது?
   தங்கிதன் இழையால்.
7. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் நேராக வரும்போது ஏற்படும் கிரகணத்திற்கு என்ன பெயர்?
   சூரிய கிரகணம்.
8. சக்தி மாற்றத்தைப் பற்றிய கல்விக்கான பொதுப் பெயர் என்ன?
   பௌதீகம்
9. அடிப்படை வர்ணங்கள் எவை?
   சிவப்பு, பச்சை, ஊதா.
10. சோடியம் காபனேற்று என்பதன் சாதாரண பெயர் யாது?
   சலவைச் சோடா.

# தகவல் பெட்டி

## மலைகள் மோதும் போட்டி



மலைகள் மோதுவதைப் பார்க்க வேண்டுமானால் உண்மையில் ஜப்பானுக்குச் செல்ல வேண்டும். சூமோ மல்யுத்தம் என்பது மலைகள் மோதுவது போன்ற போட்டியே. டோக்கியோவில் நடைபெற்ற சூமோ விளையாட்டுப் போட்டியொன்றில் டொசினோநாடாவும், அசசோப்புவும் அண்டசராசரமே அதிரும் வண்ணம் போட்டியிட்ட காட்சியே இது.






## பறக்கும் மனிதர்

உலகில் ஜெட் விமான இயந்திரத்தின் உதவியுடன் பறக்கும் முதல் மனிதர் இவரே. வேஸ் ரோசி என்ற இவர் அண்மையில் சுவிற்ஸர்லாந்தின் பேக்ஸ் பிரதேசத்தில் வானில் பறந்துகொண்டிருந்த விமானத்திலிருந்து வெளியே பாய்ந்து, ஜெட் விமான என்ஜின் பொருத்தப்பட்ட இறக்கைகளின் உதவியுடன் சிறிது நேரம் வானில் உலாவி பரசூட்டின் உதவியுடன் தரையிறங்கினார். அது ஜெட் என்ஜின் பொருத்தப்பட்ட இறக்கைகளின் உதவியுடன் பறந்து, தரையிறங்கும் தொழில்நுட்பத்தை இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

## வாழ்நாள் முழுமைக்கும் ஒன்று



வளரும் பருவக் குழந்தைகளுக்கு வருடாவருடம் சப்பாத்து வாங்கிக் கொடுப்பது என்பது விலைவாசி உயர்ந்த இக் காலத்தில் பெற்றோருக்குச் சிக்கலான விடயமே. ஜேர்மன் பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்று பெற்றோர் கொஞ்சம் மகிழ்ச்சியடைக் கூடிய தீர்வொன்றைக் கண்டுள்ளது. கால் வளர வளர பாதங்களுக்குப் பொருத்தமாக இழுபட்டுப் பெரிதாகும் இம் மாதிரியான பாதணிகளைக் கண்டுபிடித்தமையே அந்தத் தீர்வாகும்.



## கொடி

அன்றாட வீட்டுக் கடமைகளில் ஒன்றாகக் கருதியே எமது குடும்பத் தலைவிகள் ஆடைகளைக் கழுவி உலர்த்துவர். ஆனால் சாதனை ஒன்றை நிகழ்த்துவதற்காக இந்தோனேசிய ஜாகர்த்தா வாசிகள் சிலர் கின்னஸ் புத்தகத்தில் பதியத் தக்க வகையில் துணிகளை உலர்த்துவதற்கு கொடியொன்றைக் கட்டினர்.

3 கிலோ மீற்றர் 891 மீற்றர் நீளமான இக் கொடியில் 22,000க்கும் மேற்பட்ட ஆடைகளைத் தொங்கவிட்டு சாதனையைப் படைத்தனர்.

## சிகை அலங்காரம்

சீனாவில் உள்ள பீஜிங் நகரில் ஒரு இசை விழா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை இரசித்தார்கள். அப்போது ஒரு இளைஞர் தன் ஹேர்ஸ்டைலை வித்தியாசமாக கத்திகளைப் போல அமைத்து வந்திருந்தார். எல்லோரும் அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தனர். அவர், கையில் கொண்டு வந்த உணவுப் பாக்கெட்டை பிரித்து சாப்பிட்டுக் கொண்டே நிகழ்ச்சியை இரசித்துப் பார்த்தார்.



# சி னி வி சி ட்

கண்கள் அழகாகத் தெரிய நடிகைகள் பல விதங்களில் காண்டாக்ட் லென்ஸ் அணிவார்கள். ஆனால், 'அது' படத்தில் கண் தெரியாமல் நடிக்கும் சினேகா அதற்காக காண்டாக்ட் லென்ஸ் போட்டு நடித்தி ருக்கிறார்.



ஜெய் ஆகாஷ் - மிஷா செவ்வேல்

## ஔவையார் வேடத்தில் மும்தாஜ்

ஔவையார் வேடத்தில் மும்தாஜ் நடிக்கப் போகிறார். இந்தக் கூத்து நடப்பது 'மகா நடிகன்' படத்தில்.

'மகாநடிகன்' படத்தில் முழுக்க தமிழ் இரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதத்தில் பல கேரக்டர்களை வைத்து அமர்க்களப்படுத்தியிருக்கிறார்கள்.

பல்லுப் போன பிறகும் பட்டாணி கடிக்கும் ஆள் நம்ம சத்யராஜ்தான்.

பிரபு, கார்த்திக் எல்லாம் பீல்ட் அவுட்டாகிவிட, இவர் மட்டும் ஜமாய்க்கிறார். 'மகா நடிகன்', 'சுயேட்சை எம்.எல்.ஏ.', 'அய்யர் ஐ.பி.எஸ்.', 'பெருமாள்சாமி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். "சம்பளம் ரூ.15 இலட்சம் தந்தால் போதும், முடியலையா ரூ.5 இலட்சம் குடுப்பா போதும்" என்று வாங்கிப் போட்டுக்கொண்டு வரிசையாகப் பல படங்களில் நடித்து வருகிறார்.

இதில் 'பெருமாள்சாமி' படத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றுபவராக நடிக்கிறார். இதற்காக கொல்கத்தா சென்று, சமீபத்தில் தனஞ்செய் என்பவனுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றிய மாலிக்கைப் பார்த்து, அவரது நடை, உடை, பாவனைகளை ஸ்டடி செய்யவிருக்கிறார்.

இப் படத்தில் முதல்வர் வேடத்தில் மல்லிகா நடிக்கிறார். கவர்ச்சிகாக நமீதாவை படத்தில் சேர்த்துள்ளார்கள். அவரும் இயக்குநரின் தேவையை உணர்ந்து சிக்கனமான உடைகளில் நடிக்கிறார்.

இந்தப் படத்தில் மும்தாஜும் இருக்கிறார். மும்தாஜ் இதில் நடிகையாகவே வருகிறாராம். கவர்ச்சி மட்டும் காட்டாமல் இரசிகர்களைக் கதிகலங்க வைக்கும் வகையில் ஔவையார் வேடத்திலும் ஒரு காட்சியில் வந்து அசத்தியுள்ளாராம்.



ஜெய் ஆகாஷ் - மிஷா செவ்வேல்

## சேரன் தேடிய ஹீரோயின்

போலிஸ் வேலையில் சேர முயன்று தோற்ற சுஜாதா என்ற ஐஸ்கிறீம் பெண்ணை, தனது அடுத்த படத்தின் ஹீரோயின் ஆக்கவுள்ளார் இயக்குநர் சேரன்.

'ஆட்டோகிராபை'த் தொடர்ந்து சேரன் இயக்கும் படம் 'டூரிங் டாக்கீஸ்' (விரைவில் தமிழில் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது). இதில் மீண்டும் தானே ஹீரோவாக நடிக்கும் சேரன், ஹீரோயினாக மீண்டும் கோபிகாவையே புக் செய்யத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், நாயகியை மாற்றினால்தான் படத்துக்கு ஃப்ரெஷ் லுக் இருக்கும், இல்லாவிட்டால் 'ஆட்டோகிராப் பார்ட்' - 2 மாதிரி ஆகிவிடும் என நண்பர்கள் எடுத்துச் சொல்ல, கோபிகாவுக்குப் பதிலாக புதிய ஹீரோயினாக ஒரு புது முகத்தைத் தேடிக்கொண்டிருந்தார் சேரன்.

இந்த நிலையில் இரு தினங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தைப் பிடித்தார் அட்டகாசமான லுக் கொண்ட ஒரு இளைஞி.

சென்னை ராஜரத்தினம் மைதானத்தில் பொலிஸ் தேர்வுக்காக வந்த பெண்களில் பார்க்க 'பளிச்' என்று இருந்த இவரை கேமராவில் சுட்டுத் தீர்த்தனர் போட்டோ ஜர்னலிஸ்டுகள்.

மறுநாள் பத்திரிகைகளின் முதல் பக்கத்தை அலங்கரித்தார். அப்போது இவர் பெயர் கூட யாருக்கும் தெரியாது. ஆனால், அவரோ பொலிஸ் செலக்ஷனில் முதல் சுற்றிலேயே அவுட் ஆகிவிட்டார். ஓட்டப் பந்தயப் போட்டியில் கலந்துகொண்டு பாதி தூரம் ஓடி மயங்கி விழ, பொலிஸ் தேர்வில் இருந்து ரிஜெக்ட் செய்யப்பட்டார்.

ஆனால், பத்திரிகைகளில் இவரது படத்தைப் பார்த்த சேரனுக்கு இவரை மிகவும் பிடித்துப் போய்விட, அவரை ஹீரோயினாக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளைப் பிடித்து சுஜாதாவின் முகவரியையும் போன் நம்பரையும் வாங்கி அவரைத் தொடர்புகொண்டு பேசியிருக்கிறது சேரன் தரப்பு.

இன்ப அதிர்ச்சியாக இந்தத் தகவல் வந்து சேர்ந்த நிமிடத்தில் இருந்து வானில் மிதக்க ஆரம்பித்திருக்கிறார் சுஜாதா.

## 'மதுர' வெற்றிப் படமா?

அப்பா எஸ்.ஏ.சந்திரசேகர் தயாரிப்பு பிளஸ் இயக்கத்தில் உருவாகவுள்ள புதிய படத்தில் மகன் விஜய் கௌரவ வேடத்தில் வருகிறார்.

'திருமலை', 'கில்லி', 'மதுர' என தொடர்ந்து பட்டையைக் கிளப்பி வரும் விஜய், அடுத்து 'திருப்பாச்சி' படத்தில் த்ரிஷாவுடன் நடித்து வருகிறார். இந்தப் படம் முடிந்த பிறகு குழந்தைகளைக் கவரும் வகையில் குழந்தைகள் சப்ஜெக்ட் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். அத்தோடு தனது தந்தை தயாரிக்கவுள்ள புதிய படமான 'சுக்ரனில்' கெஸ்ட் ரோலில் நடித்துக் கொடுக்கவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். 'திருப்பாச்சி'யில் பிஸியாக இருந்தவரிடம் 'திருமலை', 'கில்லி' ரேஞ்சுக்கு 'மதுர' படம் இல்லையே என்றபோது அவரும் அதை ஒத்துக்கொண்டார்.

"உண்மைதான். 'திருமலை' ஹிட். 'கில்லி' சூப்பர் ஹிட். இந்த இரண்டு படங்கள் மாதிரி 'மதுர' அமையவில்லை. ஆனாலும் படத்தை வாங்கிய விநியோகஸ்தர்கள், தியேட்டர் உரிமையாளர்கள் அனைவரும் நல்ல வசூல் பார்த்துவிட்டார்கள். அந்த வகையில் பார்த்தால் 'மதுர' திருப்தியான படம்தான்.

எப்போதும் ஏன் ஆக்ஷன் படங்களிலேயே நடிக்கிறீர்கள்; கேரக்டர் ரோல்கள் பண்ணும் ஆசை இல்லையா என்று என்னிடம் கேட்கிறார்கள். முதலில் என்னை நம்பி வரும் தயாரிப்பாளர்கள் நாலு காசு சம்பாதிக்க வேண்டும். அடுத்து என் படத்தைப் பார்க்க வரும் இரசிகர்கள் சந்தோஷமாகப் போக வேண்டும்.

மேலும் இப்போதைய டிரெண்ட் ஆக்ஷன் படங்கள்தான். என்னிடம் கதை சொல்ல வருகிற இயக்குநர்கள் எல்லாம் அத்தகைய கதைகளைத்தான் சொல்கிறார்கள். இப்படியிருக்கும்போது நான் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

கெட்அப் சேஞ்ச், வித்தியாசமான மேக்கப் என நடிக்க எனக்கும் ஆசைதான். ஆனால், அவற்றை இப்போது செய்யமாட்டேன். அப்படியே செய்தாலும் இன்னொருத்தர் காசில் அந்த ரிஸ்க்கை எடுக்கமாட்டேன். அது நிச்சயம் எனது சொந்தப் படமாக இருக்கும்" என்று கூறினார்.





ராஜ்கிரண்

## கவிதாலயாவின் 'ஐயா'

பழுப்பேறிய கதர் சட்டை, மேலே ஒரு துண்டு, பழைய மூக்குக் கண்ணாடி, அந்தக்கால ஸ்ட்ராப் வைத்த வாட்ச், எண்ணெயில் முக்கியது மாதிரி படிய வாரிய தலை, மா.பொ.சி.யின் வெண்ணைய் நிற மீசை, நெற்றியில் விபூதிப் பட்டை, கையில் காந்தியடிகளின் சத்திய சோதனை.


சரத்குமாரின் ஸ்டில்லே மிக வித்தியாசமாக இருந்தது. 'ஐயா' படத்தில் சரத்குமார் இப்படித்தான் வலம் வரப் போகிறாராம்.

இந்த ஸ்டில்லையே மிகப் பெரிய புளோ - அப் ஆக்கி மேடையின் பேக்கிரவுண்டில் ஒட்டிவிட்டு 'ஐயா' படத்தின் துவக்க விழாவை நடத்தினார் இயக்குநர் கே.பாலசந்தர்.

சூப்பர் ஹிட் படமான 'சாமி'யைத் தொடர்ந்து கே.பாலசந்தரின் கவிதாலயா தயாரிப்பில் இயக்குநர் ஹரி டைரக்ட் செய்யும் இரண்டாவது படம் இது.

ரஜினிக்காக எழுதப்பட்ட இந்தக் கதையில் ஹீரோவாக சரத்குமார் நடிக்கிறார். அவருக்கு ஜோடி மலையாளத்து தேவதை நயனதாரா.

படத்தில் சரத்குமாருக்கு இரட்டை வேடம். ஓல்டு கெட்-அப்பிற்காக அதிக சிரமத்தையெடுத்து நாம் முன்பு சொன்ன மிக விசேஷமான மேக்-அப் போட்டிருக்கிறார்களாம். விழுந்து, விழுந்து அதையே சொல்லிக்கொண்டிருந்தார் சரத்குமார்.



# மிஷாவுக்கு வந்த கோபம்!

இங்கு சகல விஷயங்களிலும் தாராளம் கடைப்பிடிக்கப்படும் என்று போர்டு மாட்டாத குறையாக மும்பை, பெங்களூர் வரவுகள் சான்ஸ் வேட்டையாடிக்கொண்டிருக்க, மிஷா என்ற நடிகை மட்டும் தனது கண்டிசன்களால் தயாரிப்பாளர்களையும், இயக்குநர்களையும் திணறடித்துக்கொண்டிருக்கிறார்.

'செவ்வேல்' என்ற படத்தில் ஜெய் ஆகாஷ்'க்கு ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார் மிஷா.

படத்தின் சூட்டிங் இலங்கையில் நுவரெலியா, கண்டி, கொழும்பு எனப் பல இடங்களில் நடத்தப்பட்டு, இப்போது ஜரூராக சென்னையில் நடந்துகொண்டிருக்கிறது. குஷால்தாஸ் கார்டனில் பாடல் காட்சி எடுக்கப்பட இருந்தது.

மிஷாவையும் வழக்கமான மும்பை வரவாக நினைத்துவிட்ட இயக்குநர் பிரிமுஸ், இந்தப் பாடல் காட்சிக்காக தொடைக்கும் மேல் அரையடி உயர்ந்த ஒரு மகா டேஞ்சரான குட்டை டாப்ஸை மட்டும் கொடுத்து, "போட்டுகிட்டு வாம்மா" என்று சொல்ல, அதைத் தூக்கி வீசியடித்துவிட்டாராம் மிஷா.

"இந்த டிரஸ்ஸைப் போடவேமாட்டேன், எனக்கு இந்த சினிமாவே வேண்டாம்" என்று கிளம்பிய அவரை அவரது தாயார்தான் சமாதானப்படுத்தினாராம். தாயாரின் பேச்சையும் கேட்காமல் மிஷா கிளம்ப, இருவருக்கும் கடும் வாக்குவாதம் நடந்திருக்கிறது சூட்டிங் ஸ்பொட்டிலேயே.

இந்தியிலேயே மகளை திட்டோ திட்டு என்று திட்டி அந்த உடையை அணியச் சொன்னாராம். ஆனால், தாயாரை பொளந்து கட்டிய மிஷா அதைத் தூக்கி வீச, கடைசியில் இயக்குநர்தான் இறங்கி வந்தாராம்.

கொஞ்சம் இறக்கம் உள்ள டாப்ஸைக் கொடுத்து ஆடச் சொன்னாராம். அப்புறம் தான் கோபம் தணிந்தாராம் மிஷா.



ஐஸ்வர்யாராய்

ப்ரீத்தி



சந்திரமுகி படத்தில் ரஜினி

# டாக்டர் ரஜினிகாந்த்!

'சந்திரமுகி' படத்தில் மனோதத்துவ டாக்டராக நடிக்கப் போகிறார் ரஜினி.

'ஜக்குபாய்' படத்தை விட்டுவிட்டு 'சந்திரமுகி'க்கு ரஜினி தாவியது ஒரு சுவாரஸ்யமான கதை.

மக்களவைத் தேர்தலில் தனது வாய்ஸ்'க்கு ஏற்பட்ட தோல்வியையடுத்து, மன நிம்மதி தேடி கர்நாடகாவில் உள்ள புண்ணிய தலங்களுக்கு ஷேத்திராடனம் செய்தார் ரஜினி.

அப்போது கர்நாடகத்தில் படு ஹிட்டாக ஓடிக்கொண்டிருந்த 'அப்தமிர்த்ரா' என்ற படத்தைப் பார்த்திருக்கிறார்.

விஷ்ணுவர்தனும் சௌந்தர்யாவும் (சௌந்தர்யாவின் கடைசிப் படம்) நடித்திருந்த அந்தப் படம் அவரை வெகுவாகக் கவர்ந்தது.

'ஜக்குபாய்'க்காக மற்ற வாய்ப்புகளை ஒதுக்கிவிட்டு, கதை விவாதத்தில் ஈடுபட்ட இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரைச் சமாதானப்படுத்தும் விதமாக ஒரு நட்சத்திர ஹோட்டலில் ரஜினி விருந்து வைத்தாராம். அப்போது 'அடுத்து உங்களுடைய டைரக்ஷனில் நடிக்கிறேன்' என்று உறுதி தந்திருக்கிறாராம்.

இதையடுத்து சிவாஜி புரொடக்ஷன்ஸ் ராம்குமாரைத் தொடர்புகொண்டு படத்தின் அவுட் லைனைச் சொல்லி, அதை நீங்கள் தயாரிக்கத் தயாரா என்று கேட்க, ரஜினியே நடிப்பதால் உடனே தயாரிக்க ஒப்புக்கொண்டுவிட்டார் ராம்குமார். இதையடுத்து பி.வாசுவைக் கூப்பிட்டு அவரையே தமிழிலும் இயக்கவும் சொல்லிவிட்டாராம் ரஜினி.

சந்திரமுகி, படத்தின் கதைதான் என்ன?

ஒரு நகரத்தில் பிரபல மனோதத்துவ டாக்டர் இருக்கிறார். அவருக்கு உளவியல் தொடர்பான எல்லாவித நோய்களையும் குணப்படுத்தும் திறமை உண்டு. அந்த டாக்டரிடம் அவரது நண்பர் ஒருவர் வருகிறார். தனது மனைவிக்கு விசித்திரமான நோய் என்றும், யாரையாவது பார்த்தால் அவரைப் போலவே பேசுகிறாள், நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொள்கிறாள் என்றும் அவளை நீங்கள்தான் குணப்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறார்.

அந்தப் பெண்ணை டாக்டர் எப்படிக் குணப்படுத்துகிறார் என்பதுதான் கதை.

மனோதத்துவ நிபுணராக ரஜினியும் அவரது நண்பராக பிரபுவும் (சிவாஜி புரொடக்ஷன்ஸ் ஆச்சே) நடிக்கிறார்கள்.

'வசூல்ராஜா' வில் போலி டாக்டர் கமலுக்கு நண்பராக வந்தவர் இதில் சைக்காலஜிஸ்ட் ரஜினிக்கு நண்பராக நடிக்கிறார்.

படத்திற்கு இசை வித்யாசாகர்.

ரஜினிக்கு ஜோடியாக நடிக்க சிம்ரனில் ஆரம்பித்து ஜோதிகா, ஸ்நேகா, ராணி முகர்ஜி, சோனாலி பிந்த்ரே என்று பல பேரைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவரை ரஜினி இறுதி செய்வார்.

பிரபுவுக்கு ஜோடியாக ரீமா சென்னாம். இந்தப் படத்துக்கு ரஜினிக்கு சம்பளம் என்ன என்பதுதான் இப்போது கோடம்பாக்கத்தில் முக்கிய பிரச்சினையாக விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

ரூபா 4 கோடியில் 'பாபா' படத்தைத் தயாரித்த ரஜினி அதை ரூபா 50 கோடிக்கு விற்றார். உடனே இன்கம் டாக்ஸ்காரர்களுக்கும் தகவல் போய்ச் சேர, அவர்களுக்கு விளக்கம் கொடுத்து வரியையும் செலுத்தினார்.

ஆனால், படம் வரலாறு காணாத பிளாப் ஆனதால் படத்தை வாங்கிய தியேட்டர்காரர்களுக்கு ரஜினி ரூ 25 கோடி வரை திருப்பித் தந்துவிட்டார். தயாரிப்புச் செலவு போக ரஜினிக்கு லம்ப் ஆக ரூ.21 கோடி வரை சம்பளக் கணக்கில் வரவானது.

இப்போது 'சந்திரமுகி'யைத் தயாரிக்கும் சிவாஜி புரொடக்ஷன்ஸ் ரஜினிக்கு குறைந்த பட்சம் இந்த ரூபா 20 கோடியையாவது தந்தாக வேண்டும். ஆனால், ரஜினி தரப்பில் ரூபா 25 கோடி வரை சம்பளம் கேட்கப்படுவதாக கோடம்பாக்கம் கிசுகிசுக்கிறது.

யப்பாடியோவ்!



சிந்து தொலானி



அலெக்ஸ் + செந்தில் + லிவிங்ஸ்டன்

## 'அது ரொம்ப அவசியம்'

"அநாகரிகமில்லாத செக்ஸ் தேவையான ஒன்று" என்று நடிகை லாரா தத்தா அதிரடியாகக் கூறியுள்ளார்.

ஸ்காட்லாந்தில் லாரா என்றால் புகழ்பெற்றவர் என்று அர்த்தமாம். பின்னாளில் உலக அழகியாகிப் புகழ் பெறப்போகிறார் என்பது முன்பே தெரிந்ததோ என்னவோ, பொருத்தமாக அவரது பெற்றோர் பெயர் வைத்துள்ளார்கள்.

பாலிவுட்டில் உடை களைவுப் போட்டி நடிகைகள் மத்தியில் முக்கிய இடம் பிடித்துள்ள லாரா தத்தா, 'அரசாட்சி' படத்தின் மூலம் தமிழ் இரசிகர்களுக்கும் தரிசனம் காட்டினார்.

வழக்கமான அர்ஜுன் படம் என்பதால், தியேட்டர்களை விட்டு படம் இரு வாரங்களிலேயே தூக்கப்பட்டுவிட்டது. இந்த இரு வாரம் கூட ஓடியதற்கு லாராவின் கவர்ச்சித் தரிசனம்தான் முக்கிய காரணம் என்கிறார்கள்.




## தேசிய ஞாபகங்கள்



ஓலை
குடிசைக்குள்
ஒழுகிய
மழைத்துளியாய்
என்னுள்
காதல்!

விதைத்தது
அவள் - இந்த
விபத்திற்குக்
காரணமும்
அவள்தான்!

நீ தந்த
ஏமாற்றத்தில்
இமை முழுக்க
இரத்தமடி!

உன்னால்
உறவையெல்லாம்
இழந்தேன்.
பரவாயில்லை,
உறவு வேண்டாம்;
உயிரையாவது
தந்துவிடு!

இன்னும்
சவுக்கடிகள்.
தோற்றுப்போன
அவள்
வார்த்தைகளோடு
வாழ்ந்துகொண்டிருக்கிறேன்!

*–நஸீம் ரூமி, புத்தளம்.*

## சிற்பமாய்!

பல முறை கட்டிய
என் பட்டுச் சேலை
இன்னைக்கு வந்தவனுக்காகவும்
கசங்கிக் கெடக்கு
கட்டிலில........

ஒவ்வொரு தடவையும்
எத்தனை பிரார்த்தனை
சொந்த ஊதியத்தில
குடும்பம் நடத்த
ஒருத்தனுக்கும் முதுகெலும்பில்லை.
சீதனம் கேக்கிறாங்க.....

பாவம்
சீர் கொடுத்து வாக்கைப்பட்ட
ஆம்பிளைங்க அம்மாமார்
எங்களின் ஏக்கப் பெருமூச்சில்
தீக்குளிக்கும் சாபம் அவங்களுக்கு
என்ன செய்ய நாங்க
எங்களைப் பெத்தவங்களை
யாரும் புரியலையே......

பணமாவோ பொருளாவோ
சேமிப்பு இருந்திருந்தா
இருபத்து நாலிலேயே
ரெண்டு பிள்ளை இருந்திருக்கும்
முடியாமப் போனதால
முகூர்த்தம் சரியில்ல
முப்பதைத் தாண்டியாச்சு.

ஒத்தப் புள்ளைக்கு
ஒண்ணும் நடக்கலையான்னு
மத்தவுங்க கேப்பாங்க.
சீர்வரிசை கொடுக்கணுமே
பெத்தவரின் பென்சனுக்கு
இன்னும்
எத்தனை வருஷமோ....

முதல்தரம் அழுதப்பவே
முழு நீரும் வடிஞ்சிருச்சி
காஞ்சு போன கண்ணுக்குள்ள
ஈரங்கூட இப்ப இல்ல.

வந்து போன வரனெல்லாம்
வாய்க்காமப் போனதில
எதிர்த்த வீடுகளுக்கு
எத்தனை சந்தோசம்
எனக்காக ஒருத்தன்
எங்க வீடு வரும் வரைக்கும்
ஊர் போடும் முள் மேல
ஒத்த ரோசாவா பூத்திருப்பேன்.

வரதட்சணை இல்லாம
வாழ்க்கையை தொலைச்சிட்டேன்
காலம் ஒன்னு
வரும் வரைக்கும்
வெறுங்கழுத்தா நானிருப்பேன்.

எப்ப ஒருத்தன்
என்னை வந்து
ஏத்துக்கப் போறானோ
அதுவரைக்கும்
பெத்தவுங்க மனசுக்குள்ள
பெருஞ்சுமையா நானிருக்கேன்.

*–திருமலை தாமரைமகன்.*

## அவள் நினைவு கூர்ந்த என் பிறந்த நாள்

வாழ்த்துச் சொல்ல
நீ இல்லாத போது
இப் பிறந்த நாள்
எனக்கெதற்கு?

நீ நினைவு கூராவிடின்
என்னுடைய பிறந்த நாளைக்
கூட
எனக்கு மறந்ததென்றால்
நீ நம்புவாயா?


என் கண்களைக் கூட
- திறப்பதில்லை;
கனவிலிருந்து நீ
சென்று விட்டால்....

நடப்பதற்குக் கூட
பலமின்றி
எப்படியெல்லாம்
நடக்கின்றேன்.
இறப்பதற்குக் கூட
வழியின்றி
இறக்காமலே இருக்கின்றேன்.

நடந்து வந்த
வழியைப் பார்த்தால்
கோணலாய்த் தெரிகின்றது
உன்னை மட்டும்
நினைத்துப் பார்க்க
அழகாகத் தெரிகின்றது

என் மனதை விட்டு
விலக்கத்தான்
நினைக்கின்றேன்,
என் இதயத்தில்
உன் நினைவுகள்
நிழலாடுகின்றன
என்னையும் மீறி.

*–பாரீஸ் அகமட்,*
*சவூதி அரேபியா.*



## மலட்டுக் கழுதைகள்!

குறைந்தபட்ச
நம்பிக்கைகளை அள்ளிக்கொண்டு
விடியலின்
ஒற்றை நட்சத்திரத்தை
தேடிக் கொண்டிருக்கின்றேன்,
ஒரு வெள்ளைக் காகத்தின்
நிகழ்கால, எதிர்கால
அதிர்ஷ்ட எச்சம் தேடி.

எங்கோ
தெருக்கோடியில்
காது கிழிந்து
என்
குயில் குரலின்
சப்தம் கேளாது
அந்த வெள்ளைக் காகம்
எலும்புகள் முளைத்த
பிணம் தோண்டுவதாக
ஒரு வானொலிச் செய்தி.

மண் போனவர்களே
உங்களைச் சுற்றிய
பாம்புகள்
எங்களையும் சுற்றின.
உங்களை மேய்ந்த
மாடுகள்
எங்களையும் மேய்கின்றன.

இன்றைய
வாழ்வின் நகர்வுகளில்
விதவைக் கனவுகள்
விரக்தியும் வியப்புமாய்
நேற்றைய
மரணங்களைக்
கவ்விக் கொண்டு.

மண் போனவர்களே
ஞாபகக் கனதியாய்
நிலாக்கால
பின்னிரவுகூட
நிட்டூரப் பயணிப்பில்

கல்லறைத் தளங்களில்
விழி கழற்றி
அழுகின்றோம்
தூரமாகிப்போன
உங்களை நினைத்தும்
ஒற்றை நட்சத்திரத்தின்
சுர்ப்பப்பையில்
சில
மலட்டுக் கழுதைகள்
கால் உதைத்தல் பற்றியும்.

*–தமிழடியான்.*

## கண்ணீர்ப் புஷ்பங்கள்!

உன்
நினைவுகளைச் சுமந்த
என் ஆத்மா
கண்ணீரில் நனைகின்றது.....

என்
விழிகள் பிழிந்தெடுத்த நீரில்
என்
வாழ்நாட்கள் கடக்கின்றன....

இன்று
என் சொந்த
அகராதியில் வசந்தமெனும்
சொல்லேயில்லை....
கண்ணீருடன் நிம்மதியின்றி
புரண்டு தவிக்கும்....
என்
வாழ்நாட்களுக்கெல்லாம்
நீயேதான் காரணம்....

பேனா முனையால்
எழுதி முடிக்க முடியாத
சோகமது....
இன்னும்
கண்ணீர்த் துளியாகிக்
கசிகின்றது.....

*–சுஜாஹ் முகைடீன்,*
*நிந்தவூர் – 18.*




## சொந்தம்

யாருக்கு யார் சொந்தம்
எனக்கு நீயும் இல்லை
உனக்கு நானும்
இல்லை.
நானும் நீயும்
எப்போதும் ஏழைதான்.
அரசியல் வாதிகளும்
அதிகாரமும்
உறவினர்களாக
இருக்கும் வரை
பணத்திற்கும் திமிர்
பிடித்துவிட்டது
தனவந்தர்களைப் போல.

பத்து ரூபாய் கூட
எங்கள் பைகளில்
இருக்க
வெட்கப்படுகின்றது.
பணம் இல்லாதவரைதான்
நீயும் நானும் சொந்தம்.
பணம் வந்துவிட்டால்
நீ யாரோ...நான்
யாரோ...?

*–எஸ்.ஹசீர், வவுனியா*
*கல்லூரி.*



# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*காலந்தோறும் தன்னைப் புதுப்பித்து முன்னகரும் கவிதையின் திசைகளை ஒவ்வொரு கால கட்டத்திலும் சில முக்கிய கவிஞர்கள் தீர்மானிக்கிறார்கள். கவிதையும் கவிதை மொழியும் அடைகிற பரிணாம மேன்மைகளுக்கு அவரவர் தனித்தன்மைகளுடன் பங்களிப்புச் செய்கிறார்கள். அந்த வகையில் தமிழ்ப் புதுக் கவிதை வரலாற்றில் தடம் பதித்தவர்களில் கலாப்ரியாவும் முக்கியமான ஒருவர். புதுக் கவிதை சுய விசாரணை சார்ந்த வெளிப்பாடாக மட்டுமே தேங்கியிருந்த காலகட்டத்தில், அன்றாட வாழ்வின் காட்சிகளையும் யதார்த்தங்களையும் கவிதைக்குள் மையப்படுத்தியவர் கலாப்ரியா.*

*கவிதையின் புனிதங்களைக் கலைத்து லௌகீக வாழ்வின் யதார்த்தங்களையும் அவலங்களையும் எள்ளலுடன் வெளிப்படுத்தின அவரது கவிதைகள். மாமூல் வடிவங்களுடன் கலாப்ரியா காட்டும் ஒத்துழையாமையும், மொழியின் பயன்பாட்டில் அவர் நடத்திய கலகமும்தான் புதுக் கவிதைக்கு அவரது பங்களிப்பு என்று கொள்ளப்படுகிறது.*



### இதென் அசிங்கங்களுக்கான அழகான கவிதை.....

இதில் நான்
அவைகளை
ஆராதிக்கவில்லை;
அநுபவிக்கிறேன்.

அவைகள் என்னின்
எல்லாப் புலன்களையும்
ஆளுகின்றன.
இதனால் நான்
அசிங்கமாகிப் போகிறேன்.

இவைகளுக்குத்
தூரம் சென்றால் மட்டுமே
தொடர்ந்து வரும்
நரகலின் மணமுண்டு.

அவைகளை
அசிங்கங்களில்
பசி முடித்து முகம்
பிதுக்கும்
பன்றிகளாய்
இனம் கண்டு
கொள்ளுங்கள்.

சில சமயம் இவைகள்
மனித நரகல்களை
மிகப் பத்திரமாய் உருட்டி
வாழ்க்கைப் பயனெய்தும்
வண்டுகளின்
லாவகத்தோடு என்னை
அணுகுகின்றன.
இதற்குப் பெயரிட
எனக்கு அறிவில்லை.

இது
கவலைப் பெண்ணிடம்
கடனுக்கு விபசாரம்
பண்ணும்
எனக்கான
அழகான கவிதை.

### சூர்யம்

"நீதான் தூங்கிருவியே
இன்னிக்கு
சிங்க வாகனத்தில்
அம்மன் வரும்
நான்ல்லாம் பார்ப்பேன்!"

கோலங்களை யாரும்
மிதியாமப் போக
வாசலில் காவலிருக்கும்
பிள்ளைகள் பேசிக்
கொள்ளும்.......

கொட்டாவிக் காற்று
கண்ணைச் சுற்றுகையில்
அம்மையிடம்
பிள்ளை சொல்லிச்
சாயும்,
"ஏழ் ழா
சப்பரம் வற்றப்போ
எழுப்பு"
ஆனால் எந்தப் பிள்ளை
சாள வாயுடன்
சப்பரம் பார்க்க
எழுந்து வந்து
தூக்கம் துறந்தது?.

### சட்டங்கள்

பேச மறுத்த
கிளிக்குத் தண்டனையாய்
இலவ மரத்தில்
கூண்டைக் கட்டிப்
போ.

வெள்ளம்
கொண்டு போக முடியாத
கிணற்று நீரை
கண் திறக்காத
நாய்க் குட்டிகளை,
காகமாய்ப் போட்டு
வெளிக் கொண்டு
வா

நவக்கிரகத் தனமாயின்றி
வரிசையாய்
கல்லறைகள் உள்ள
இடு காட்டில்
எரித்துப் போட
என்னை மட்டும்
விட்டுப் போ,
நீ.

### மையத்தைப் பிரிகிற நீர் வட்டங்கள்

பேனாவும்
நோட்டுகளும் என்னைப்
பெரியவனாக்கின
போது,

சிலேட்டுகளை
நெஞ்சில் அணைத்து
கழுத்தைச் சாய்த்து
மூக்கை யுறிஞ்சி
உன்னருகே நின்று
மனக் கணக்குப்
போடுகிற
சுகமொன்று
மறுக்கப்பட்டது.

பூக்களின் காதல்
நினைந்துதிர்கிற
புண்ணியங்கள்
இலைகளுக்கன்றி
மரங்களுக்கில்லை.

* * *


### மரணப் பிரக்ஞை

குழந்தைக்குச்
சோறூட்டுகிற அம்மையிடம்
முன்பு
சாவே இல்லாமல்
வாழ்ந்தவர்களைப் பற்றி,
மாடப் பிறைக்குள்
விழிகள் மட்டுமே
பிரதானப்பட்டுப் போன
காலங் காலமாய் இருந்த
முழிப் பிணங்களைப் பற்றி,

கதை சொல்லி,
ஊட்டச் சொல்.

பின்னால் அது
மரணப்
பிரக்ஞையின்றி
விகாரப் படச்
சௌகரியமாயிருக்கும்.

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : லோ. அன்ரன்
வயது : 20
முகவரி : சங்கானை வீதி, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : ஆர். கஜேந்திரன்.
வயது : 22
முகவரி : இல.188–190,8A செட்டியார் தெரு, கொழும்பு– 11.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், பத்திரிகை.



பெயர் : S.Sivabalan.
வயது : 35
முகவரி : P.O.Box-666, postal Code-111, Muscat - Sultanate, of Oman.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், உதைபந்தாட்டம், ரி.வி.



பெயர் : ஆர். ரவிச்சந்திரன்
வயது :--
முகவரி : இல.07, போகாவத்த கொலனி, பத்தனை.
பொழுதுபோக்கு : ஓவியம், வானொலி, பத்திரிகை.

# சிறுநீரகம் பாதிப்படைவது ஏன்?

வயிற்றின் பின்புறச் சுவரில், முதுகுத் தண்டின் இருபுறமும், பக்கத்திற்கு ஒன்றாக மொத்தம் இரண்டு சிறுநீரகங்கள் நமக்கு உள்ளன. அவரை விதை வடிவில் அமைந்துள்ள இச் சிறுநீரகங்கள் இரத்த சுத்திகரிப்புக்காக உள்ளவை. தினமும் சுமார் 190 லீற்றர் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, ஒன்றரையிலிருந்து இரண்டு லீற்றர் வரை சிறுநீரை உற்பத்தி செய்கின்றன.

உணவு செரிக்கப்படும்பொழுது இரத்தத்தில் யூரியா, கிரியாட்டினின், சல்பர், நைட்ரேட் போன்ற கழிவுகள் மிச்சப்படுவதுண்டு. இவை அளவுக்கு அதிகமாக இரத்தத்தில் தேங்கினால் நம் ஆரோக்கியம் சீர் குலையும். ஆகவே இவற்றைச் சிறுநீரில் வெளியேற்றி இரத்தத்தைத் தூய்மைப்படுத்துகின்றன, சிறுநீரகங்கள்.

அடுத்து, எலும்பு மஜ்ஜையிலிருந்து இரத்த சிவப்பணுக்கள் உற்பத்தியாவதற்குப் பல பொருள்கள் தேவை. அவற்றில் ஒன்றான எரித்ரோயாட்டின் என்ற மிக முக்கியமான இயக்குநீரைச் சுரப்பது சிறுநீரகம்தான்.

மேலும், உடலில் தண்ணீரின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டு, ஒவ்வொரு உறுப்பிலும் தண்ணீரின் அழுத்தத்தைச் சீராகப் பராமரிக்கும் பணியையும் சிறுநீரகமே செய்கிறது.

இது மட்டுமில்லாமல் 'ரெனின்' என்கிற நொதிப்பொருளைச் சுரந்து இரத்த அழுத்தத்தைச் சரியான அளவில் வைத்துக் கொள்ள உதவுவதும் சிறுநீரகம்தான்.

மற்றொன்று, எலும்புகளின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் வைட்டமின் டியைப் பக்குவப்பட்ட நிலையில் கிடைக்கச் செய்வதும் சிறுநீரகமே.

இப்படிப் பல முக்கிய பணிகளைக் கவனமாகச் செய்துகொண்டிருக்கிற சிறுநீரகம், சிலருக்கு திடீரென்றோ, கொஞ்சம் கொஞ்சமாகவோ பழுதுபட்டு ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடுகிறதே, ஏன்?

ஒரு புள்ளிவிவரப்படி இந்தியாவில் நூற்றில் இருபது பேருக்குச் சிறுநீரகக் கோளாறுகள் உள்ளதாகத் தெரிகிறது. ஆண், பெண், குழந்தை, சிறுவர், முதியவர் என்ற வித்தியாசமின்றி எல்லாத்தரப்பினருக்கும் இக் கோளாறுகள் வருவதை அது சுட்டிக் காட்டியுள்ளது.

இதற்குக் காரணம் என்ன?

முக்கியமானது, பாக்டீரியா கிருமிகள். இவை இரு வழிகளில் சிறுநீரகத்தைப் பாதிக்கின்றன. ஒன்று, நேரடியான பாதிப்பு; மற்றொன்று, மறைமுக பாதிப்பு.

சிறுநீரகத்தில் தொடங்கி சிறுநீர்ப் புறவழி வரையுள்ள சிறுநீர்ப் பாதையில் அடிக்கடி நோய்த் தொற்று ஏற்படுமானால், அந்தக் கிருமிகள் சிறுநீரகத்தை நேரடியாகத் தாக்கி அதைப் பழுதாக்கிவிடும். ஆனால் சாதாரண நிலையில் இப்படி ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு.

சிறுநீர்ப்பாதையில் அடைப்பு ஏற்பட்டு சிறுநீர் தேங்கினால் இந்த வாய்ப்பு அதிகமாகும். பொதுவாக குழந்தைகளுக்கும் சிறுவயதினருக்கும் பிறக்கும்போதே சிறுநீர்ப்பாதையில் அடைப்புக் கோளாறுகள் ஏற்படுவதுண்டு.

நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொண்டால், பிறக்கும் குழந்தைகளுக்கு இம்மாதிரியான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள்



உருவாகும். இவற்றின் விளைவாக சிறுநீர்ப்பாதையில் அடைப்பு உண்டாகி நோய்த் தொற்றுக்கு வழி செய்துவிடும். அது சிறுநீரகத்தைக் கெடுத்துவிடும்.

நடுத்தர வயதில் உள்ளவர்களுக்குச் சிறுநீரகக் கற்கள் அல்லது புற்றுநோய்க் கட்டிகள் மூலம் இந்த அடைப்பு ஏற்படும். ஐம்பது வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு சிறுநீர்ப்பையில் புராஸ்டேட் சுரப்பி வீங்கும். இது சிறுநீர் அடைப்பை ஏற்படுத்தும், நாட்கள் செல்லச் செல்ல சிறுநீரகம் செயலிழக்கும்.

பெண்களுக்குச் சிறுநீரை வெளியேற்றும் குழாய் மிகச் சிறியதாக இருப்பதாலும், அது ஆசன வாய்க்கு அருகில் இருப்பதாலும் ஆசனவாயிலிருந்து நோய்க் கிருமிகள் சிறுநீர்த் துவாரத்திற்கு மிக எளிதில் செல்ல முடியும். இதனால்தான் பெண்களுக்கு அதிக அளவில் சிறுநீரகத் தொற்றுகள் உண்டாகின்றன. இவற்றுக்கு முறைப்படி சிகிச்சை செய்யத் தவறினால் விரைவில் சிறுநீரகம் பாதிக்கப்படும்.

கர்ப்ப காலத்தில் கருப்பையில் உள்ள சிசு தாயின் சிறுநீர்ப் பையை அழுத்துவதன் காரணமாக சிறுநீர்ப்பாதையில் தற்காலிக அடைப்பு ஏற்பட்டு சிறுநீரகம் சோர்வடைய வழி பிறக்கும். உடம்பில் வேறு எங்காவது காசநோய் பாதித்திருந்தால் அந்தக் கிருமிகள் இரத்தத்தின் வழியாக சிறுநீரகத்திற்குச் சென்று சிறுநீரகக் காசநோயை உருவாக்கிவிடும். இதுவும் சிறுநீரகத்தைப் பாதிக்கக் கூடியதே.

இந்த வாய்ப்பு இளைஞர்களுக்கு அதிகம்.

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறிகட்டும்' என்று கூறுவார்கள். சிறுநீரகக் கோளாறுகளைப் பொறுத்தவரை இது உண்மை. உதாரணமாக தொண்டையில் அடிக்கடி டான்சில் தொல்லை ஏற்படுகின்றவர்களுக்குச் சிறுநீரகம் திடீரென்று பழுதாகிவிடும். சொறி, சிரங்கு, நாள்பட்ட புண்கள் உள்ளவர்களுக்கும் இந்த நிலைமை ஏற்படலாம்.

இதற்கு அடிப்படைக் காரணம் இதுதான். டான்சில், சிரங்கு, புண்கள் போன்றவற்றில் கிருமிகள் வளரும்போது அவற்றுக்கு உயிர் எதிரிகள் உருவாகும். இவை சிறுநீரக அணுக்களில் சுழற்சியை ஏற்படுத்திவிடும். விளைவு சிறுநீரகம் பாதிப்பு.

இவை தவிர, உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குச் சிறுநீரகம் கெடுவதற்கு நிறைய வாய்ப்புண்டு. ஏனென்றால் இரத்த அழுத்தத்தை முறையான மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தத் தவறும்போது சிறுநீரகத்திற்குச் செல்கின்ற இரத்தத்தின் அளவு குறைந்துவிடும். நாளடைவில் சிறுநீரகம் சீர்குலையும்.

இன்னொரு காரணம், சர்க்கரை நோய். சர்க்கரை நோயாளிகளில் சுமார் 15 சதவீதம் பேர் சிறுநீரகக் கோளாறுகளால் சிரமப்படுகின்றனர் என்கிறது ஒரு மருத்துவப் புள்ளி விவரம்.

ஐந்து வருடங்களுக்குத் தொடர்ந்து சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தத் தவறுகிறவர்களுக்கு சிறுநீரகம் செயலிழப்பது உறுதி என்று நிரூபணமாகியுள்ளது. காரணம், இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக தேங்குகின்ற சர்க்கரை, சிறுநீரக வடிப்பிகளிலும் தேங்கிவிடுவதால் சிறுநீரகம் சீக்கிரமே கெட்டுப் போகிறது.

எய்ட்ஸ் மற்றும் இணைப்புத் திசு நோய்களால்கூட சிறுநீரகம் பாதிக்கப்படுவதுண்டு. பல்வேறு மருந்துகளின் பக்கவிளைவாகவும் சிறுநீரகம் சீர்கெடலாம். உதாரணத்திற்கு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள், உடல்வலியைப் போக்கும் மருந்துகள், சில நாட்டு மருந்துகள் போன்றவை சிறுநீரகத்திற்குத் தீமை விளைவிப்பவை.

இப்படி பல்வேறு காரணங்களால் சிறுநீரகம் பழுதாகும்போது ஆரம்பநிலையிலேயே சிகிச்சை பெற்றுவிட்டால் பிரச்சினை பெரிதாவதில்லை. தவறினால் சிறுநீரகச் செயலிழப்பு சிறிது சிறிதாகத் தீவிரமாகி ஒரு கட்டத்தில் நிரந்தரமாகவே சிறுநீரகம் செயலிழந்துவிடும். இது உயிருக்கே உலை வைக்கும்.

அப்போது டயாலிசிஸ், சிறுநீரக மாறச் சிகிச்சை போன்ற தீவிர முயற்சிகள் தேவைப்படும். இவற்றுக்கு அதிகப் பணச் செலவு ஆகும். தும்பை விட்டு வாலைப் பிடிப்பானேன்?

சிறுநீரக நோய்க்கான ஆரம்ப கட்ட அறிகுறிகளைத் தெரிந்துகொண்டு, சிறுநீரக நோயை முற்றிவிடாமல் தடுக்க வேண்டியது வெகு முக்கியம்.




# லேடீஸ் ஸ்பெஷல்

## புற்றுநோயை விரட்டும் காலி:.ப்ளவர்!

இது காய்கறி வகை என்றாலும் சாப்பிடக்கூடிய பூ. மூலிகை இனத்தைச் சேர்ந்தது. முட்டைக்கோஸும் காலி:.பிளவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

நடுத்தண்டைச் சுற்றி அடர்த்தியாக அடுக்காக வெள்ளை நிற சிறு பூக்கள் கொண்ட ஒரு பெரிய பூ. மேலிருந்து பார்த்தால் வெள்ளையாக ஒன்று போலத் தெரியும். இந்த வெள்ளைப் பகுதியை ஒட்டி நெருக்கமாக பச்சை இலைப் பகுதி படர்ந்து இருக்கும். இதனுடைய முக்கிய வேலை வெள்ளைப் பூவை சூரியனிடமிருந்து காப்பாற்றுவதுதான். வெயில் பட்டு பூக்கள் குளோரோ:.பிலை உற்பத்தி செய்யாமல் தடுக்கிறது. சிலசமயம் இந்த வெள்ளைப் பூக்கள் இலையை விட்டு வெளியே தலை நீட்ட ஆரம்பித்தால் விவசாயிகள் இந்த இலையினால் பூவின் தலைக்கு மேல் சேர்த்துக் கட்டிவிடுவார்கள். அதிக வெயில் பட்டால் பூவின் வெள்ளை நிறம் மாறி, ஒருவித கெட்ட வாசனையும் வரும்.



***தேர்ந்தெடுப்பது*** : நல்ல வெள்ளை நிறத்தில் அதை ஒட்டியுள்ள இலை பசுமையாக இருக்க வேண்டும். பூவின் அளவு பெரிதாகவோ சிறியதாகவோ இருக்கலாம். சிலவற்றில் சிறிய பூக்களுக்கு இடையில் இலைகள் துளிரும். இதனால் எந்தக் கெடுதலும் இல்லை. இலையை நீக்கிவிட்டு உபயோகிக்கலாம். தண்டு நடுவிலோ, பூக்களுக்கு இடையிலோ பெரிய பச்சைப் புழு இருக்கும். மொட்டிலேயே உள்ளே போய் இதன் சத்தைச் சாப்பிட்டு வளரும். பார்க்க உடனே தெரியாது. கூர்ந்து பார்த்தால் புழு இருக்கும் இடத்தைச் சுற்றி கறுப்பு புள்ளிகள் இருக்கும். அப்படியே வாங்கி வந்துவிட்டாலும் புழு இருக்கும் பகுதியை நீக்கி விட்டு உபயோகிக்கலாம். சமைப்பதற்கு முன் பூவை நறுக்கிக் கொதிக்கும் நீரில் போட்டு எடுக்கவும். புழுக்கள் இறந்து வெளியே வந்துவிடும். பூக்கள் மஞ்சளாக இருந்தால் பழசு என்று அர்த்தம்.

:.ப்ரிஜ்ஜில் வைக்கும்போது பிளாஸ்டிக் பைகளில் வைக்கக் கூடாது. அடியிலுள்ள கிரிஸ்பரில் வைக்கவும். அதுவும் தண்டுப் பகுதி மேல் பக்கமாக இருக்குமாறு வைத்தால் ஈரம் பூவின் மேல் தங்காது.

***சமைப்பது*** : இதில் ஒரு வித தாவர அமிலம் உள்ளது. வேகும்போது கந்தகக் கலவையாக மாறி வாசனை வருகிறது. அதிக நேரம் வேக வைத்தால் வாசனை அதிகமாகும். சத்து வீணாகும். அலுமினியம், இரும்பு பாத்திரத்தில் வேக வைக்கக் கூடாது. இதிலுள்ள கந்தகக் கலவை அலுமினியத்துடன் சேர்ந்தால் பூ மஞ்சளாகிவிடும். இரும்பு இதை பிரவுன் கலராக்கிவிடும். தரைக்கு மிக அருகில் விளைவதால் பூச்சிகள், கிருமிகள் இருக்கும். நன்றாகக் கழுவி உபயோகிக்கவும்.

சமைக்குமுன் நன்றாகக் கழுவி மேலே உள்ள இலைகளை நீக்கி, அடித்தண்டை வெட்டி எடுக்கவும். பூ இருக்கும் தண்டை தூக்கி எறிய வேண்டாம் அதையும் சேர்த்துச் சமைக்கலாம். பூக்கள் சேரும் நடுத்தண்டை தூக்கிப் போட்டு விடலாம். பூ வேகும்போது வரும் கந்தக வாசனை சிலருக்குப் பிடிக்காது. ஹோட்டல்களில் வாசனை தெரியாமல் இருக்க இதை பாலில் வேக வைப்பார்கள். காலி:. பிளவரின் மிக முக்கிய சத்தான :.போலாசின் சமைக்கும்போது வெளியேறிவிடும். அதனால் வேகவைத்த நீரைக் கீழே கொட்டாமல் சூப், இரசம், குழம்பு எதிலாவது சேர்த்தால் சத்து வீணாகாது. மேலை நாடுகளில் காலி:.பிளவரில் சீஸ் அல்லது எண்ணெய் தடவி சாப்பிடுவார்கள்.

***உணவுச் சத்து*** :- இதில் விட்டமின் மிக அதிகம். ஒரு நாளைக்குத் தேவைப்படும் அளவை விட 20 வீதம் அதிகமாக உள்ளது. ஒரு கப் நறுக்கிய பூவில் கலோரி 24, புரதம் 2 கிறாம், மாச் சத்து 5 கிறாம், கொலஸ் டிரால் 0, விட்டமின் சி 72 மில்லி கிறாம். :.போலாசின் 66 மைக்ரோ கிறாம், பொட்டாசியம் 355 மில்லி கிறாம்.

***மருத்துவ சக்தி*** :- இவற்றிற்குப் புற்றுநோயைத் தடுக்கும் சக்தி உள்ளது. பூ வேகும்போது Isothio Cyanates என்னும் இரசாயனம் வெளிவருகின்றது. இது உடலினுள் சென்று உடல் தானாக உற்பத்தி செய்யும் Phase 11 என்ற புற்றுநோய் தடுக்கும் பொருளை அதிகமாகச் சுரக்கச் செய்கிறது.

# நலமாக வாழ்வோம்

# சூரிய நமஸ்காரம்

சூரியன் உதயமாகும் நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்து வந்தால் உண்டாகும் நற்பலன்கள் அளவிடற்கரியன.

1. வயிறு, நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், குடல்கள், முதுகுத்தண்டு ஆகியவை பலம் பெறுகின்றன.

2. சுவாசம், இரத்த ஓட்டம், ஜீரண உறுப்புகளின் வேலையைத் தூண்டும் நரம்புகள் (மூளையின் மையத்திலுள்ளது) இப் பயிற்சியால் புத்துணர்ச்சி பெறுகின்றன.

3. அலைபாயும் மனதை ஒருமுகப் படுத்துகிறது.

4. மெதுவாகச் செய்யும்போது உடல் அல்லது மனம் சோர்வடைந்திருந்தால் புத்துணர்ச்சி பெறுகிறது.

5. உடல் எடையைக் குறைக்கிறது.

6. இப் பயிற்சியை ஆரம்பிக்க அரைமணி நேரம் முன்பாக தேன் கலந்த நீரை 1 டம்ளர் அருந்திவிட்டு செய்தால் உடல் எடை சீக்கிரம் குறைகிறது.

7. பெண்கள் இப் பயிற்சியைத் தொடர்ந்து செய்துவந்தால் கர்ப்பம் தரித்த பிறகு அதிக பால் சுரக்கும்.

8. மாதவிடாய்க் கோளாறுகளைச் சரி செய்கிறது. வாதம், வயிற்றுக் கோளாறுகளைத் தடுக்கிறது.


9. நரம்புத் தளர்ச்சி நோய்க்கு மிக முக்கியமான பயிற்சி.

10. உடல் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்று வலிமையும் அழகும் மினுமினுப்பும் பெற்றுத் திகழும்.

11. நீண்ட ஆயுள் உண்டாகும்.

12. கண் பார்வை சிறிது சிறிதாக விருத்தியடையும்.

13. யோகாசனப் பயிற்சிகளுக்கு முன்பு சூரிய நமஸ்காரம் செய்துவிட்டுப் பயிற்சியைத் தொடங்கினால் உடல் பிடிப்புகள் இன்றி ஆசனங்கள் எளிதில் பழகலாம். மூச்சு வாங்குவதில்லை.




### தயார் நிலை

செய்முறை :-

விரிப்பின் மீது கிழக்குத் திசை நோக்கி கையை கூப்பிய நமஸ்கார முத்திரையுடன் நிற்க வேண்டும். கால்கள் சேர்ந்து இருக்க வேண்டும். இது ஆயத்த நிலையாகும்.

1. கூப்பிய கையைப் பிரிக்காமல் பின்நோக்கி வளைந்து கையைத் தலைக்கு மேல் பின்னோக்கிக் கொண்டுவர வேண்டும். கை முட்டியை வளைக்கக் கூடாது. இது சக்ராசன நிலையாகும்.

2. இப்போது முன்னோக்கிக் குனிந்து கால்களை வளைக்காது கால் விரல்களைத் தொட வேண்டும். இது பாதஹஸ்தாசன நிலையாகும்.

3. உள்ளங்கைகளைத் தரையில் ஊன்றி வலது காலை வேகமாகப் பின்னோக்கி கொண்டுவர வேண்டும். கால் முட்டியைத் தரையின் மீது அழுத்தி நிமிர்ந்து பார்க்க வேண்டும். இது ஓட்டப் பந்தயத்திற்குத் தயாராக நிற்கும் நிலையாகும்.

4. இடது காலையும் வேகமாக பின்னோக்கிக் கொண்டுவர வேண்டும். இரண்டு பாதங்களையும் ஒன்று சேர்த்து கால் விரல்கள் மட்டும் தரை மீது வைத்து கால் முட்டிகளை நீட்டி உடம்பை பூமிக்கு இணையாக வைத்து உள்ளங்கைகளை ஊன்றி நிமிர்ந்து பார்க்கவும். கழுத்துப் பட்டியில் ஒரு பந்து வைத்தால் உருண்டு தரைக்கு வர வேண்டும். அந்தளவுக்கு உடம்பு பூமிக்கு இணையாக சமமாக இருக்க வேண்டும்.

5. இரண்டு முட்டிகளையும் தரையின் மீது வைத்து உடம்பைப் பின்னோக்கிக் கொண்டுவந்து குதிக்கால் மீது உட்கார வேண்டும். உள்ளங்கைகளை மாற்றம் செய்யாது நெற்றிய பொட்டை தரையில் வைத்துப் ஓய்வு எடுக்க வேண்டும்.

**யோகா தொடரும்........**

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## மாமைட் பிஸ்கட் (20 பேருக்கு)

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 1/2 கிலோகிறாம் |
| மாமைட் | - 1/2 போத்தல் |
| மாஜரின் | - 1 மே.க.(நிரப்பி) |
| உப்பு | - அளவிற்கு |
| தேங்காயெண்ணெய் | - 1/2 போத்தல் |
| அப்பச்சோடா | - 1 சிட்டிகை |
| கோதுமை மா (பலகைக்குப் பூசுவதற்கு) | - 2 மே.க.(நிரப்பி) |
| மிளகு தூள் | - அளவிற்கு |

**செய்முறை:**

கோதுமை மாவுடன் அப்பச்சோடா வைக் கலந்தரித்துப் பாத்திரத்தி லிட்டு, மாஜரின், உப்பு என்பவற்றை யிட்டு நன்கு பிசிறிச் சேர்த்துக் கொண்ட பின்பு தண்ணீரை அளவாக விட்டுக் கையிலொட்டாத பதத்திற்கு நன்றாக அடித்துக் குழைத்துக் கொள்க.

பின்பு மாப் பூசிய பலகையில் குழைத்த மாக் கலவையை வைத்து மிக மெல்லியதாக உருட்டி, மாமைட்டை மேற்பரப்பு முழுவதும் பரவலாகப் பூசி மிளகு தூளை விரும்பிய அளவு தூவிக்கொண்டபின் நீளப்போக்கில் அரை அங்குல அகலமும் 3 அங்குல நீளமுள்ள துண்டுகளாக வெட்டி இரண்டு முறை முறுக்கிக் கொண்டபின் கொதிக்கும் எண்ணெயில் போட்டுப் பொன்னிற மாகப் பொரித்தெடுத்து ஆறிய பின்பு பரிமாறலாம்.

# ஒரு தாய் 01 மகள்

**டேனியல் ஸ்டீல் எழுதிய ACCIDENT என்ற ஆங்கில நாவலை தழுவியது.**

ஒரே ராத்திரியில் தன் வாழ்க்கை தலைகீழாக மாறப்போகிறது என்பதை அறியாதவளாக, சான்பிரான்ஸிஸ்கோவில், கோல்டன் கேட் பாலத்தைத் தாண்டிக் காரை ஓட்டிக்கொண்டிருந்தாள் பேஜ். பாலத்தின் கீழே ஓடும் தண்ணீர் பார்க்கப் பார்க்கப் பிரமிப்புக் கொடுத்தது.

அது ஓர் இனிமையான மாலை நேரம். ஏப்ரல் மாதத்துச் சனிக்கிழமை. பட்டுப் போன்ற காற்று கன்னங்களை வருடிக்கொண்டிருந்தது. நாள் பூரா வெளியிலேயே சுற்றிக்கொண்டிருக்கலாம் போல ஆசை ஏற்படுத்தக் கூடிய உல்லாசமான பருவ நிலை.

பக்கத்தில் இருக்கும் மகன் ஆண்ட்ருவை ஓரக் கண்ணால் கவனித்தாள். போன வாரம்தான் அவனுக்கு ஏழு வயதாகியிருந்தது. அவளைப் போலவே அவனுக்கும் கறுத்த முடி. தலையில் அணிந்திருந்த பேஸ்பால் குல்லாவை எடுத்ததும் முடி சிலிர்த்துக்கொண்டு நின்றது. முகம் பூரா திப்பி திப்பியாகப் புழுதி. விளையாடிவிட்டு வந்த களைப்புத் தீர ஸீட்டில் ஹாய்யாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். அவனுக்கும் அவன் அம்மாவுக்குமிடையே உள்ள பாசமும் பந்தமும் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தன.

''இன்று உன் ஆட்டம் பிரமாதம், ஆண்டி! அந்தப் பந்தை என்ன அருமையாகக் காட்ச் பிடித்தாய்'' என்று மகனைப் பாராட்டினாள் பேஜ். அவனுடைய விளையாட்டுகளுக்கும் சரி, பள்ளிக்கூட நாடகங்களுக்கும் சரி, அவளும் கூடவே போய் இருப்பது வழக்கம். அவளுக்கு அது ரொம்பப் பிடிக்கும். ஆண்ட்ருவுக்கும்தான்.

''அந்தப் பந்தை அநேகமாய்க் கோட்டை விட்டுவிட்டோம் என்றே நான் நினைத்தேன் அம்மா'' என்று கூறிச் சிரித்தான் ஆண்டி...

அவனுடன் சேர்ந்து பேஜும் சிரித்தாள். கணவன் பிராடும் இப்போது இங்கே இருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் என்ற ஏக்கமும் மனசின் ஆழத்தில் ஏற்பட்டது.

இப்போதெல்லாம் சனிக்கிழமை சாயங்காலங்களில் பிராட் வீட்டில் இருப்பது கிடையாது. எப்போதும் வேலை என்று வெளியூர் போய்விடுகிறான் அல்லது சிநேகிதர்களுடன் கால்.்.ப் விளையாடக் கிளம்பிவிடுகிறான்.

சனி ஞாயிறுகளில் பேஜுக்கு ஒழிவே கிடையாது. ஆண்டியுடன் விளையாட்டு மைதானத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும் அல்லது மகள் ஆலிஸன் எங்கெங்கோ மூலை முடுக்குகளில் நடக்கும் நீச்சல் போட்டிகளுக்குப் போகும்போது துணையாகப் பேஜும் போக வேண்டும் அல்லது அவர்களுடைய செல்ல நாய் லிஸ்ஸிக்கு ஏதாவது காயம் பட்டு, அதை டாக்டரிடம் காட்ட வேண்டியிருக்கும் அல்லது குழாயில் தண்ணீர் வராது. கூரையில் ஒழுகும்.

இதையெல்லாம் சரி செய்வதிலேயே பேஜுக்கு நேரம் சரியாகிவிடுகிறது. கணவன் ஊரில் இருக்கும் நாட்களில் கூட, அவனுடன் சிறிது நேரம் அந்தரங்கமாக இருப்பதென்பது ராத்திரியில் குழந்தைகள் தூங்கிய பிறகுதான்.

கல்யாணமாகிப் பதினைந்து வருடமாகிறது. இன்றைக்கும் பிராட்டிடம் அவளுக்குக் கொள்ளைக் காதல். முன்பு அவள் நியூயோர்க் நிறுவனமொன்றில் கலைப் பிரிவில் பணியாற்றி வந்தாள். இப்போது எந்த வேலையிலும் இல்லை. ஆனால் ஓவியங்கள் வரைவதை விடவில்லை. ஆண்டியும் ஆலிஸனும் படிக்கும் பள்ளிக் கூடங்களில் அவள் வரைந்த ஓவியங்களைச் சிறப்பாக மாட்டி வைத்திருக்கிறார்கள். ஆலிஸனின் அறையில் கூட ஒரு நீச்சல் குளத்தைச் சுவரோவியமாக வரைந்து தந்திருக்கிறாள்.

காரை ஓட்டிக்கொண்டிருந்தவள், ''ஐஸ்கிரீம் சாப்பிடறியா ஆண்டி?'' என்றாள் மகனிடம்.



''ஓ எஸ்!'' என்று வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான் ஆண்டி. வாயெல்லாம் பல்லாக என்று சொல்வது தப்பு. வாயில் பல்லைக் காட்டிலும் ஈறுதான் அதிகம் தெரிந்தது!

''சாக்லேட் சாப்பிட்டுச் சாப்பிட்டு உன் பல்லெல்லாம் கெட்டுவிட்டது. பல் டாக்டரிடம் அழைத்துப் போய்ப் பொய்ப் பல் மாட்டப் போகிறேன்'' என்றாள் பேஜ்.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

''ஐயையோ, வேண்டாம்மா!'' என்று மறுபடியும் சிரித்தான் அவன்.

காரை நிறுத்தி அவனுக்கு ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்தாள் பேஜ். அவன் ஆனந்தமாகச் சாப்பிடுவதைப் பார்க்க அவளுக்கும் ஆனந்தமாக இருந்தது. மகனை முத்தமிட்டாள். ஐஸ்கிறீம் அவள் முகம் பூரா ஒட்டிக்கொண்டது.

''வந்து...அம்மா...''என்று ஏதோ பேச முயன்று நிறுத்திக்கொண்டான் ஆண்டி...

''என்ன, கண்ணா?''

''உனக்கு இன்னொரு பாப்பா பிறக்குமா அம்மா?''

சிரிப்பை அடக்கிக்கொண்டாள் பேஜ். ''ஊஹூம்'' என்றாள். நிறையக் குழந்தைகள் பெற்றுக்கொள்ளத்தான் அவளுக்கு ஆசை. ஆனால் இரண்டே போதும் என்று பிராட் சொல்லிவிட்டான்.

''எதற்கு இப்படித் திடீரென்று கேட்கிறாய் ஆண்டி?''

''என் சிநேகிதன் டாம்மியோட அம்மாவுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. ரெட்டைக் குழந்தை. அவன் வீட்டுக்குப் போயிருந்தேன். ரெண்டு குழந்தையும் நல்ல குண்டு. ஏம்மா, நான் பிறக்கிறப்ப குண்டா இருந்தேனா?''

''ரொம்பக் குண்டாக இல்லை. ஆனால் பரவாயில்லை'' என்றாள் பேஜ். உண்மையில் ஆண்டி எட்டு மாதத்திலேயே பிறந்துவிட்டதால் மூன்று பவுண்ட் எடை கூட இருக்கவில்லை. இரண்டு மாத காலம் இன்குபேட்டரில் வைத்திருந்தார்கள். பிறகு நன்றாய் வளர ஆரம்பித்துவிட்டான்....

வீட்டை அடைந்தபோது, வாசலில் பிராடின் கார் நிற்பதைக் கண்டாள். அவளுக்கு முன்பே வந்துவிட்டான்.


''இன்று நீ அசத்தலாய் விளையாடியதை அப்பாவிடம் போய்ச் சொல்லு'' என்று ஆண்ட்ருவை அனுப்பிவிட்டுக் காரைப் பூட்டிவிட்டுப் பின்னாலேயே போனாள் பேஜ்.

வாசல்புறம் புல்வெளியில் ஆலிஸனின் சைக்கிள் மல்லாக்காகக் கிடந்தது. சமையலறைக்கு வெளியே இருந்த நாற்காலியில் டென்னிஸ் மட்டையும் பந்துகளும் கிடந்தன. உள்ளே ஆலிஸன் யாருடனோ டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தாள்.

பதினைந்து வயதான பெண்ணைப் பார்க்கும்போதெல்லாம் பேஜுக்குப் பெருமையாகவும் இருக்கும். சங்கடமாகவும் இருக்கும். ஆலிஸன் நல்ல அழகு. உருவத்தைப் பார்த்தால் வாளிப்பாக வளர்ந்த யுவதி. ஆனால் உள்ளத்தால் சிறுமிதான். எப்போதும் அவளிடம் ஒரு பரபரப்பு. ஏதாவது பேச்சு, ஏதாவது காரியம், அதற்கு லேட்டாகிவிட்டது; இதற்கு நேரமாகிவிட்டது, இந்நேரம் நான் அங்கே இருந்திருக்க வேண்டும், இங்கே போயிருக்க வேண்டும்.... இப்படியே, ஓட்டம், ஓட்டம், ஓட்டம்தான்! சுறுசுறுப்பான புத்திசாலிப் பெண். நடு நடுவே குழந்தைத்தனமான காரியங்கள் செய்துவிட்டு, அம்மாவிடம் செமர்த்தியாகத் திட்டு வாங்கிக் கொள்வாள். இரண்டு பேரும் காச்சு மூச்சென்று சண்டை போட்டுக் கொள்வது சகஜம்.

*(தாய் தொடர்வாள்...)*

## ஜானகிஷாவின் தாராளம்



**'ஷக்' இந்திப் படம் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கிறது! வசூலிலா? தரமான படம் என்பதிலா?**

**ஊஹூம்! இது எதிலேயும் இல்லை. முதன்முதலாக இந்தப் படத்தில் 'டாப் லெஸ்' எனப்படும் பாதி நிர்வாணத்தை அங்கீகரித்திருக்கிறது சென்ஸார் போர்டு!**

**மேலாடை இன்றி நடித்த நாயகி ஜானகிஷாவுடன் பேசும் பாக்கியத்தை உருவாக்கித் தந்தவர்கள் தமிழ்நாடு 'ஷக்' பட வீடியோ கஸ்தர்கள்!**

**இனி ஜானகிஷாவுடன் பேசலாமா?**

எப்படிச் சம்மதித்தீர்கள் டாப்லெஸ்ஸிற்கு?

முதலில் தயக்கமும் பதற்றமும் இருந்தது. இந்தக் காட்சியின் தேவையை, நியாயத்தை டைரக்டர் எடுத்துச் சொன்னபோது என்னால் தட்ட முடியவில்லை. கேமரா முன் நிற்கிற வரை வெட்கப்பட்டேன். அப்புறம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பாதி நிர்வாணமாக நடித்தேன்.

**இனி இந்தப் பாணியில் மற்ற நடிகைகளும் நடிக்க முன்வருவார்களே?**

நிச்சயம் வரமாட்டார்கள். ஏனென்றால், என்னைப் போன்ற முன்னழகு பாலிவுட் நட்சத்திரங்கள் யாருக்கும் இல்லை. அவர்களெல்லாம் செயற்கையாகப் பெரிதாக்கிக் கொண்டு கவர்ச்சி காட்டுகிறவர்கள். அவர்கள் டாப்லெஸ் ஆக நடித்தால் குட்டு வெளுத்துவிடும். இருந்தாலும் சொல்றேன். இரசிகர்களே....போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

**தமிழ் சினிமாவில் நடிப்பீர்களா?**


இந்த ஒரு படமே நாடு முழுக்கப் பேசப்படுவதால் எல்லா மொழிப் படங்களிலும் நடித்த திருப்தி எனக்கு வந்துவிட்டது. தமிழில் நடிக்க எனக்கு நேரமில்லை.

ஜானகி ஷாவுக்குத் தமிழ் தரிசனத்துக்கு நேரமில்லை. ஆனால் தமிழ் இரசிகனுக்குத் தூக்கமில்லையே! இது ஜானகிஷாவுக்குத் தெரியுமா!

நன்றி - சுகு.

## சுப்பர் மேன் நடிகருக்கு அஞ்சலி

பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஹொலிவுட் நடிகர் கிறிஸ்தோப்பர் ரீவ் தமது 52ஆவது வயதில் காலமானார்.



கிறிஸ்தோபர் ரீவ்

1995இல் குதிரையோட்ட விபத்தின் போது கழுத்தில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக அவஸ்தைக்கு உள்ளாகியிருந்த ரீவ், கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் மரணமானார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், ''ரீவ் ஒரு நடிகர் மட்டுமல்ல, அங்கவீனர்களுக்காக அவர்களது உரிமைகளுக்காகப் போராடிய ஒரு கர்ம வீரர்'' என்று புகழாரம் சூட்டி தமது அஞ்சலியைச் செலுத்தினார். ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் கெரி, ''அவர் ஒரு வீரன்'' என வர்ணித்தார்.

இரசிகர்கள் மெழுகுவர்த்திகளையும் மலர்களையும் தாங்கிய வண்ணம் ஹொலிவூட்டில் அணிதிரண்டனர். ஹொலிவூட், லொஸ்ஏஞ்சல்ஸ் பாதை ஓரத்தில்



சூப்பர்மேன் ரீவ்

ரீவ்வின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை அருகில் துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது.

பார்பரா ஜோன்சன் (தாயார்) குறிப்பிடுகையில், ''குழாய்கள் (டியூப்ஸ்) பொருத்தப்பட்டு வேதனை மிக்க நிலையில் போராடியவருக்கு விடுதலை கிடைத்தமைக்காக மகிழ்வடைகிறேன்'' என்றார்.

''அங்கவீனர்களுக்காக அயராது உழைத்தவர் ரீவ். அவர்களின் நலன்களில் பெரிதும் அக்கறை காட்டியவர்'' என்று கே.என்.எக்ஸ் வானொலி கூறியது.

ரீவ் அங்கவீனர்களின் முதுகுத்தண்டு தொடர்பான ஆராய்ச்சிகளில் முன்னோடியாகத் திகழ்ந்தார். இதனால் ஜனாதிபதி புஷ் இதற்கான நிதி வசதியும் செய்து கொடுத்திருந்தார்.

''சுறுசுறுப்பும் சுய ஆற்றலும் கொண்ட உதாரண புருஷராக விளங்கிய ரீவ், இலட்சக்கணக்கான அமெரிக்க மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பெற்றுத் திகழ்வார்'' என்று புஷ் தெரிவித்துள்ளார்.

வேர்ஜீனியா, கல்பெப்பர் என்ற இடத்தில் 1995ஆம் ஆண்டு மே மாதம் நடந்த குதிரை ஓட்டப் போட்டியொன்றின்போது தனது குதிரையின் மீது இருந்து தூக்கியெறியப் பட்டதால் கழுத்தில் முறிவேற்பட்டு ரீவ் நோயுற்றார்.


அந்த வேளை அவர் உலகப் புகழ்பெற்ற நடிகராக விளங்கினார். 1978இல் சுப்பர் மேன் பாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றிருந்தார்.

ரீவ் கடந்த ஞாயிற்றுக்கிமை வைத்தியசாலையில் மாரடைப்பால் மரணமடைவதற்கு முன்னர், அவரது வீட்டில் கோமா நிலையில் இருந்தார். படுக்கைப்புண் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ரீவ்வின் மனைவியும் நடிகையுமான தனா ரீவ், கடந்த காலங்களில் தன் கணவருக்காக வழங்கிய ஆதரவுகளுக்காகவும் அபிமானத்திற்காகவும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார். ரீவ்வின் தாயார் பார்பரா ஜோன்சன், வேதனையால் போராடி குழாய்கள் பொருத்தப்பட்டு சித்திரவதைப்பட்ட தமது மகனுக்கு விடுதலை கிடைத்தமைக்காக மகிழ்வுறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

31

# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

வியட்னாம் மீது அமெரிக்கா தொடுத்த போர் அம்மக்களின் சிவில் உரிமை விடயத்தினைப் பேணுவதில் மிகப்பெரும் சவாலாக அமைந்தது; இதனால் ஆத்திரமுற்ற வியட்னாமிய மக்கள் அமெரிக்காவிற்கு எதிராகப் போராடிய மனோதிடத்தினை நாம் வெகுவாகப் பாராட்ட வேண்டும்; அப்போராட்டத்தின்போது அம்மக்களிடம் காணப்பட்ட ஒற்றுமை, நாட்டுப்பற்று என்பன குறித்துச் சொல்லப்பட வேண்டியதொன்று. இம்மக்களின் மீது அமெரிக்க அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் கண்டிக்கப்படவேண்டியது.

வியட்னாமிய யுத்தத்தில் அமெரிக்கா மிகப் பெரும் தோல்வியைத் தழுவிக் கொண்டது என்பதனை விடவும்; ஏதே ஒரு விதத்தில் பலகீனம் அடைந்தது என்பது தான் உண்மை. இவ்யுத்தத்தில் அமெரிக்கா தோல்வி அடைந்ததா? வெற்றி பெற்றதா என்பதல்ல கேள்வி; அதனைத் தொடர்ந்து இந்து சமுத்திரம் முழுவதும் தனது நிலையினை அமெரிக்காவால் ஸ்திரப்படுத்திக் கொள்ள முடிந்திருப்பது பாராட்டுக்குரியது.

வியட்னாமிய யுத்தம் பற்றி நான் அதிகம் இங்கு கூறக்காரணம்; எனது **WEllesley** பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியான **"Motive"** என்ற சஞ்சிகையில் 'வியட்னாம் – அமெரிக்க' போர் பற்றி மிக விரிவாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன். நான் அதிகம் விரும்பிப் படிக்கும் பத்திரிகையான "தே நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகையும் இப்போர் பற்றி தெளிவாக குறிப்பிட்டிருந்தது. இவைகளை வாசிப்பதன் மூலம் நான் பெற்றுக் கொண்ட அறிவுதான் என்னால் இந்தப் போர் பற்றி அதிகம் குறிப்பிட முடிந்திருக்கிறது.

நான் **Wellesley** பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற காலப்பகுதியிலே குடியரசுக் கட்சியுடனான ஆரம்பத்



தொடர்புகள் கிடைத்தது. இருப்பினும் எனது உயர்கல்வியின் மீது நான் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டி இருந்ததனால் அத் தொடர்பை முழுமையாகவன்றி ஓரளவுக்கே என்னால் வைத்திருக்க முடிந்தது. அத்துடன், வெலஷ்லி பல்கலைக்கழக ஆளும் குடியரசுக் கட்சியின் இளம் பெண்கள் தலைவியாகவும் நான் தெரிவு செய்யப்பட்டமை எனக்கு கிடைத்த வரப்பிரசாத மட்டுமன்றி; எனது தலைமைத்துவ பிரவேசமுதற் படி எனவும் குறிப்பிட முடியும்.



நான் இதன் மூலம் பெற்றுக் கொண்ட அரசியல் ரீதியான அறிவையும்; அனுபவங்களையும் வைத்தே எனது எதிர்கால அரசியல் பயணம் ஆரம்பமானது. எனது அரசியல் பயணத்தில் ஒரு ஸ்திரமான களத்தினை அமைத்துக் கொள்ள எனக்கு இங்கு கிடைத்த அரசியல் அறிவும், அனுபவமும் உறுதுணையாக அமைந்திருந்தது என்பதைச் சொல்லிக் கொள்வதில் எனக்கு மட்டில்லா மகிழ்வேற்படுகிறது.

வெலஷ்லி பல்கலைக்கழகத்தில் ஆளும் குடியரசுக் கட்சியின் இளம் பெண்கள் பிரிவின் தலைவியாக நான் இருந்தபோது; வரலாற்றுத் துறையில் கலாநிதி பட்டத்தினைப் பெற்ற; எனது உற்ற தோழி 'பெட்ஷி கிரிப்ட்' உதவித்தலைவியாக அப்போது பணிபுரிந்தார். தற்பொழுதும் கூட அவர் குடியரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக பணியாற்றிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் பிரபல அரசியல் ஆய்வாளரும்; எழுத்தாளருமான 'ஜோன் டியேடோர்ஸ்' என்பவரை தன் வாழ்க்கைத்துணையாக ஏற்றிருக்கும் பெட்ஷி கிரிப்ட் தனது கணவருடன் இணைந்து குடியரசுக் கட்சியின் முழுநேர ஊழியராக செயற்பட்டு; எல்லோருக்கும் முன்மாதிரியாக இருந்தார். அமெரிக்காவில் பெண்கள் சம்பந்தமாக பல ஆய்வுப் புத்தகங்களை வெளியிட்ட 'எலிசபெத் கெடிஸ்டேன்டன்' என்பவரின் வரலாற்றை எழுதி மிகப் பெரும் வரலாற்றுப் புத்தகம் ஒன்றினை வெளியிட்டு வைத்தார். அத்துடன், வட வேர்ஜினாவில் உள்ள சிரிய பெண்கள் பாடசாலையில் தலைமை அதிபராகவும் கடமை புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*(இன்னும் வரும்...)*

## சிட்னி வீதியில் முற்றுகை!



**லண்டன்** கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் சிட்னி வீதியில் (03.01.1911)ல் ஒரு துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றது. பொலிஸாரும். இராணுவத்தினரும் சிட்னி வீதியில் நடத்தப்பட்ட அந்தத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை தேடிப்பிடிப்பதற்கு இங்கு குழுமியிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். அந்த சிட்னி வீதியில் தாக்குதல் நடத்தியவர்கள் ஒரு வீட்டின் உள்ளே சென்று நுழைந்து மறைந்து கொண்டார்கள். அந்த வீட்டை முற்றுகையிட்டு, அவர்களை கைது செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு மறைந்திருப்பவர்கள் எத்தனை பேர் தெரியுமா? மூன்றுபேர்தான். ஆயிரம் துப்பாக்கிரவைகள் அவர்களை நோக்கிச் சுடப்பட்டது. அந்த மூவரில் இருவர் கொல்லப்பட்டனர்; இருவரின் உடம்பைத்தான் இராணுவத்தினர் கண்டெடுத்தனர். மற்றவருக்கு என்ன ஆனது என்பது கண்டறியப்படவில்லை.

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**

**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**

## பெண்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வேண்டுமென்று போராடியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்!



**பிரித்தானியாவில்** 1911ம் ஆண்டு பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வேண்டுமென்று போராடியவர்களில் இரு பெண் தலைவிகள் பிரித்தானியச் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதுடன், சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்படும் உடையினையும் கையில் ஏந்திய வண்ணம் இப்படத்தில் காணப்படுகிறார்கள்.

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## பொரளையில் மூட்டிய தீ நாடெங்கும் பரவியது

திருநெல்வேலித் தாக்குதலில் கொல்லப்பட்ட பதின்மூன்று சிப்பாய்களின் சடலங்களும் பொரளை கனத்தை மயானத்துக்கு வந்தடைவது தாமதமாகத் தாமதமாக அங்கு திரண்டிருந்த சனக் கூட்டம் ஆவேசமும் பதற்றமும் அடையத் தொடங்கியது. கூட்டத்திலிருந்த காடையர்கள் வெகுண்டெழுந்தனர். பொலிஸ்மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, பொலிஸ் சுப்ரீண்டன்ட் கபூர், சார்ஜன்ட் வெலிகல ஆகியோர் காடையர்களால் தாக்கப்பட்டனர். ஆனால் அங்கு நின்றிருந்த இராணுவத்தினர் தடுக்க முயற்சிக்காமல் இவற்றை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். காடையர் கும்பலொன்று கனத்தை மயானத்துக்குச் சமீபமாகப் பொரளைச் சந்தியிலுள்ள தமிழரொருவருக்குச் சொந்தமான சாப்பாட்டுக் கடையொன்றினைத் தாக்கி தீ மூட்டியது. ஜூலை இன சங்காரத்தின் முதல் தீ மூட்டல் அங்குதான் இடம்பெற்றது. தொடர்ந்து தாக்குதல்கள், தீவைப்புகள் ஆகியவை நாரஹென்பிட்டி, திம்பிரிகஸ்ஸாய, கிருலப்பனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை எனக் கொழும்பு நகரின் பல பகுதிகளுக்கும் பரவியது. இன வெறியாட்டம் பற்றிய தகவல்கள் தீயைப் போலப் பரவத் தொடங்கியதால் தமிழ் மக்கள் பீதியோடு வீடுகளில் இரவைக் கழித்தனர். ஆனால், கொட்டாஞ்சேனையிலுள்ள கொச்சிக்கடைப் பகுதியிலும் தமிழர்களுக்குச் சொந்தமான நகைக் கடைகள் பல அமைந்திருந்த செட்டியார் தெருவிலும் காடையர் கோஷ்டிகளுக்குப் பதில் தாக்குதல்கள் தொடுக்கத் தமிழ் இளைஞர்கள் பலர் தம்மைத் தயார்படுத்திக்கொண்டனர். கிருலப்பனை ஹுனுமோலச் சந்தியில் அவ்வழியால் வாகனங்களிலும் நடந்தும் சென்ற தமிழர்கள் தாக்கப்பட்டு உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். 25ஆம் திகதி நண்பகல் பிற இடங்களிலிருந்து கொழும்பின் பல பகுதிகளுக்கும் அரச வாகனங்கள், பஸ்கள், லொறிகள் ஆகியவற்றில் காடையர் குழுக்கள் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டன. அவர்களிடம் தமிழர்களின் முகவரிகளைத் தெரிவிக்கும் வாக்காளர் இடாப்புகளும், பெற்றோல் கலன்களும் காணப்பட்டன. வாக்காளர் பட்டியலிலுள்ள தமிழர்களின் பெயர், முகவரிகள் சிவப்பு நிறத்தால் கோடிடப்பட்டிருந்தன. தமிழர்களின் தொழிற்சாலைகள், வீடுகள் தேடித் தேடித் தாக்கப்பட்டன. கொழும்பு - கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு

> **வெளியிடங்களிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்து இறக்கப்பட்ட காடையர் குழுக்கள் மறுநாள் காலை அதாவது 26ஆம் திகதி காலை கொழும்பை விட்டு வெளியேறினர். அன்றைய தினம் நண்பகலளவில், கண்டி, நுவரெலியா, கேகாலை, மாத்தளை, குருநாகல், திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. திருகோணமலையே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. கடற்படையினரே அங்கு அட்டகாசம் செய்தனர். திருமலைக் கடற்படை முகாமிலிருந்து புறப்பட்ட 'வீரர்'கள் சந்தைப் பகுதியைத் தாக்கி முற்றுமுழுதாகத் தரைமட்டமாக்கினர்.**

கோட்டை பிரதான வீதியிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியர்களுக்குச் சொந்தமான 17 தொழிற்சாலைகள் குழப்பங்கள் ஆரம்பிக்கப்பட்ட முதல் இரு தினங்களுக்குள் தாக்கப்பட்டன. ஊடகவியலாளர்களான ஆர்.சிவகுருநாதன், பி.பாலசிங்கம், கே.நடராஜா, கே.சிவப்பிரகாசம், திருமதி பொன்மணி குலசிங்கம் மற்றும் சமூகத்தில் செல்வாக்குமிக்க பலரின் வீடுகளும் தாக்கி அழிக்கப்பட்டன. அமைச்சர் சிறில் மத்தியூவின் தலைமையில் இயங்கிய ஜாதிக சேவக சங்கமய

(அரசியல் தொடர்)

என்ற ஐ.தே.க. தொழிற்சங்கமே தமிழர்களின் பெயர், விபரங்களைக் கொண்ட வாக்காளர்கள் பட்டியலை வழங்கியதாக அப்போது பரவலாக நம்பப்பட்டது.

24ஆம் திகதி இரவு கொழும்பு பொரளையிலிலிருந்து ஆரம்பித்த தமிழர்களுக்கெதிரான தாக்குதல் கொழும்புக்கு வெளியேயுள்ள மாவட்டங்களுக்கும் பரவிய போதிலும் ஜெயவர்த்தன அரசாங்கம் அவற்றைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸாரோ, படையினரோ எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இ.தொ.கா. தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும், ஏனைய முக்கிய தமிழ்ப் பிரமுகர்களும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு ஜெயவர்த்தனவை வலியுறுத்தினர். அத்துடன் தாக்குதல்களை நிறுத்துமாறும் அமைதியைப் பேணுமாறும் வலியுறுத்தி நாட்டு




மக்களுக்கு உரையாற்றுமாறும் ஜெயவர்த்தனவைக் கோரினர். எனினும் கலவரங்கள் ஆரம்பித்து ஐந்து நாட்களுக்குப் பின்னர் - அதாவது 29ஆம் திகதியே ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

ஜெயவர்த்தனவின் செயல்கள் மட்டுமல்ல அந்த உரை கூடத் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்துவதாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. சம்பவங்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க எல்லை மீறிப் போனதால் ஜெயவர்த்தன குழம்பிப் போயிருந்தார். ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்திய அமைச்சர்களிடம், "நிலைமை கட்டுமீறிப் போய்விட்டது" என்று ஜெயவர்த்தன கூறினாரெனத் தெரிவிக்கப்படுகிறது. ஜூலை 25ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்குக் கொழும்பு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. மேல் மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களில் மாலை ஆறு மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் குழப்பங்கள் ஆரம்பித்து 48 மணித்தியாலங்களாக ஊரடங்குச் சட்டம்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அமுல்படுத்தப்படவில்லையென்று குறிப்பிடுகிறார்.

வெளியிடங்களிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்து இறக்கப்பட்ட காடையர் குழுக்கள் மறுநாள் காலை அதாவது 26ஆம் திகதி காலை கொழும்பை விட்டு வெளியேறினர். அன்றைய தினம் நண்பகலளவில், கண்டி, நுவரெலியா, கேகாலை, மாத்தளை, குருநாகல், திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. திருகோணமலையே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. கடற்படையினரே அங்கு அட்டகாசம் செய்தனர். திருமலைக் கடற்படை முகாமிலிருந்து புறப்பட்ட 'வீரர்'கள் சந்தைப் பகுதியைத் தாக்கி முற்றுமுழுதாகத் தரைமட்டமாக்கினர். 1983 ஜூலை இனச் சங்காரத்துக்கு முன்னர் ஆறு தடவைகள் தமிழ் மக்களுக்கெதிரான குழப்பங்கள் வெடித்திருக்கின்றன. இலங்கையின் வரலாற்றில் இரத்தக் கறையாகப் படிந்துவிட்ட இந்த ஜூலைச் சங்காரத்தில் அரச பயங்கரவாதமும் தலை விரித்தாடியது.

திருகோணமலையில் மட்டுமல்ல, கொழும்பு போன்ற பகுதிகளிலும் ஆயுதப் படையினர் அட்டகாசம் புரிந்தனர். 1977ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டபோது, "யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று கூறியவர் ஜெயவர்த்தன. அவரது அந்தக் கூற்றின் தாற்பரியம் ஆறு ஆண்டுகள் கழித்து அதாவது 1983ஆம் ஆண்டு வெளிப்படையாகத் தெரிந்தது.

சிரேஷ்ட பத்திரிகையாளர் த.சபாரத்தினம் அப்போது லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் 'டெயிலி நியூஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பணிபுரிந்து வந்தார். அதற்கு முன்னர் அதே நிறுவனம் வெளியிடும் 'தினகரன்' நாளிதழில் அவர் பணிபுரிந்தார். குழப்ப காலத்தில் தெஹிவளையில் வசித்து வந்த அவர் தனக்கேற்பட்ட அவலங்களை அடுத்த வாரம் விபரிப்பார்.

(தொடர்ந்து வரும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! ஒவ்வொரு வாரமும் புதுப்புது மாற்றங்கள் நிகழத்தான் செய்கின்றன. அதில் தீமைகள் இருந்தாலும் கொஞ்சம் நன்மையும் இருப்பது மனதுக்கு ஆறுதல் தருகிறது. ஒவ்வொரு வாரமும் போனவாரப் புதினம் பற்றிய இந்தப் பகுதியில் தேவையான விசயங்களை சேர்த்துக் கொண்டாலும், இரசிக்கும்படியாகத் தருவதில் ஏதோ குறைபாடு இருப்பதாக வாசகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். அறிந்தோம். மிக்க நன்றி வாசகரே....ஒரு பிரச்சினையை வர்ணிப்பதாக இருந்தால் ஒருவேளை உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படலாம். ஆனால், இங்கே பல விதமான பிரச்சினைகள் பற்றிப் பேச வேண்டிய தேவை உள்ளது. இவற்றைத் தேவையற்று வர்ணிப்பதில் சிரமங்கள் பல. இருந்தும் உங்கள் ஆலோசனைக்கு எங்கள் இதய பூர்வ நன்றிகள்.

***சின் :-*** *அண்ண திருமலையிலும் பொலநறுவையிலும் ஒரே நாளிலேயே ஹர்த்தால் நடத்தப்பட்டதே. இரண்டுக்கும் இருக்கும் ஒற்றுமை, வேற்றுமை பற்றி விளக்குவீர்களா?*

**மன் :-** இதென்ன! இரண்டு படத்தைக் காட்டி ஆறு வித்தியாசங்கள் கேக்கிறமாதிரி திருமலையில நடந்ததில் மக்களின் பேரைச் சொல்லி அரசுக்கு ஆப்பு வைப்பதே நோக்கம். அன்றாடம் உழைப்பாளிகளும் பாதிக்கப்பட்டனர்.

பொலநறுவையில் நடந்தது பாதிக்கப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கை. திருமலையில மக்களின் போர்வைக்குள்ள இருந்தவையளின்ர நடவடிக்கைகளை எதிர்த்தது. இது எப்படி இருக்கெண்டால் பெரும்பான்மையிட்ட தமிழரும் தமிழரிட்ட முஸ்லிம்களும் கோரிக்கை விடுகிறதா இருந்திச்சு....இது ஆரோக்கியமில்லை. எங்கட பத்திரிகைகள் திருமலை ஹர்த்தாலை படத்தோட செய்திப் போட்டு யார் நடத்தினவை எண்டதை வெளிக்காட்டிப் போட்டினம்.

***சின் :-*** *தம்பிமார் நடத்தினவையள் எண்டு பத்திரிகைக் காறர்களுக்கு தெரியாமலே இருந்திருக்கும்? தெரிஞ்சதாலதான் அத்தனை சப்போர்ட்டாக்கும்...... வாக்களிப்பதற்கு அடையாள அட்டை கட்டாயம் என்கின்ற சட்டம் பாராளுமன்றத்தில அங்கீகரிக்கப்பட்டிருக்கு. இதை எதிர்த்து விவாதித்த தமிழர் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரனுக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை செம வாங்கு வாங்கியிருக்கிறாரே.*

**மன் :-** "நீர் மட்டும் அடையாள அட்டை வச்சிருக்கிறீர். பாஸ் போர்ட் வைச்சிருக்கிறீர். சொகுசா வாழ்கிறீர். தமிழ் மக்கள் மட்டும் அடையாள அட்டை வச்சிருக்கத் தேவையில்லை என்கிறீரே" என்று கேள்விகளால மூக்கிலயே குத்தினாரே, அதுதான் குத்து. நம்மட ஆளுக்கு என்ன கெட்ட நேரமோ, பார்லிமெண்டில பேச வாயைத் திறந்தாலே நாக்கில சனி பிடிச்சுடுகுது. ம்....என்ன செய்தும் எல்லாம் தலையெழுத்து.

***சின் :-*** *என்னண்ண இப்பிடிச் சொல்லிறியள்? சரி இவர்தான் இப்பிடிச் சொல்லியிருக்கிறாரெண்டால் எங்கட மற்ற எம்.பி. கிஷோர் பேசும்போதும் வடக்கு கிழக்குத் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைத் தடுக்கவே அடையாள அட்டை அத்தியாவசியச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளாரே.*

**மன் :-** அவர் சொல்லிறது சரிதானே. நேர்மையான வாக்களிப்பால இவையள் தெரிவாகப்பட்டினமோ எண்டது உலகறிஞ்ச கதை. செத்தவன் - இல்லாதவன்ரயெல்லாம் போட்டுவிச்சுத்தான உந்தப் பதவி கிடைச்சது. இந்த லட்சணத்தில அடையாள அட்டை காட்ட வேணுமெண்டால் நிலைமை எப்படி இருக்கும்? உண்மையான மக்கள் சேவகர்களை மக்கள் தேட வெளிக்கிட்டால், மக்களின்ர பேரால சுகம் அநுபவிக்கிறவையளுக்கு கஷ்டம்தானே!.... வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின்ர பிரதிநிதிகளாக இருக்கிறவை மக்களுக்கு எதையும் செய்யாட்டில் பிரதிநிதித்துவம் இருந்தென்ன இல்லாட்டி என்ன......?

***சின் :-*** *இவையள் இப்பிடித் தங்கட கதிரைகளைக் காப்பாத்திறதில சண்டை பிடிச்சுக்கொண்டிருக்கினம். மறுபக்கம் சமாதானத்துக்கான முயற்சிகள் தொடர்பில் ஒரு கட்டமாக சமாதானம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆலோசனை சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதே.*

**மன் :-** சமாதான முயற்சிகள் தொடர்பில் பல விதமான முன்னெடுப்புகளை செய்ய வேண்டியிருக்கு. சட்டத் திருத்தம், பெரும்பான்மை ஆதரவு, பல விதமான கருத்துக் கொண்டவர்களின் இணக்கம் என்பன அவசியம். இதில் அனைத்து அரசியல் சக்திகளும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வாறது அவசியம் எண்டதால ஆலோசனைச் சபையும் இதில் முக்கியத்துவம் பெறுகுது. எதை எடுத்தாலும் சந்தேகக் கண்கொண்டு பாக்கிறது வழமையாப் போச்சுது. எதிர்க்கட்சிகள் பங்குகொள்ளாதது அவையளின் காழ்ப்புணர்ச்சியை வெளிக்காட்டிறதாகக் கூறப்படுகுது. இதில குறிப்பிடக்கூடிய அம்சம் என்னவெண்டால் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் சார்பில் உரத்துக் குரல் கொடுத்துப் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பேச்சுத்தான். வடக்குக் - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரமான, கௌரவமான அதுவும் காத்திரமான தீர்வொன்றை வழங்க பெரும்பான்மைச் சமூகம் முன்வர வேண்டும் என்றும் அவர் எல்லாத் தரப்பாரையும் குறிப்பாக சர்வதேசப் பார்வையையும் ஈர்க்கும் வண்ணம் ஆங்கிலத்திலேயே கர்ச்சித்ததுதான்.

***சின் :-*** *இந்தச் சபையில் தமிழர்கள் சார்பில தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களும் கலந்துகொண்டு பேசியிருந்தா எப்பிடி இருந்திருக்கும். ம்....மலடியைப் பிடிச்சு பிள்ளை பெறச் சொன்னா நடக்கவா போகுது...எங்கட கதை இப்பிடியெண்டால் முஸ்லிம் காங்கிரஸ்காரர் யாழ்ப்பாணத்தில நடத்தயிருந்த மாநாடு தம்பிமாரால தடுக்கப்பட்டிருக்குதாமே....!*

**மன் :-** விரட்டப்பட்ட முஸ்லிம் சகோதரர்கள் வீடுகளுக்குப் போறதே பெரும்பாடாய்ச் கிடக்கு. அதுக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்க யாருமில்ல. இதில மாநாடு நடத்தயில்லையெண்டு யார் அழுதது?

முஸ்லிம்களின்ர தலைமைகள் தங்களுக்குள்ள நடத்திற பலப் பரீட்சைகளில் மற்ற முஸ்லிம் சகோதரர்களின்ர பாடுதான் படுமோசம். வடக்குக் - கிழக்கில மாற்றுக் கருத்துக்கோ மனிதாபிமானத்துக்கோ இடமே இல்லை எண்டாகிக்கொண்டு வாற இந்தச் சூழலில மாநாடு நடத்தப்போனால் விடுவினமோ.....

***சின் :-*** *அதுதானே அதெப்பிடி விடுறது. எல்லாம் தேசிய மயம், கொலை மயம் எண்டாகிவிட்டதே.....ஆ...... கொலை எண்டவுடனதான் ஞாபகம் வருகுது....தாக்குதல் ஒண்டில ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரை மேல்முறையீட்டு நீதிமன்றம் விடுவிச்சிருக்குதே.*

**மன் :-** நீதிமன்ற விவகாரங்களுக்குள்ள என்னை ஏன் இழுத்துவிடப் பாக்கிறீர். ஐயா நீதிமான்களே! நான் உங்கட தீர்ப்பை விமர்சிக்கயில்லையுங்கோ....கொலைகாரரை விடுவிக்கிறதும் அப்பாவியைத் தண்டனைக்குட்படுத்துவதும் உங்கட விருப்பம். இப்பிடியெல்லாம் தடாலடித் தீர்ப்பு வழங்கிற மேன்முறையீட்டு நீதிமன்றங்கள், அப்பாவிகளான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தொடர்பில அக்கறைக்காட்டி அவையளையும் விடுவிச்சா நல்லதுங்கோ....விசாரணையே இல்லாம கொஞ்சப் பேர் சிறைகளில வாழுகினமுங்கோ. இவையள் மேலயும் கொஞ்சம் இரக்கம் காட்டினா நல்லதுங்கோ.

***சின் :-*** *அண்ண! என்ன மாதிரிப் பம்முறியள். சூப்பரண்ணை. கவுண்டமணி உங்களிட்டக் கஞ்சி குடிக்கணுமண்ண. அதுசரியண்ண, மின்னுற நிகழ்ச்சி பாத்தனீங்களோ. ஏதாவது விஷேசம் இருந்திச்சுதோ. இல்லையெண்டு சொல்லிப் போடாதேயுங்கோ. எனக்கு மண்டை வெடிச்சுப் போடும்....*

**மன் :-** அந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் என்ன வேதாளக் கதையே சொல்றன். ஒரு வகையில வேதாளக் கதை மாதிரித்தான். நடுவரா இருக்கிறவர் தன்ர பொசிசனை மறந்து போடுவார். அப்பிடித்தான் போன வாரத்து மின்னலில செல்வத்தாரிட்ட ஒரு ரெலிபோன் நேயர் போதைவஸ்துக் கடத்தல் பற்றி முரசு சாடைமாடையா குற்றம் சாட்டி இருக்கே எண்டு கேட்டதுக்கு,

"அது ஒரு கட்சி சார்புப் பத்திரிகை. அது அப்பிடித்தான் எழுதும்" எண்ட கருத்துப்படச் சொன்னார். நடுவராய் இருந்தவரும் கோயில் மாடாட்டம் ஆட்டிப்போட்டு, அந்த நேயரிட்ட "நீங்கள் அந்த ஒரு பத்திரிகையை மட்டும் பாக்காதயுங்கோ. மற்றப் பத்திரிகைகளையும் பார்த்துப்போட்டுப் பேசுங்கோ" எண்டிறார். ஏன் இவர் செல்வத்தாரிட்ட, 'சரி அந்தப் பத்திரிகை ஏன் அப்பிடி எழுத வேணும்? அப்பிடியெண்டால் உங்கட தம்பியார் அண்மையில கைதானதும், தம்பிமாரின்ர காவல்துறை அதிகாரி ஒரு இடத்தில பேசயக்க அவையள் எங்களுக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்கலாம், தவிரவும் மக்களுக்குப் பிரச்சினையில்லாமச் செய்யலாம் எண்டு தனக்கு நெருக்கமானவையளிட்டக் கூறியிருக்கிறாரே. அதுவும் பொய்யா' எண்டு கேட்டிருக்கலாமெல்லோ. கேட்டகமாட்டார். கேட்டா குட்டு வெளிப்பட்டிடுமெல்லோ..... விருந்துக்குப் பதிலா மருந்துதான் குடிக்க வேண்டி வரும்.

***சின் :-*** *எல்லாம் பொலிற்றிக்ஸ் அண்ண. எங்க பிரதமரிட்ட வேலை செய்துகொண்டே வன்னிக்கும் விசுவாசங் காட்டிறதெண்டால் லேசுப்பட்ட காரியமே! அதுக்கெல்லாம் 'இந்த வேளையில' எண்டிற மந்திரம் தெரிஞ்சிருக்க வேணும். இதை விடுங்கோ.....யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில வாள் வெட்டுச் சம்பவங்கள் இந்த வாரம் முழுக்க தலைவிரித்து ஆடுகிறதே.....*

**மன் :-** ம்...கேள்விப்பட்டனான். ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு இப்ப மக்களைக் கடிச்ச கதையாகிப் போயிட்டுது. மாற்றுக் கருத்துக் கொண்டவையளை வெட்டிக் கொலை செய்வதை மக்கள் மௌனமாகப் பாத்துக்கொண்டிருந்திச்சினம். இப்ப என்னடாவெண்டால் மக்களுக்கும் அதே ரீட்மெண்டைக் கொடுக்கினம். இராணுவத்தை வெளியேறச் சொல்ல முதல் இந்த வெறி பிடிச்சதுகளை வெளியேற்ற வேணும் எண்டு காயப்பட்ட ஒருவர் கதறி அழுகிறார். பாவம் இதெல்லாந்தான் சமாதானம் எண்டதை சனம் இன்னும் புரிஞ்சுகொள்ளயில்லை. தோளில தூக்கினது கழுத்தில கடிக்குதெண்டிறார். வட் கேன் ஐ டூ......

***சின் :-*** *இந்தக் கொலைவெறி பிடிச்ச கலாசாரம் எங்கயிருந்து எங்கட சனத்திட்ட வந்ததோ தெரியல்ல.....சமாதானம் எண்ட போர்வையில அதுதான் ஊருக்குள்ள உலாவுதெண்டு இப்பதான் சனங்களுக்குத் தெரியவருகுதாக்கும். யாரிட்டச் சொல்லியழ....*

**மன்னவரும் சின்னவரும்**

# டென்ஷன்.... டென்ஷன்....!

**ந**ரம்புகள் விம்மிப் புடைக்கும் அளவுக்குச் சில நிகழ்ச்சிகள் நம்மை டென்ஷனாக்கிவிடுகின்றன. பல சமயத்தில் படபடப்பு உச்சக் கட்டத்துக்குப் போய் கை கால்களெல்லாம் உதற ஆரம்பித்து விடுகின்றன. இன்னும் சில சமயம் இரண்டடி தள்ளி நிற்பவனுக்குக் கேட்கும் அளவுக்குக்கூட நம் இதயம் வேகமாகத் துடிக்கிறது. ஏதோ இனம் புரியாத கவலைக் கடலுக்குள் மூழ்குவது போன்ற பீதி நம் நெஞ்சைக் கவ்விக்கொள்கிறது. எல்லாவற்றுக்கும் காரணம் டென்ஷன்!

பல சமயங்களில் நாம் டென்ஷன் ஆவதே தேவையில்லாத விஷயங்களால்தான்! உதாரணத்துக்கு ஒரு சம்பவம்....

பேராசிரியர் ஒருவர் மாற்றலாகி வேறு ஊரிலிருக்கும் கல்லூரிக்குப் போகிறார். அவரை வழி அனுப்புவதற்காக அவருடன் பணிபுரியும் நான்கு பேராசிரியர்களும் ரயில் நிலையத்துக்கு வந்திருக்கிறார்கள். ரயில் புறப்பட கொஞ்சம் நேரம் இருக்க...பேராசிரியர்கள் பிளாட்பாரத்தில் நின்று ஜாலியாகப் பேச ஆரம்பிக்கிறார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் ரயில் நகர ஆரம்பித்துவிட்டதையும் அவர்கள் கவனிக்கவில்லை. சடாரெனப் படபடப்பு வந்துவிடுகிறது. 'எந்த கம்பார்ட்மெண்டில் ஏறினாலும் பரவாயில்லை....அடுத்த ஸ்டேஷனில் சரியான கம்பார்ட்மெண்ட்டுக்கு வந்துவிடலாம்' என்று நெரிசலில் முட்டிமோதி நான்கு பேராசிரியர்களும் எப்படியோ ரயிலேறிவிடுகிறார்கள். ஆனால், கையில் பெட்டி படுக்கையுடன் இருந்த ஒரு பேராசிரியரால் மட்டும் ரயிலில் ஏற முடியவில்லை! அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்ட போர்ட்டர் ஒருவர், "கவலைப்படாதீர்கள்... பத்து நிமிடத்தில் இன்னும் ஒரு ரயில் இருக்கிறது. அதிலே நீங்கள் போய்விடலாம்" என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்கிறார்.

அதற்கு அந்தப் பேராசிரியர், "அடுத்த பத்து நிமிடத்தில் இன்னொரு ரயில் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. என் சக பேராசிரியர்களை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது. காரணம் அவர்கள் என்னை வழியனுப்ப வந்தவர்கள். ஆனால், இங்கே ஏற்பட்ட அமளி துமளியில் அவர்கள் ரயிலில் ஏறிவிட்டார்கள்" என்றார்.

இப்படித்தான் படபடப்பும் டென்ஷனும் சாதாரண விஷயங்களைக்கூட நம் கண்ணிலிருந்து மறைத்துவிடுகின்றன! நாம் பதற்றத்தில் இருக்கும்போது, எத்தனை கஷ்டப்பட்டு ஒரு வேலையைச் செய்தாலும் சரி, அதனால் ஏற்படும் பலன் பெரும்பாலும் பூஜ்யமாகத்தான் இருக்கும்!

ஒருசமயம் நான்கு குடிகாரர்கள் ஒன்றாக மது அருந்தப் போனார்கள். போதை தலைக்கேறும் மட்டும் குடித்த அவர்கள், வீட்டுக்குத் திரும்புவதற்காகப் புறப்பட்ட நேரத்தில் நன்றாக இருட்டிவிட்டது. ஆற்றைக் கடந்துதான் மறு கரைக்குப் போக வேண்டும்! எனவே, பரிசல்காரனைத் தேடினார்கள். அவனைக் காணவில்லை. ஆனால் பரிசல் மட்டுமே இருந்தது. பரிசலைத் தாங்களே ஓட்டிச் சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில், பரிசலில் ஏறி உட்கார்ந்து துடுப்புப் போட ஆரம்பித்தார்கள். ஒரு மணி நேரம் ஆனது...இரண்டு மணி நேரமானது...மூன்று மணி நேரமும் ஆனது. ஆனால், மறுகரை மட்டும் வரவே இல்லை! அதற்குள் மெள்ளப் பொழுதும் விடிந்து...போதையும் மெள்ளத் தெளிய....அப்போதுதான் கரையில் இருக்கும் மரத்தில் பரிசல் கட்டப்பட்டிருப்பதை அந்தக் குடிகாரர்கள் கவனித்தார்கள்!

குடிகாரர்கள் கண்களைப் போதையும் இருட்டும் மறைத்தது போல, பதற்றம் நம்முடைய கண்களைப் பல சமயம் உண்மையையும் நிதர்சனத்தையும் பார்க்கவிடாமல் 'மறைத்துவிடுகிறது.

புத்த மதத்தில் ஒரு பிரிவாக விளங்கும் ஸென் (ZEN) இலக்கியத்தில் உள்ள ஒரு கதை இது!


ஓர் அரசர் தன் நாட்டுக்கு முதலமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க நினைத்தார். சம தகுதிபெற்ற நான்கு பேர் அவரது அமைச்சரவையில் இருந்ததால், ஏதாவது ஒரு பரீட்சை வைத்து அந்த நால்வரில் ஒருவரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்க முடிவெடுத்தார். ஒருநாள் அந்த நால்வரையும் அழைத்து, "என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட இந்த விஞ்ஞான பூட்டைத் திறக்க நாளை காலை உங்கள் நால்வருக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்படும். யார் இந்தப் பூட்டைக் குறைவான நேரத்தில் திறக்கிறாரோ அவரே நாட்டின் முதலமைச்சர்" என்று அறிவித்தார்.

முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசையில், அன்று இரவு முழுதும் விடிய விடியப் பூட்டு பற்றிய ஓலைச் சுவடிகளையும், கணிதம் பற்றிய எல்லாக் குறிப்புகளையும் அந்த அமைச்சர்கள் தேடினார்கள். எதுவும் கிடைக்கவில்லை. அந்த நால்வரில் ஒருவர் மட்டும், ஒருசில ஓலைச் சுவடிகளைப் புரட்டிவிட்டுத் தூங்கப் போய்விட்டார்.

மறுநாள் அரசவையில்...கணிதத் தந்திரத்தால் மட்டுமே திறக்கக்கூடிய பூட்டை அரசரின் சேவகர்கள் தூக்கிக்கொண்டு வந்து நால்வரின் முன்பும் வைத்தார்கள். எதிரே அரசர் வீற்றிருந்தார். பூட்டின் பிரமாண்டம் எல்லோரின் படபடப்பையும் இன்னும் அதிகரித்தது. கையோடு எடுத்துவந்த ஓலைச் சுவடிகளை அவர்கள் முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தார்கள். ஆனால், கணிதப் பூட்டைத் திறக்கும் வழி மட்டும் அவர்களுக்குப் புலப்படவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டார்கள்.

இரவிலே நன்றாகத் தூங்கிய அந்த ஓர் அமைச்சர், கடைசியாக எழுந்து வந்தார். அவர் பூட்டின் அருகில் வந்து பார்த்தார். என்ன ஆச்சரியம்! பூட்டு பூட்டப்படவே இல்லை. சாவியே இல்லாமல், சூத்திரமே இல்லாமல் அவர் பூட்டை எளிதாகத் திறக்க, அரசர் அவரையே முதலமைச்சர் ஆக்கினார்.

பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், முதலில் பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், மனம் பதற்றம் இல்லாமல் சமன் நிலையில் இருக்க வேண்டும்.



**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 89க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி. மதுஷிகா மோகனசிங்கம், பிரதான வீதி, பெரியநீலாவணை-01, கல்முனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. திருமதி.ய. ஜெயகௌரி, நீர்ப்பாசன திணைக்களம், கண்டி வீதி, வவுனியா.
2. அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம், கண்டி.
3. திருமதி. ஏ. கே. சிங்கம், 141, 4ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
4. வ. மன்னர் அன்ரனி, 16 சென் யேம்ஸ் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
5. கே. இராஜகோபால், "அடைக்கலம் தோட்டம்" கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
6. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
7. ஏ. தயாளன், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், கண்டி வீதி, வவுனியா.
8. நா. ஹேமானந்தி, 107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு -01, கல்முனை.
9. இ. தவக்குமரன், 24, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.
10. சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

## குறுக்கெழுத்துப் போட்டி 91

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | | 8 | |
| 9 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | | 23 | | 24 |

**இடமிருந்து வலம்**

1. வாணி
6. சினம் (திரும்பியுள்ளது)
10. இனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி விரும்பும் தீர்வு இது.
13. ஏழரை நாழிகை வழி (குழம்பியுள்ளது)
17. பச்சை நிற மணி (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பாடல் பெற்ற தலம்.
2. பரவலாக நடைபெறுகின்ற துன்பியல் சம்பவம் (தலைகீழாகவுள்ளது).
4. காட்டில் வாழும் ஆண் மிருகம்.
10. உற்சவங்களில் உன்னதமானது (குழம்பியுள்ளது).
12. பத்துப் பாடல்களைக் கொண்ட ஒரு பிரபந்தம் (குழம்பியுள்ளது).

**குறுக்கெழுத்துப் போட்டி 89 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| கௌ 1 | ல் 2 | லி 3 | ம 4 | லை 5 |
| ண் 6 | | ல் 7 | ணி 8 | அ 9 |
| ட 10 | | நெ 11 | | ம 12 |
| ச் 13 | | | மி 14 | |
| சி 15 | ம் 16 | ம 17 | ம் 18 | |
| | | தி 19 | ரு 20 | ல் 21 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 19.10.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-91
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

65

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்: .......................

கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-10-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**திருகோணமலை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 63

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**வி. பானுமதி (பவித்திரா)**
அலஸ்தோட்டம், இல. 75, சாம்பல் தீவு, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# சீதனம்

## இவ்வாரச் சிறு கதைகள்

"எங்களுக்கு பொண்ணை ரொம்ப பிடிச்சிருக்கு. நாங்க கேட்ட சீதனத்தை மட்டும் பார்த்து செய்திட்டீங்கன்னா வர்ற முகூர்த்தத்துலயே கல்யாணத்த முடிச்சிடலாம். யோசிச்சி சொன்னாலும் சரிதான். அப்ப நாங்க வர்றோம்....."

மாப்பிள்ளை வீட்டார் போய்விட்டார்கள்.

கண்ணகியம்மாள் தன் கணவனை ஏறிட்டாள். பாவம்! அவரும் என்ன செய்வார் கேட்ட சீதனத்தை கொடுக்க சேமிக்கவும் முடியாத நிலை. பென்ஷன் வாங்கி ஏழு வருடங்களாகிவிட்டது. மகன் ஆதவனின் உழைப்பில்தான் குடும்ப வண்டி உருளுகிறது. ஆதவனுக்கு உதவியாக வதனியும் (மனைவி) கைகொடுத்தாள். ஆதவன் படிப்பிக்கும் அதே பாடசாலையின் பாலர் பிரிவில் ஆசிரியையாகக் கடமை புரிகிறாள்.

மாப்பிள்ளை யாருக்கு.....?

அது ஆதவனின் தங்கை கௌசிகாவிற்குத்தான்.

இவை எல்லாவற்றையும் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் வதனி. ஆதவன் அன்று ஏதோ செமினார் இருப்பதாகக் காலையிலேயே புறப்பட்டுப் போயிருந்தான். வதனி, கௌசிகாவைப்



-விக்னேஸ்வரன், ஹட்டன்

பெண் பார்க்க வருவதாக இருந்ததால் வேலைகளுக்கு ஒத்தாசையாக இருக்குமென்று லீவு எடுத்திருந்தாள்.

"சரி...எல்லாத்தையும் ஆதவன் வந்தவுடன பேசிக்கலாம். இருக்கிற வேலைய பாருங்க போங்க......"

கிணற்றுக்குள் கல்லெறிந்த ஒலியைப் போல ஒலித்தது கனகசபையின் குரல். அவர்தான் கண்ணகியம்மாளின் கணவர்.

கௌசிகா மாப்பிள்ளை வீட்டார் போன கையோடு அறைக்குள் நுழைந்தவள்தான். வெளியே வரவேயில்லை.

அவளைச் சொல்லிக் குற்றமில்லை. அவளைப் பொறுத்தவரை பெண் என்பவள் ஒரு காட்சிப் பொருள். நில் என்றால் நிற்கவும் நட என்றால் நடக்கவும்....பெண்ணாய் பிறப்பது பாவம் என்று கூடத் தோன்றியது அவளுக்கு. காரணம் இந்த பாழாய்ப் போன சீதனம் தானே. எத்தனை மாப்பிள்ளையை தன் கணவனாய் கனவுகண்டு அலுத்திருப்பாள். எல்லோரும் போய் கடிதம்...இல்லை..... இல்லை.... விலைப் பட்டியல் அனுப்பியவர்கள்தான்.

சே.....இந்த ஆண் வர்க்கம் மட்டும் இந்த சீதன விடயத்தில் பெற்றோரை எதிர்ப்பதேயில்லை. கோழைகளாகிறார்கள். அவர்களின் கல் நெஞ்சை அறியாமல் எத்தனை கனவுக் கோட்டைகள் சமாதியாயிருக்கும். ஒரு வழியில் இவர்கள் பரவாயில்லை என்றும் சொல்லலாம். ஏனெனில் வெளியே ஒரு முகத்தோடு சீதன எதிர்ப்பு, பெண் விடுதலை எனப் போராட்டம் நடத்திவிட்டு வீட்டுக்குப் வரும்போது முகமூடியைக் கழற்றிவிட்டு தன் மனைவியை சீதனப் பாக்கி என்று சித்திரவதை செய்வோர் மத்தியில் இவர்கள் மேல் என்றே தோன்றுகிறது. என்றாலும் இதற்கெல்லாம் விமோசனம் எப்போது? இன்னொரு பாரதி வந்தால்....அவரையும் மாற்றி இந்த சீதனத்துக்காய் பாட்டெழுதவைக்கும் சமுதாயமிது போல தோன்றியது கௌசிகாவுக்கு. என்றாலும் முழுக் காரணத்தையும் ஆண்கள் மீது சுமத்துவது நியாயமில்லைதான். ஏனெனில் அண்ணன் ஆதவனின் திருமணத்தின்போது அம்மாதானே சீதனப் பட்டியலிட்டது. இன்று வந்த மாப்பிள்ளை வீட்டாரிலும் அந்த அம்மாள்தானே கேட்டார் சீதனம்.

அண்ணன் ஆதவன் வந்துவிட்டது முன்னறையில் ஓங்கி ஒலித்த சத்தத்தினால் புரிந்தது. காதை கூர்மைப்படுத்தினாள் கௌசிகா.

"நீங்க சரின்னு சம்மதிச்சிட்டீங்க...அவ்வளவு பணத்தை எப்படி புரட்டுறது? கொஞ்சமாவது யோசிச்சீங்களா?"

"இல்லப்பா வந்து....இப்ப வந்த சம்பந்தத்துல இதுதான் கொஞ்சம் சீதனம் கம்மி. மத்தபடி அவங்க நல்ல குடும்பமாத் தெரியுது மாப்பிள.....பேங் உத்தியோகமாம். கை நிறைய சம்பளம் வேற. ஏன்னா, நம்ம பொண்ணு போற எடத்துல நல்லாயிருப்பா இல்லையா..." இது அப்பா.

"நல்லா இருப்பான்னா எவ்ளோ வச்சிருக்கீங்க சேத்து. என்னோட கல்யாணத்துக்கே வாங்கிய லோன் இன்னும் கட்டி முடியலை. அதில்லாம இப்பவும் போய் லோன்னு நாக்கை தொங்கப்போட சொல்றீங்களா?"

ஆதவன் சற்றுக் கடுமையாகவே பேசி.....இல்லை, கத்திவிட்டான்.

"ஏங்க, மாமா இப்ப என்ன கேட்டார்னு இவ்ளோ சத்தமா பேசுறீங்க? நம்ம பொண்ணை நாமதான நல்வழிப்படுத்தம்னு பேசுறாரு. கொஞ்சம் அமைதியா பேசுங்களேன்..."

வதனி குறிப்புணர்த்தினாள்.

"வதனி! பெரியவங்க பேசிக்கிட்டிருக்கப்போ நீ பேசாம இரு....."

இது மாமியார் கண்ணகியம்மாள்.

வதனியைப் பேசி முடிக்கும்போதும் கண்ணகியம்மாள் சீதனம் வாங்காமல் இல்லை. ஒரு சிறு தொகை தவணை முறையில் தருகிறோம் என்ற பின்தான் கல்யாணத்திற்கே சம்மதித்தார். ஆனால் இப்போது தன் மகளுக்கே இந்த நிலையெனும்போது....

"இல்லம்மா. அவள் சொல்றதும் சரி. இது நம்ம வீட்டுப் பிரச்சினை. நான் ஏதோ ரென்ஷன்ல கொஞ்சம்...... இல்லை, கூடவே சத்தமா பேசிட்டேன். ஆனால் முடிஞ்சவரைக்கும் முயற்சிப்போம். நானும் தெரிஞ்சவங்ககிட்ட கேட்டுப் பார்க்கிறேன். இந்த விஷயத்தை இழுத்துக்கிட்டே போறது நல்லதில்லை. கௌசிக்கும் கனவிருக்கும், ஆசையிருக்கும். நம்ம பொருளாதாரம் அவளுக்கு முட்டுக்கட்டையாகிடக் கூடாது இல்லையா? யோசிப்பம்."

தீர்வு கிடைத்தது போல பேசி முடித்தான் ஆதவன்.

ஏதோ தனக்கு ஒரு விடிவுகாலம் வருவது போலத் தெரிய கனவுகளில் சஞ்சரித்தாள் கௌசிகா.

'என்ன என்னை பிடிச்சிருக்கா' கனவில் கண் சிமிட்டினான் அன்றைய மாப்பிள்ளை பாஸ்கர்.

வாரங்கள் மாதங்களானதுதான் மிச்சம். குறித்த தொகையினை சீதனமாகச் சேர்க்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். இந்த கஷ்டங்களைச் சரியாக அறியாமல் வண்ணக் கனவுகளுடன் உலா வந்தாள் கௌசிகா. இவைகளைச் சமாளித்துவிடலாம். மாப்பிள்ளை வீட்டாரிடம் கடைசி நேரத்தில் கூறினால் ஒப்புக்கொள்வார்கள் என்ற துணிவில் திருமணத்திற்கும் நாள் குறித்து அழைப்பிதழ்களும் அச்சேறத்தொடங்கியது.

அழைப்பிதழ்களும் அச்சேறி முடிந்தது. இன்னும் இருபது நாள்தான் பாக்கி. சில அழைப்பிதழ்களை எடுத்துக்கொண்டு மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றார் கனகசபை. வீட்டில் மாப்பிள்ளை தவிர அனைவரும் இருந்தார்கள்.

"வாங்க.....வாங்க. என்ன திடீர்னு....."

சம்பந்தியை வரவேற்றார் பாஸ்கரின் தந்தை.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. காட் எல்லாம் அடிச்சி முடிஞ்சிரிச்சி. எல்லாம் சரியா இருக்கான்னு நீங்களும் ஒரு தடவை பார்த்தீங்கன்னா திருப்தியாகிடும். ஏன்னா நம்ம வீட்டு கல்யாணம் பாருங்க..."

சிரித்தார் கனகசபை.

டீ யுடன் சில பிஸ்கட்டுகளும் எடுத்து வந்தார் பாஸ்கரின் தாய்.

ஏதேதோ பேசினார்கள். பேச்சினிடையே மெதுவாய் ஆரம்பித்தார் கனகசபை.

"எங்க மாப்பிளைய ஆளையே காணோம்."

"ஏதோ ப்ரண்டோட பேர்த் டே பார்ட்டியாம், போயிருக்கான்."

"வந்து...சம்பந்தி...உங்ககிட்ட முக்கியமான ஒரு விஷயம் சொல்லணும். வந்து.....வந்து..."

"என்னங்க தடுமாறுறீங்க? என்ன சொல்லுங்க"

"வந்து"

"வந்து போயி இருக்கட்டும். விசயத்தை முதல்ல சொல்லுங்க."

"வந்து....நீங்க கேட்ட மாதிரி நகைகளை ஒழுங்குபண்ணீட்டோம். ஆனால் ரொக்கம்தான் கொஞ்சம் குறையுது. அதை இப்போ சரின்னு ஒத்துக்கிட்டீங்கன்னா தவணை முறையில கொடுத்திடுவம். தப்பா நினைக்காதீங்க. எல்லா இடத்திலயும் முயற்சி செய்துட்டோம். ஆனால் இதை சரிப்படுத்த முடியலை. எங்க கஷ்டங்களை உங்ககிட்ட சொல்றது முறையில்லதான். ஆனால் நீங்க புரிஞ்சிக்கணும் அதான்....."

"ம்....உங்க கஷ்டம் எங்களுக்குப் புரியுது சம்பந்தி. மத்த இடங்கள் மாதிரி மாப்பிள்ளைக்கு காரு, ஸ்கூட்டர்னு எதுவும் கேக்கலை. உங்களுக்குத் தெரியும்."

"அதில்லைங்க.....வந்து..."

"சரி! எவ்வளவு குறையுதின்னு கேளுங்களேன்."

காதைக் கடித்தாள் பாஸ்கரின் தாய்.

"ஒரு...ஒரு இலட்சம் மட்டும்தாங்க குறைவு. அதை நான் சொன்ன மாதிரி கட்டிர்றோம்."

"அதெல்லாம் சரிப்பட்டு வராதுங்க. மிச்ச பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. காரியம் ஆகட்டும். பொண்ணை பெத்தவங்க நீங்க. புரியுமுணு நினைக்கிறேன். வேறெதுவும் பேசாதீங்க...."

நாசூக்காகப் பேசி முடித்தார் பாஸ்கரின் தாயார்.

அதற்கு மேல் பேசிப் பயனில்லை என அறிந்து விடைபெற்றுக்கொண்டு சோர்வுடன் வீடு திரும்பினார் கனகசபை.

வீட்டில் எல்லாம் சொல்லியாயிற்று. எல்லார் தலையிலும் கை. இத்தனை நாள் குதூகலித்திருந்த கௌசிகாவுக்கு இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் கஷ்டம் புரிந்தது. புரிந்தும் என்ன செய்ய? என்ன செய்ய முடியும். வீட்டின் தூண்களே தளர்ந்து போயிருக்கையில் அந்த துரும்புதான் என்ன செய்யும். இதைத்தான் விதி என்பதா? இல்லை மாமியார்களின் சதி என்பதா? இப்படிப்பட்ட ஒரு இடத்தில் வாழ்க்கைப்பட்டால் வாழ்வு சந்தோஷமாயிருக்குமா? என் கனவுகள் கனவுகள்தானா? நிஜமாவதில்லையா? சந்தேகம்தான்.

இதைத்தான் சொல்வார்களா கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று. எந்தக் கேள்விக்கும் விடை தெரியவில்லை கௌசிகாவிற்கு.

"மாமா...என்னங்க, நீங்களும்தான் கேளுங்க. இந்தக் கல்யாணத்தை பொறுத்தவரை உங்க கஷ்டங்கள்ல பங்குகொள்ள எனக்கும் அனுமதி உண்டு. நான் என்ன சொல்ல வர்றேன்னா, போன வாரம் வீட்டுக்கு போனப்ப அப்பா சொன்னாரு அவரோட பென்ஸன் காசு வந்துட்டதா. அதை தங்கச்சி கல்யாணத்துக்குனு அப்படியே ஒதுக்கிட்டாரு. நான் எப்படியாவது அப்பாகிட்ட பேசி பணத்தை வாங்கித் தாறேன். முதல்ல கௌசி கல்யாணத்தை முடிப்போம். அப்புறம் கொஞ்சங் கொஞ்சமா சேர்த்து அந்தக் கடனை அடைச்சிடலாம். தங்கச்சி இப்பதானே எட்டு படிக்கிறாள். அவளோட கல்யாணத்துக்கு இன்னும் எத்தனையோ நாளிருக்கு அதுக்குள்ள திருப்பிடலாம் என்ன சொல்றீங்க அத்தை நான் ஏதோ எனக்கு தோன்றினதை சொன்னேன். தப்புனு பட்டா மன்னிச்சிடுங்க......"

வதனி பேசி முடித்தாள். கண்ணகியம்மாள் உள்ளம் கொஞ்சம் கசியத் தொடங்கியது. மாமியார் கொடுமையளவு இல்லாவிடினும் ஓரளவு வேலை வாங்கி பலக்கப்படுத்திவிட்டார். அதைக்கூடப் பெரிதுபடுத்தாது தங்கள் குடும்பமென்ற ஒருமைப்பாட்டு மனப்பாங்கு அவரை நெகிழச்செய்தது. இவள் எனக்கு மருமகளாய் வர கொடுத்து வைத்திருக்க வேண்டும். பணத்தைக் கொடுத்து உதவுவதாகச் சொன்னது அனைவர் மனதிலும் ஒரு மகிழ்ச்சி.

"ரொம்ப நன்றியம்மா. ஒனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல."

கண் கலங்கினார் கன்னகியம்மாள். அனைவரது மனங்களும்தான். ஏதோ அன்று அந்த அறையில் விளக்கு இன்னும் பிரகாசமாய் எரிவதாய்ப்பட்டது வதனிக்கு.

(யாவும் கற்பனை)

# தடம் மாறிய பயணம்

அன்றிரவு முதல் சுந்தரலிங்கம் மாஸ்டருக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு வலுக் கட்டாயமாகத் தூக்கத்திற்கு அழைப்பு விடுக்கிறார். அதற்குச் சவால் விடுவது போல் அவரின் கண்களுக்குத் தூக்கம் விடைபெற்றுக் கொண்டேயிருந்தது. சுவர் கடிகாரத்தைப் பார்க்கிறார். இரவு 12 மணியைத் தொட்டுக்கொண்டிருந்தது.

யன்னலைத் திறந்து பார்க்கிறார். அழகான ஓர் முழு நிலா... அதன் முகப் பிரகாசம் தன்னைப் பார்த்துச் சிரித்தது போலிருக்கத் தன் நினைவுகளை மீட்டுப் பார்க்கிறார்.

அன்றைய நாள் டாம் வீதியிலுள்ள கச்சேரிக்குத் தனிப்பட்ட வேலைக்காகச் சென்றிருந்தார். பகல் நேரத்தில் மிகவும் பரபரப்புள்ள இவ்வீதி சன நெருக்கடிக்குப் பெயர் போன இடம். பொதிகளை ஏற்றி இழுக்கும் கூலியாட்களின் தொல்லையோ வாய்விட்டுச் சொல்ல முடியாது. வாழ்வின் பிழைப்புக்காகச் சுமை இழுக்கும் மக்களின் போராட்டங்கள். இவையனைத்தையும் கவனித்துக்கொண்டு நடந்து போன மாஸ்டருக்குப் பின்னால் ஓர் அடி. மாஸ்டர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு திரும்பிப் பார்க்க....

"மன்னிச்சுக் கொள்ளுங்க. இறக்கத்தில என்னால் நிறுத்த முடியவில்லை. காலையில சாப்பிடல" என்று வாடிய முகத்துடன் ஓர் பதில்.

அவ்விடத்தில் அதிர்ந்து போன மாஸ்டர், "என்ன சசி இந்தக் கோலத்தில? போன மாதந்தானே வாழைச்சேனையிலிருந்து மாற்றலாகி இங்கு வந்தேன். நல்லாப் படித்து O/L பரீட்சையில் சித்தியடைவாய், உனது அப்பாவின் கனவுகளை நிறைவேற்றுவாய்" என்று மாஸ்டரின் கதை தொடர்ந்துகொண்டிருக்க சசியின் முகத்தில பொல பொலவென நீர் வடிந்து கொண்டு இருந்தது.

"சேர்! நீங்க வந்து ஒரு கிழமைக்குப் பிறகு இரண்டு பேர் வந்து



இரவில அப்பாவைக் கூப்பிட்டு சுட்டுவிட்டுப் போய்விட்டார்கள்."

'அதிர்ந்து போனார் மாஸ்ரர். சசியின் அப்பா இளையதம்பி சிறந்த ஓர் சமூகப்பற்றாளர். 10 வருடங்களுக்கு முன்பு வடக்கிலிருந்து குடியேறியவர். தமிழ் சமூகத்தின் விடிவுக்காக கற்பனையோடு காத்திருந்த ஓர் தமிழ்க் குடிமகன்.....என்று சிந்தித்துக் கொண்டிருக்க.....சசியின் வார்த்தை தொடர்கிறது.

"சேர்! இதனால் எங்கட குடும்பத்தை நடத்த அக்காவை, தங்கச்சியைப் படிப்பிக்க வழி தெரியல. அதனால இந்தச் சுமையை சுமக்கின்றேன். எனது குடும்பத்தின் வாழ்வுக்காக வண்டி இழுக்கிறேன்" என்றான் சசி. அழுக்கு உடையுடன் வண்டி இழுத்துப் போன காட்சியை நினைத்து மனம் நொந்து அழுது சிந்தித்து பார்க்கிறார்.

20 வருட யுத்தத்தில் பட்டமரமாய் போன தமிழ் சமூகம் சமாதான சூழ்நிலையில் துளிர்விட

-க.நிசாந்தன் ஸ்ரீபன், பிலிமத்தலாவ.

ஆரம்பிக்கும்போது துளிரை முளையிலே கிள்ளியெறிய யார் முயற்சி எடுக்கிறார்களோ, அவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள், புறக்கணிக்கப் பட வேண்டியவர்கள் என்று சிந்தனை ஓடியது.

'சசியின் வாழ்க்கைப் பயணம் தடம் மாறிவிட்டாலும் சசியைப் போல ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் வாழ்க்கைப் பயணம் தடம் மாறாமல் இருக்கப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. இதற்கு என்னை ஒப்புக் கொடுக்கின்றேன்' என்று நினைத்து அயர்ந்து தூங்கத் தொடங்கினார்.

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

### சிந்தித்து செயலாற்றுவதே சிறந்தது!

- மற்றவர்களுக்காகக் காத்திருக்கும் பழக்கம் உங்களுக்கிருந்தால் நீங்கள் பின்தங்கிவிடுவீர்கள்.
- நீங்கள் பயனுள்ள செயலுக்காக ஒரு மணித்தியாலத்தைச் செலவிட்டால் ஆயிரம் மடங்கு இலாபம் உண்டு. பிரயோசனமற்ற செயலுக்காக ஒரு மணித்தியாலத்தை வீணாக்கினால் ஆயிரம் மடங்கு நட்டமடைவீர்கள்.
- கவனக் குறைவினால் பிழைகள் ஏற்படுகின்றன. பின்னர் மன உளைவு ஏற்படுகின்றது.
- உண்மையான சக்தி, அதிகாரம் என்பது தன் மீதான சக்தியும் அதிகாரமுமே அல்லாது, பிறர் மீதானது அல்ல.
- சிறு உப்புத் துண்டு ஒன்றைக் கண்டெடுத்த சுண்டெலி, தன்னை ஒரு பலசரக்கு வியாபாரியாக நினைத்துக் கொண்டதாம்.
- எச் செயலையும் ஆரம்பிக்கு முன், அதன் விளைவை ஒரு கணம் சிந்தித்தபின் தொடங்கவும்.
- தேவைக்குப் பணம் சம்பாதிப்பது நல்லது. அதுவே வெறியாவது கூடாது.
- உங்கள் நேரத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்த பாரிய சக்தி தேவையாகும். ஆகவே கற்பனா சக்தியும் சமயோசித புத்தியும் உள்ளவராக இருங்கள்.
- எப்போதும் உங்களைப் பிறருடன் ஒப்பு நோக்கின் அகங்காரம் அல்லது பொறாமையால் வருந்துவீர்கள்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

## இலக்கிய நயம்



## "அழகு நெற்றியையும் அதன் கீழ் எரியும் இரு சுடர்களையும் மறக்கமாட்டேன்"

தருவது முழடில்யன்

கரை மணலில் விளையாடிக் கொண்டிருந்த பெண்களைப் பார்த்து உற்சாகமாய் எகிறிக் குதித்துக்கொண்டிருந்தன அலைகள். கடலின் இரைச்சலை மீறிய கலகலப்பும் விளையாட்டுமாக இருந்தார்கள் அவர்கள். அலைகளும் அவர்களோடு விளையாடின. இரைந்தன. கால்களைத் தொட்ட பரவசத்துடன் பின்வாங்கி ஓடித் திரும்பி வந்தன. தம் கண்ணாடிச் சிறகுகளை விரித்தாடின.

அடித்துச் செல்லும் அலைகளைக் கோபித்தவாறு, தங்கள் மணல் வீடுகளை மீண்டும் மீண்டும் மேலே மேலே தள்ளிக் கட்டினார்கள். அலை ஈரமாக்கி இறுக வைத்துச் சென்ற மண்ணை, அலை போனதும் ஓடி எடுத்து வெற்றியைக் கொண்டாடியபடி மண் வீடுகளுக்குச் சேர்த்தார்கள்.

காவ்யா மண் எடுக்காமலே அலையோடு போட்டிக்கு ஓடியபடியும், நீரின் தழுவலுக்குக் கால்களை ஒப்புக்கொடுத்தும் பரவசக் குரலெழுப்பியபடி இருந்தாள்.

கதகதப்பான நுரை மெத்தையில் கால் பதிவது போல நீரின் இதத்தை உணர்ந்தாள். உடைகள் நனைவதைப் பொருட்படுத்தாது இறங்கியபோது, கடல் தன்னை ஆர்வத்தோடு தழுவுவதாகத் தோன்றியது. கடலின் அணைப்பு முழுமையாக வேண்டும் போலிருந்தது அவளுக்கு. அலைகள் பெருங்குரலில் அவளைக் கூவியழைத்தன. முழங்காலளவுக்கு இறங்கிச் செல்வதும், பின்னர் பயத்துடன் திரும்ப கரைக்கு ஏறுவதுமாக இருந்தாள்.

கரை மணலில் கால்கள் புதையும் இதத்தை இரசித்தபடி சிறிது தூரம் நடந்தாள். பின்னர் தோழிகளிடம் திரும்பி விளையாட்டில் கலந்தாள். இது என்ன சுதந்திரம்! அவளுக்கு வானை நோக்கிக் கைகளை விரித்துக் கூவும் ஆவல் ஏற்பட்டது. பரவசத்தில் உச்சி மயிர்கள் சிலிர்த்தன.

அதுவரை இருந்த வீடுகளைக் கலைத்துக் பெரிய வீடொன்றை, கட்டி முடித்திருந்தார்கள். சிப்பி சோகி, ஓடுகளை எல்லாம் அலங்காரத்திற்கு அடுக்கினார்கள். பாத்திரம் பண்டங்கள் எல்லாம் குவிக்கப்பட்டு வீடு தயாராகிவிட்டது.

எல்லோரும் களைத்துப் போய் மணலில் அமர்ந்தார்கள். காவ்யாவும் அவர்களுடன் அமர்ந்தாள். பல வண்ண மலர்களால் தொகுப்பட்ட மாலை போல கரையை அழகுபடுத்திய அந்தப் பெண்களின் இருப்பை கடல் ஆரவாரமுடன் இரசித்தது.

"இரவாகிறது...... நானும் உங்கள் வீட்டில் தங்கிப் போகலாமா?" கேலி நிறைந்த ஆண்குரலைக் கேட்டு தோழிகள் ஒருமித்துத் திரும்பினார்கள்.

வியப்பில் விரிந்த எல்லா விழிகளினுள்ளும் வெட்கம் படபடப்பதை இரசித்தான் வந்தவன்.

எல்லோரும் தலை கவிழ்ந்து ஒருவர் பின் ஒருவர் ஒளிக்க ஆரம்பித்தார்கள்.

கலைந்த கூந்தலும் மல்லி கையுமாக வேறொரு காட்சி விரிந்தது வந்தவனுக்கு.

"உங்கள் சிறு குடிசையிலே எனக்கும் இன்று தங்க இடம் கிடைக்குமா. பெண்கள் ஒருவரையொருவர் பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டார்கள். செந்தாமரைகளாகிய எல்லா முகங்களின் அழகையும் விழுங்கமாட்டாமல் முழி பிதுங்கக் கிறக்கத்துடன் நின்றான் அவன். அவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பதையும் சிரிப்பதையும், தவிர! எதுவும் பேசாததால் மீண்டும் அவனே கேட்டான்.

"கடலின் கரையிலேயே முளைத்துவிட்ட சிறு மூங்கில்கள் போன்ற கைகளைக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கைகள் செய்த குடில்தானே இது? நான் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறேன். அதோ சூரியன் மறைந்துவிட்டான். இரவாகப் போகிறது. நான் தங்கிச் செல்ல அனுமதிக்க மாட்டீர்களா? இதோ இந்தச் சிறிய இலைகளிலே நீங்கள் படைக்கப் போகும் விருந்தைச் சாப்பிடவும் ஆவலாயிருக்கிறேன்..."சிரிக்காமலே போலி வினயமுடன் பேசிக் கொண்டிருந்தான் அவன்.

அவன் கண்கள் காவ்யாவின் முகத்திலேயே நிலைத்திருந்தன. எத்தனை நூறு பேர் கூடியிருக்கும் கூட்டத்திலும் அழகான ஒரு முகம் தேடி, அதில் போய் விழுந்து விட்டால் மீள முடியாமல் அதையே வெறித்தபடி அல்லற்படும் அநாகரிகக் கண்கள்தான் அவனிடமுமிருந்தன.

காவ்யா இன்னும் நன்றாகத் தோழி பின்னால் ஒளிந்துகொண்டாள்.

"இது நீங்கள் சாப்பிடுவதற்கில்லை" யாரோ மிக மெல்லிய குரலில் சொன்னார்கள்.

சாதாரணமாக குரல் வந்த திசைக்குத்தானே விழிகள் திரும்ப வேண்டும். ஆனால் அவன் பார்வையோ காவ்யா முகத்தையே நிமிர்த்தி விட முயல்வது போல் துழாவியபடி இருந்தது.

உதடுகள் மட்டும் "நீங்கள் சாப்பிடுவதை நான் சாப்பிட முடியாதா?" என்று வினவின.

'களுக்' என்று சிரிப்பொலி எழுந்தது.

"யாரும் சாப்பிடுவதற்கில்லை.....அது விளையாட்டுக்கு!" என்று ஒரு குரல் கூறியது.

அவன் பதிலைக் காணாமல் காவ்யா மெல்ல விழிகளை உயர்த்தி அவனிடம் கண்ணும் களவுமாகப் பிடிபட்டாள். அவன் மந்தகாச முகத்துடன்,

"இங்கே வாய் பேச முடியாதவர்களும் இருக்கிறார்களா?" என்று கேட்டான். "நாங்கள் எல்லோரும் வாயால் பேசுவது தான் வழக்கம்" என்று ஒருத்தி சொல்ல, "விழுங்குவதும் வாயினால்தான்" என்று மற்றொருத்தி சொல்ல, கடல் அலையை மீறியது சிரிப்பொலி.

காவ்யாவும் சிரித்தபடி நிமிர்ந்தவள், வெட்கமெதுவுமில்லாமல் அத்தனை பேர் முன்னிலையிலும் தன்னையே விழுங்கியபடி இருக்கும் அவன் கண்களைக் கண்டு அவசரமாய்க் குனிந்துகொண்டாள்.

அவனோ அவர்களின் கேலியால் பாதிக்கப்படாதவனாக இருந்தான். இனிப்புப் பண்டத்தில் மொய்க்கும் ஈயாய், விடாது விடாது அவள் முகத்தில் வந்து குந்தியது அவன் பார்வை.

"தோழி ஒருத்தி "அதோ!" என்றாள். எல்லோர் பார்வையும் கடலை நோக்கித் திரும்பின. கொடிகளைப் பறக்கவிட்டபடி பல படகுகள் தோன்றின.

"நான் போக வேண்டும். அந்த நெற்றியையும் அதன் கீழ் எரியும் இரு சுடர்களையும் நான் என்றும் மறக்க மாட்டேன்...."என்று காவ்யாவையே பார்த்துக் கண்களால் விடை கேட்டான். அவள் விழிகளும் பதில் சொல்லியிருக்க வேண்டும். சிறு குடிலைக் காலால் சிதைத்த படி ஓடிப் போனான் அவன்.

*எல்லும் எல்லின்று அசைவுமிகு*
*உடையேன், மெல் இலைப் பரப்பின்*
*விருந்துண்டு யானும் இக் கல்லென்*
*சிறுகுடித் தங்கின் மற்று எவனோ*
*என மொழிந் தனனே ஒருவன்*
*அவற்கண்டு இறைஞ்சிய முகத்தேம்*
*புறம்சேர்பு பொருந்தி*
*இவை நுமக்கு உரிய அல்ல, இழிந்த*
*கொழுமீன் வல்சி என்றனம்.....*
*நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்*
*என்னே குறித்த நோக்கமொடு*
*நன்னுதால் ஒழிகோ யான் என*
*அழிதகக் கூறி, யான் பெயர்க என்ன*
*நோக்கித் தான் தன் நெடுந்தேர்க்*
*கொடிஞ்சி பற்றி நின்றோன்....*

*(அகம் 110:11-17, 20 - 25)*

## சிந்தியா பதில்கள்

**காதலின் வெற்றி அது கல்யாணத்தில் முடிவதுதானே?**

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ரோமியோ - ஜூலியட், லைலா - மஜ்னு, அம்பிகாபதி - அமராவதி... இப்படித் தோற்றுப் போன காதலைத்தான் உலகம் இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது. கல்யாணத்தில் முடிந்த காதலினால் சம்பந்தப்பட்ட இருவரும் ஆளாளுக்குப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்!

**கொலைகளை ஏன் நிறுத்த முடியாமல் இருக்கிறது?**

இரா.குமரேசன், கினலன் எல்ல.

ஒரு பாம்பு பற்றிய கதை சொல்வார்கள். எல்லோரையும் கொத்திக் கொன்று கொண்டிருந்த பாம்பு ஒன்றைக் கடவுள் கூப்பிட்டுக் கண்டித்தாராம். பாம்பு இனிமேல் யாரையும் கொத்துவதில்லை என்று சபதம் செய்ததாம். சில நாட்கள் கழித்து உடம்பெல்லாம் காயங்களுடன் பாம்பு கடவுளிடம் போய் முறையிட்டதாம். யாரையும் கடிக்கக் கூடாது என்று முடிவெடுத்தபின் எல்லோரும் கல்லால் அடிக்கிறார்கள் என்று.

வன்முறையை விடுவதில் உள்ள சிக்கல் இது!

**என் அபிமான நடிகை சினேகா பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

தி.மு. கருணாநிதி, தம்பிலுவில்.

வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். ஸில் வழக்கம் போல கமல்ஹாசனைக் காதலிக்கவும், பாட்டுப் பாட உதவவுமாக வந்து போகும் பாத்திரம். ஆனால் அந்தக் குளுமையான சிரிப்பும், வெட்கமும், நளின முகபாவங்களும்... படம் முடிந்த பிறகும் மறக்க வொட்டாமல் செய்துவிட, இப்போது ஓரிரு நடிகைகள்தானே இருக்கிறார்கள்.!

**தங்களுக்குப் பணம் தரவில்லை என்ற காரணத்திற்காக மன்னாரில் புலிகள் செய்த கொலை நியாயமானதா?**

ஜே. சிலுவை, பெரியகடை.

என்ன சிலுவை இது! நீங்கள் தமிழ்ப் பேப்பர் எதுவும் படிப்பதில்லையா? அவர் செத்தது, கடத்தல்காரர்களுக்கிடையில் நடந்த சண்டையிலல்லவா!

**செஸ், செக்ஸ் இரண்டுக்குமுள்ள ஒற்றுமை என்ன, வித்தியாசம் என்ன? ஒப்பிட முடியுமா?**

க. கமால்தீன், ஏறாவூர்-03.

விளையாட இருவர் வேண்டும் என்பது ஒற்றுமை. வித்தியாசம் என்றால், ராஜாவை மடக்க ராணிக்கு ரத, கஜ, துரக, பதாதிகளின் உதவி தேவை. மற்றதில், ராணியே போதும்.

**ஐஸ்வர்யாவைத் தூக்கிப் பார்த்த பிரசாந்த் சொல்கிறார் எடை 50kg யாம்! சிந்தியாவின் எடை எவ்வளவு?**

நா.பிரியா, வெலிமடை.

நம்மையெல்லாம் யார் தூக்கிப் பார்க்கிறார்கள்? ஆளாளுக்குத் தாக்கித்தானே பார்க்கிறார்கள்!

**சிந்தியா, உங்களை அச்சுறுத்துவது எது?**

செ.சுமதி, கோணப்பிட்டிய எஸ்டேட்.

தங்களால் துரோகிகள் என நம்பப்படுவோர் சுடப்பட்டும் வெட்டியும் கொல்லப்படுகையில் நம் தமிழ்ப் பத்திரிகைகளினதும். தமிழ்க் கட்டுரையாளர்களினதும் எழுத்தில் தென்படுகிற கெக்கலிப்பும், கோலாகலமும்!



சினேகா

**அந்த மாதிரி ஜோக் எதுவும் இல்லையா?**

க. கமலதாசன், வந்தாறுமூலை.

இளம் பெண் ஒருத்தி. பல் மருத்துவரிடம் போனாள். "ஓ, டொக்டர் எனக்குப் பயமாயிருக்கு. இதை விட ஒரு பிரசவ வேதனையைக் கூடத் தாங்கிக்கொள்ளலாம்" என்று கன்னத்தைப் பிடித்துக்கொண்டு கதறினாள்

"சரி நான் இந்த நாற்காலியைச் சரிசெய்வதற்குள், எது வேண்டும் என்பதை முடிவு செய்துகொள்" என்றார் மருத்துவர்.

**சொந்த மண்ணிலேயே வெட்ககரமாய் தோற்றுப் போகும் அளவுக்கு இந்திய கிரிக்கெட் அணியினர் எந்த விஷயத்தில் கோட்டை விடுகிறார்கள்?**

பாத்திமா முபிதா, ஹபுகஸ்தலாவ.

விளம்பரத்தில்!

**மன்னார் கரிசலில் அலுவலகம் தாக்கப்படுகிறது. அம்பாறை வட்டமடுவில் கூட்டத்தில் குழப்பம், மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப் பகுதிகளில் கடத்தல், ஆட்கொலைகள், முஸ்லிம் பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் ஹர்த்தாலும்... என்ன பின்னணியில் இதெல்லாம் நடக்கிறது?**

ந. தயாளினி, யாழ்ப்பாணம்.

ஓமோம். ஒரு பாவமுமறியாத அப்பாவித் தமிழர்களை என்ன பாடுபடுத்துகிறார்கள்! என்னென்ன பழியையெல்லாம் போடுகிறார்கள்! இத்தனைக்கும் ஆங்காங்கே மாற்றுத் தரப்பினரைக் கொலைசெய்துகொண்டிருப்பவர்கள், இனம் தெரியாதவர்கள்தான் என்பதைத் தெரிந்திருந்தும் ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் தமிழ்த் தரப்பைச் சோதிக்கிறார்கள்..... ஹூம்.... நல்லவர்கள், அப்பாவிகளுக்குக் காலமில்லை... எல்லாம் கலிகாலம்!

**உங்களுக்கும் எண் சாத்திரக் கிறுக்கு உண்டா?**

எஸ்.எச். முஸாகிறா ஸறூக், காத்தான்குடி.

இல்லை. கண் சாத்திரத்தில் கிறக்கம் உண்டு.

**வாணி ஜெயராமின் பேட்டி பார்த்தீர்களா?**

எப்.எம்.மிஹ்லார், குருநாகல்.

"எங்களைப் பயன்படுத்திக் கொள்ளும்படியாக இப்போதெல்லாம் யார் இசையமைக்கிறார்கள்...." என்ற சலிப்பு, எதிர்ப்பார்த்ததுதான்! ஆனால் இன்னும் கணீரென்று ஒலிக்கும் அந்தக் குரலின் ஜொலிப்பு, எதிர்பாராதது!

**சிந்தியா, நம் நாட்டு வன்முறைச் சூழல் பற்றி....?**

வின்னி சிவனடியான், வவுனியா.

கொல்பவனை குருதியால் மிரட்டுபவனைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்! (பேராசிரியர்கள், பேரறிஞர்கள் உட்பட)

**என்னென்னவோ செய்து பார்த்தும் நிம்மதியைக் கண்டுகொள்ள முடியாமலிருக்கிறதே?**

முஹமட் மஜிஸ், மீராவோடை-04.

தாகூரின் இந்தக் கவிதை ஏதும் வழிகாட்டுகிறதா பாருங்கள்:

உலகத்தைக் காண விரும்பி
வீட்டை விட்டு வெளிக் கிளம்பினேன்.
படகில் ஏறி அக்கரை அடைந்தேன்.
கிராமங்களை, காடுகளை,
நாடுகளைக் கடந்து சென்றேன்.
எங்கெங்கோ அலைந்தேன்.
மலைகள் ஏறிக் கடந்தேன்.
களைப்படைந்தேன்.
உலகம் சுற்றி முடியவில்லை
வீடு திரும்பினேன்.
என் வீட்டு வாசற்படியில்
ஒரு புல் இதழின் மீது பனித்துளி
பார்த்தேன்.
உலகை அதில் கண்டேன்.


**காலியில் சமாதானப் பேரவைக் கூட்டத்திலேயே பெரும்பான்மையினர் கேட்ட இனவாதக் கேள்விகளைப் பார்த்தீர்களா?**

எம். ஜெபநேசன், கொழும்பு -05.

பார்த்தேன், ஆனால் அதை விடவும் மிக மோசமான கீழ்த்தரமாய் இனவாதம் பேசுபவர்கள் நம் மத்தியிலும் இருக்கிறார்கள். இந்தக் கதைகளையே தூக்கிப் பிடித்துக் கொண்டு, 'சண்டைதான் சரி' என்று சனத்தைக் கிளப்பிவிட எழுதிக் கொண்டிருந்தோமானால்.... அமைதி அந்தோதான்!




**பெ**ரும் பரபரப்பை ஏற்படுத்திய 'பொடி லைன்' கிரிக்கெட் போட்டித் தொடருக்குப் பின்னர் 1934 ஆகஸ்ட் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை லண்டன் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது. இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 562 ஓட்டங்களால் பாரிய வெற்றியை ஈட்டியது. இது கிரிக்கெட் வரலாற்றிலேயே இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களைக் கொண்ட வெற்றி என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



டபிள்யூ.எம். எச். பொன்ஸ் போட்
(அவுஸ்திரேலியா)

அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 701 ஓட்டங்களைப் பெற்றது. பிரபல கிரிக்கெட் வீரர் டொனால்ட் பிரட்மனும், டபிள்யூ. எச். பொன்ஸ் போட்டும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 451 இணை ஓட்டங்களைப் பெற்றனர்.

பிரட்மன் மிகச் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடி 244 ஓட்டங்களைப் பெற்றார். இதில் ஒரு சிக்ஸர் உட்பட 32 பவுண்டரிகள் அடங்குகின்றன.

மேற்படி வீரர்கள் இருவரும் 5 மணித்தியாலங்களும் 15நிமிடங்களும் மைதானத்தில் நின்று ஆடினர். பொன்ஸ் போட் தனது ஆகக் கூடிய ஓட்டங்களை இப் போட்டியின்போதே பெற்றார்.

இங்கிலாந்து அணி இப் போட்டியில் கலந்துகொள்வதற்காக 47 வயதுடைய வுலீ எனும் வீரரையும் அழைத்திருந்தது. இவர் இறுதியாக 1914ஆம் வருடம் ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடியிருந்தார். 20 வருட கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு வீரரை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாட அழைப்பது ஆச்சரியமான ஒரு விடயமாகும். வுலி இப் போட்டியின்போது முதலாவது இன்னிங்ஸில் நான்கு ஓட்டங்களைப் பெற்றதுடன் இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டங்கள் எதனையும் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 701 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 327 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 321 ஓட்டங்களை முதலாவது இன்னிங்ஸிலும் 145 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸிலும் பெற்றுக்கொண்டது.

இதன் பிறகு லண்டன் ஓவல் மைதானத்தில் வைத்து இடம்பெற்ற ஒரு டெஸ்ட் போட்டி கிரிக்கெட்டின் பிறப்பிடமான இங்கிலாந்துக்குப் பாரிய வெற்றி வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தது. அதாவது இப் போட்டியில் இங்கிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 579 ஓட்டங்களால் வெற்றியை ஈட்டியது.

மேற்படி வரலாற்றுப் புகழ் பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 1938 ஆகஸ்ட் மாதம் 20,22,23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெற்றது. இப்போட்டியானது அவுஸ்திரேலிய அணியின் இங்கிலாந்துக்கான சுற்றுப்பயணத்தின் நான்காவது போட்டியும் இறுதி டெஸ்ட் போட்டியுமாக அமைந்துவிட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இப் போட்டியின்போது இங்கிலாந்து அணிக்கு வொலி ஹெமென்ட் தலைமை தாங்கினார். அவுஸ்திரேலிய அணியின் தலைவராக டொனால்ட் பிரட்மன் பணியாற்றினார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்போது இங்கிலாந்து அணியின் ஆரம்ப



லென் ஹட்ன் (இங்கிலாந்து)

துடுப்பாட்ட வீரரான லென் ஹட்ன் வரலாற்றில் ஒருபோதுமே நிகழாத வகையில் மிகவும் வியக்கத் தக்க துடுப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

13 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் விக்கெட்டில் தரித்து நின்ற ஹட்ன் 364 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 35 பவுண்டரிகள் அடங்குகின்றன.

லென் ஹட்ன் உடைய இச் சாதனையானது அது வரையில் இருந்து வந்த கிரிக்கெட் உலகச் சாதனைகளை முறியடித்தது.

ஸ்ரீமத் லென் ஹட்ன் பெற்ற இந்த ஓட்ட எண்ணிக்கையே அதுவரையில் ஒரு கிரிக்கெட் வீரர் தனிப்பட்ட முறையில் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாகும். இதற்கு முன்பதாக 1932-33களில் இங்கிலாந்து அணி வீரரான வொலி ஹெமன்ட் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 'ஓக்லன்ட்'டில் வைத்து ஆட்டமிழக்காமல் 336 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இந்தச் சாதனையை மேற்படி போட்டிகளின்போது லென் ஹட்ன் முறியடித்தார்.

இதன் பின்னர் 1957-58களில் மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த ஸ்ரீமத் காபீல்ட் சோபர்ஸ் 'கின்ஸ்டன்'னில் வைத்து பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஆட்டமிழக்காது 365 ஓட்டங்களைப் பெற்று லென் ஹட்ன் உடைய சாதனையை முறியடித்தார் என்பது வரலாறு.

**-மைந்தன்**

---

## புலிகள் மீது அதிகரிக்கும்......

**4ஆம் பக்கத் தொடர்ச்சி.**

**எ**வ்வாறாயினும் அமெரிக்காவில் நிகழ்ந்த இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்துக்குப் புலிகள் அனுமதிக்கப் படாததையடுத்து பாலசிங்கத்தின் அணுகுமுறையை நிராகரித்துவிட்டு சகல விடயங்களும் வன்னிக்கு மாற்றப்பட்டன. பேச்சுவார்த்தை அத்துடன் முடக்கப்பட்டது. புலிகள் தமிழ்ச்செல்வன் தலைமையில் சர்வதேச நிபுணர்கள் கூட்டத்தை நடத்தி இடைக்கால சுயாட்சி அதிகார சபை ஒன்றுக்கான வரைபை முன்வைத்தார்கள்.

இவ் வரைபின் சில அம்சங்கள் இலங்கையின் யாப்புக்கு அப்பாற்பட்டிருந்த நிலையில் அதைப் பரிசீலித்த இரு அரசாங்கங்களுமே அதையொட்டிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயங்கின. புலிகளோ இதனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே பேச்சுக்களை நடத்த முடியுமெனப் பிடிவாதமாக உள்ளார்கள். இந் நிலையில் இன்றுவரை பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படாமலே முடங்கிக் கிடக்கின்றன.

இதற்கிடையே யுத்த நிறுத்த மீறல்கள் படிப்படியாக அதிகரித்துச் செல்ல ஆரம்பித்தன. கிழக்கில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் நிகழ்ந்து பாரிய குழப்பங்களுக்கு வழிசமைத்தன. இதனால் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தனித் தரப்புக் கோரிக்கை வலுப்பட்டது. வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கும் கோஷங்களும் எழுந்தன. இப் பிரச்சினையில் முஸ்லிம் கட்சிகள் பிளவுண்டன.

மறுபுறம் அரசியற் படுகொலைகள் நிகழ்ந்தேறலாகின. அவை வரவரத் தீவிரமடைந்தன. வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி, கொழும்பு, மலையகம் புத்தளமென்றுகூட கொலைகளும் கொலை முயற்சிகளும் பரந்தன. அரசியல் மறுதரப்பார் மட்டுமன்றி பாதுகாப்புப் படையினர், உளவுத் துறையினர் என்றும் கொலைகள் நிகழ்ந்தன. வீடுகளில், வீதிகளில், வைத்திய சாலைகளில், பொலிஸ் நிலையங்களில், சிறைச்சாலைகளில், நீதிமன்றங்களில் என்றெல்லாம் எங்கும் கொலைகள் நடைபெற்றன. பிஸ்டல் குழுக்கள் பற்றிய பீதி பெருகியது. பிஸ்டல்கள் மட்டுமன்றி கத்திகளும் வாள்களும் கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இதன் உச்சக் கட்டமாகத் தற்கொலைக் குண்டினைப் பயன்படுத்தும் அளவுக்குப் படுகொலைகளின் நிலைமை படு மோசமடைந்தது.

ஈ.பி.டி.பி. தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் திசைமாறி, அமெரிக்க தூதுவராலயத்துக்கு முன்னால் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வெடித்துப் பலரைப் பலிகொண்டது. வழமை போலவே புலிகள் இதனை மறுத்தாலும், தற்கொலைத் தாக்குதலில் உதவியாளராகச் செயற்பட்ட பெண்ணொருத்தி இலக்கில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதால் தோல்விகண்ட தற்கொலைத் தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதுதான் என்பதை எடுத்துக்காட்டும் பல தகவல்கள் புலனாய்வுத் துறையினருக்கும் சர்வதேச நாடுகளுக்கும் கிடைத்தன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு தெளிவாகத் தெரிந்திருந்த இவ் விடயத்தை அப்போது அமெரிக்கா சென்றிருந்த புலிகளின் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகச் செயற்படும் தமிழர் கூட்டமைப்பைச் சார்ந்த கஜேந்திரகுமார், தென்னாசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்காவிடம் மறுக்க முடியவில்லை. தலைநிமிர்த்த முடியாத கேள்விக் கணைகளால் தான் திணறிப் போனதாக அவர் அமெரிக்கவிலிருந்த தனது நெருங்கியவர்களிடம் தெரிவித்திருந்தார். நிலைமையை முன்னரே அறிந்திருந்த கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் அமெரிக்காவிலிருந்தபோதும் இச் சந்திப்பைத் தவிர்த்துக்கொண்டார்.

இவ்வாறான ஒரு மோசமான தரத்தை அரசியற் படுகொலைகள் அடைந்துவிட்டதன் பின், அடுத்தடுத்துப் பல படுகொலைகள் வகை தொகையற்றுக் கட்டவிழ்த்து விடப்பட்டன. கிழமைக்கு ஒன்று என்றிருந்து கிழமைக்கு இரண்டு என்ற வீதத்திற்குப் படுகொலைகள் அதிகரித்தன. இதையடுத்து நோர்வேயின் மத்தியஸ்த்தின் இயலாமை குறித்த பாரிய விசனம் தலைதூக்கியது. நோர்வேத் தூதரகத்துக்கு முன் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. பிரேதப் பெட்டிகள் வைக்கப்பட்டன. பிரேதங்களை நோர்வே தூதரகத்திடமே கையளித்துவிட்டுத் திரும்பும் அளவுக்கு விசனம் உச்சமடைந்தது. நோர்வேத் தூதரகமே ஒரு சவச்சாலையாக மாறும் நிலைமை உருவாகியது. சர்வதேச சமூகத்தின் முன் நோர்வேத் பாரிய அவமானத்துக்குள்ளாகியது. அதன் மத்தியஸ்தம் பெருத்த கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

இதேவேளை சர்வதேச நாடுகளின் தூதுக் குழுவினர் அவசர அவசரமாக வன்னி சென்று புலிகளிடம் இத்தகைய படுகொலைகளையும், சிறுவர் ஆட்சேர்ப்புகளையும் நிறுத்தும்படி அழுத்தம் செலுத்தினர். ஆனால் புலிகள் தொடர்ந்து இவற்றை மறுத்து வந்தனரேயன்றி, அவர்களின் அழுத்தங்களைச் செவிசாய்க்கவில்லை. வெறுமனே அவர்கள் இக் கொலைகள் மாற்றுக் கட்சிகளின் உட்கொலைகளெனக் கூறிவிட்டு இருந்துவிட முனைந்தார்கள்.

இந் நிலையில்தான் சர்வதேச நாடுகள் கடுமையான நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டன. அவை வெறும் வாய் வார்த்தையால் புலிகளை இணங்க வைக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தன. எனவே, சர்வதேச பரப்பில் ஏதேனும் ஒரு உணத்தலை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கை பற்றிச் சிந்தித்தன. அதன் விளைவே டென்மார்க் புலிகளைத் தடைசெய்யப் போவதாக தெரிவித்துள்ள அறிவிப்பு. மேலும் ஐரோப்பிய யூனியனும் இவ்வாறு தடைசெய்ய வேண்டுமென்று டென்மார்க் கோரியுள்ளதானது புலிகளுக்கு வழங்கப்பட்ட இறுதிக் கட்ட சமிக்ஞையாக அமைந்துள்ளது. இவற்றுக்குப் புலிகள் செவிசாய்க்கவில்லையென்றால் இந் நடவடிக்கைகள் அடுத்த கட்டத்துக்குச் சென்று நாடுகடத்தல்கள் வரை செல்லும் ஆபத்துள்ளது.

இது புலிகள். பேச்சுவார்த்தைக்கு வந்ததன் சர்வதேச நோக்கங்களையே அர்த்தமில்லாத தாக்கிவிடக்கூடும். பேச்சுவார்த்தை நிகழாததை முன்னிட்டு சர்வதேச நாடுகள் நிறுத்தி வைத்திருக்கும் இலங்கைக்கான நிதியுதவியும் வழங்கப்படுவதற்கு இந் நிலைமை வழிசமைத்துக் கொடுக்கும் வாய்ப்பும் உள்ளது. எல்லாம் புலிகள் இவற்றைத் தொடரப் போகிறார்களா, நிறுத்தப் போகிறார்களா என்பதைப் பொறுத்தது.

---

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் **பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 5 பிறந்த கிழமை வெள்ளி

**பு**னிதமும் பக்தியும், தூய்மையும் மேன்மையும் மிக்க வெள்ளிக்கிழமையிலும், யோகம் சிறப்பாக இருக்கின்ற ஆதிக்க எண் 5இலும் பிறந்த நீங்கள் சோம்பலையோ சோர்வையோ தெரியாத கடின உழைப்பாளி. சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு மடங்கு வேலை செய்கின்றான் என்று வைத்துக் கொண்டால், நீங்கள் மூன்று மடங்கு அதே வேலையினை எளிதாகச் செய்து முடித்து விடுவீர்கள். வேலையில் அதிக விரைவும் அதிக திறமையும் உடையவர்தான் நீங்கள்.

பல திட்டங்களை வகுத்து வைத்திருப்பீர்கள். இந்தத் திட்டங்கள் மனதளவில் மாத்திரமே இருக்கும். ஆனால், செயலளவில் உங்களால் காரியம் ஆற்ற முடியாது. இதனால் மனதில் துன்பம் அடைவீர்கள். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அந்தக் காரியத்தைப் பற்றிய கருத்துக் கணிப்புடன் செயற்படுவீர்கள். நீங்கள் ஒன்றைப் பற்றி யூகித்தீர்களானால் அது சரியாகத்தான் இருக்கும்.

தான்தோன்றித்தனமாக தானே முடிவெடுத்து தானே செய்து விரக்தியடைய மாட்டீர்கள். பிறரின் கருத்துக்களையும் அவர்களின் யோசனைகளையும் ஏற்று சிந்தித்துத்தான் முடிவு செய்வீர்கள். கல்வி விடயத்தைப் பொறுத்தவரை நீங்கள் பட்டப் படிப்போ அல்லது அதற்குச் சமனான தகைமைகளையோ அடைய முடியாது.

ஓரளவுதான் படித்திருப்பீர்கள். இதனால் சிரமப்பட்டு உழைக்கக் கூடிய தொழில்களைத்தான் செய்வீர்கள். பிறர் மீது அன்பும், மதிப்பும், மரியாதையும் உடையவர்களாக இருப்பீர்கள். தான் கஷ்ட நிலையில் இருந்தாலும் பிறருக்கு உதவி செய்வதற்குத் தயங்கவே மாட்டீர்கள். சோர்வு மனப்பாங்கு சிறிது .உங்களிடம் காணப்படுவதால் 22 வயது வரை நீங்கள் நல்ல வருமானத்தைத் தேட முடியாது. கஷ்டமாகத்தான் வாழ வேண்டியேற்படும். இதன் பின்னர் உங்களுடைய வாழ்க்கை நிலையில் மாற்றம் ஏற்படும். மனதில் சுறுசுறுப்பும் முன்னேற வேண்டும் என்ற ஆவலும் ஏற்படும். இதனால் தொழில் விடயத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள்.

சிறு வயது முதற்கொண்டுதான் தொழில் ஆரம்பமாகும். என்றாலும் 22 வயதுக்குப் பின்னர்தான் முன்னேற்றம் ஏற்படும். 23 வயது ஆரம்ப முதல் உங்களுடைய வாழ்க்கை நல்ல திசைக்குத் திரும்பும். நன்றாக உழைப்பீர்கள். வருமானம் படிப்படியாக அதிகரிக்கும். 26, 29, 33, 35, வயதுக் காலங்களில் வருமானமும் இலாபமும் அதிகம் கிடைக்கும். இடையிடையே சில சில கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சமாளிப்பீர்கள். 36 வயது தொடக்கம் 39, 42, 45 வயதுக் காலங்களில் உங்கள் வருமானமும் வாழ்க்கையும் முன்னேற்றம் காணும். ஆனால் இந்த வயதுக் காலங்களில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். 45 வயதிற்குப் பிறகு ஆயுள் வரை நல்ல மகிழ்ச்சி உடையவராக வாழ்வீர்கள்.

48 வயதில் ஒரு கண்டம் ஏற்படும். ஆனால் உயிருக்குப் பாதிப்பு இல்லை. இதனால் பயப்படத் தேவையில்லை. 31 வயது தொடக்கம் 40 வயது வரை இருதய சம்பந்தமான நோய் ஏற்படும். இதனால் அடிக்கடி நெஞ்சுவலி, இருதய வலி, திகில், அச்சம் ஏற்படும். பயப்படத் தேவையில்லை. உயிருப்பு ஆபத்தில்லை.

நீங்கள் 31 வயது தொடக்கம் 40 வயது வரை கீழ்க்குறிப்பிடும் உணவுகளை அதிக அளவில் சாப்பிட வேண்டும். ஆப்பிள், கோதுமை, அத்திப் பழம், தக்காளிப் பழம், பப்பாளிப் பழம், ஆரஞ்சுப் பழம், வாழைக்காய், மாம்பழம் ஆகியவை.

வெள்ளை நிறத்தில் ஆடை அணியுங்கள். உங்களுக்கு அதிர்ஷ்டமாகும்.


உங்களுடைய அதிர்ஷ்ட எண் 6. 6, 15, 24 திகதிகளில் முக்கியமானவற்றைச் செய்யுங்கள் வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் வெள்ளிக் கிழமையில் அமையுமாக இருந்தால் வெற்றி இரட்டிப்பாகும். வைரம், புஷ்பராகம் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். உங்கள் யோகம் இன்னும் சிறப்பாகக் கைகூடும்.

ஆகவே, எண் 5இலும், வெள்ளிக்கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ என் ஆசீர்வாதங்கள்.

**வெள்ளிக்கிழமை புனிதமாகும். அது நல்லெண் ஐந்தில் வந்தால் எல்லாம் கைகூடும். சுகம் நலமே வரும். சந்தோசம் நிறையும்.**

**அடுத்து ஆதிக்கம் 5 சனிக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்**

> "மாஜிக் தந்திரங்கள்"
> குறித்த பயிற்சியும் அதனோடு
> ஒட்டிய சுவைமிகு
> தகவல்களும் தொடர்ந்து
> வெளிவரும்.
> மாஜிக் பிரியமுடைய
> நீங்களும் மாஜிக் நிபுணராகத்
> திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

## தொப்பியில் மல்லிகைப் பூ வரவழைத்தல்

வெள்ளைக்காரர் அணியும் தொப்பி போல ஒரு தொப்பி வாங்கிவந்து அதன் உள்பக்கம் பார்த்தால் அதில் வெண்ணிறமான மெல்லிய தோல் வட்டம் தைக்கப்பட்டிருக்கும். அதை விரலினால் தூக்கினால் வரும். அதனுள் மல்லிகைப் பூக்களைச் சுற்றிலும் இடம் கொள்ளும் வரை வைத்து அழுத்தி, வட்டத் தோலை மேலே எடுத்து பூக்கள் இருப்பது தெரியாமல் மறைத்துவிட வேண்டும்.

காட்சி ஆரம்பிக்கும்பொழுது காட்சியாளர் தன் தலையில் இந்தத் தொப்பியை வைத்துக்கொண்டு மேடைக்கு வர வேண்டும். மேடைக்கு வந்து இந்தத் தொப்பியைக் கழற்றி உள்ளே ஒன்றும் இல்லை என்பதை சபையோருக்குக் காண்பித்துவிட்டு, அதை ஒரு ஸ்ரூலின் மேல் மல்லாக்காக வைத்து அதன் மேல் ஒரு கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு மூடி, மந்திரக் கோலினால் மந்திரம் போடுவது போல கைக்குட்டையை எடுத்துவிட்டு, தொப்பியைக் கையில் எடுத்து, தொப்பியினுள் கையைவிட்டு, ஓரத்திலுள்ள தோல் வட்டத்தை மெதுவாகத் தூக்கி, உள்ளே உள்ள மல்லிகைப் பூவை மெதுமெதுவாக வெளியே தள்ளிவிட்டு தொப்பியில் பூ வரும்படி செய்து, அதை எடுத்து சபையோர் மேல் வீச வேண்டும். தொப்பியில் உள்ள பூ முழுவதையும் எடுத்த பின் காலி தொப்பியை சபையோரிடம் காண்பித்து காட்சியை முடித்துவிட வேண்டும்.

*குறிப்பு* : தொப்பியில் பூக்களை வெளியேறாதபடி உள்ளே அழுத்த வேண்டும். தலையிலிருந்து தொப்பியை எடுக்கும்பொழுது ஒரு பூக்கூட கீழே விழக் கூடாது. இந்தக் காட்சியை மிக எச்சரிக்கையாக நடத்த வேண்டும்.

## ஒருவரை அந்தரத்தில் படுக்க வைத்தல்

இந்தக் காட்சியை நடத்த மேடை அமைக்கும் முன்னரே சில வேலைகளை முடிக்க வேண்டியிருக்கும். அதாவது, சுமார் ஆறு செ.மீ. சதுரத்தில், 2 மீற்றர் நீளத்தில் இரண்டு மரக்கட்டைகளை வாங்கி வர வேண்டும். இரண்டு செ.மீ. கனத்தில் 150 செ.மீ. நீளத்தில் இரண்டு இரும்புக் கம்பிகள் வாங்கி வர வேண்டும். இரும்புக் கம்பியின் ஒரு தலைப்பில் 7 செ.மீ. நீளத்திற்கு 'ட' போல வளைத்துவிட வேண்டும். 'ட' போல வளைந்த பகுதி உள்ளே போகும் அளவில் ஒரு செ.மீ கனமுள்ள இரும்புக் கம்பியில் வளையம் வைத்த 4 கொண்டிகள் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நீளக்கட்டையை எடுத்து பூமிக்குள் போகும் அளவு 30 செ.மீ போக பாக்கி உள்ளதில் மேடை உயரம் எவ்வளவு வருமோ அந்த அளவைக் கணக்கிட்டு, அதையும் கழித்து மேடை மட்டத்திலிருந்து 80 செ.மீ.உயரம் வைத்து. அந்த இடத்தில் ஒரு கொண்டியை மரத்தில் இறக்கி அதன் கீழ் 3 செ.மீ. இறக்கி - அதாவது இரண்டு கொண்டிகளுக்கும் நடுவே மூன்று செ.மீ. இடைவெளிவிட்டு - மற்றொரு கொண்டியை சரி நேராக இறக்க வேண்டும். இது எப்படி இருக்கவேண்டுமென்றால், மரக்கட்டையை ஊன்றி அந்தக் கொண்டிகளில் கம்பியின் 'ட' போன்ற பகுதியைச் சேர்த்து விட்டால் 'ட' போன்ற பகுதி கொண்டியில் மாட்டிக் கொள்ள வேண்டும். கம்பியை இடம் வலமாகத் திருப்பினால் அது கதவு போல இடம் வலமாகத் திரும்ப வேண்டும். இந்த வகையில் இரண்டு கட்டைகளையும் தயார் செய்து வைத்துக்கொண்டு, கம்பிகளுக்கும் கட்டைக்கும் கறுப்பு வர்ணம் அடித்துவிட வேண்டும்.

மேடை அமைக்கப்போகும் பகுதியில் நடுப்பாகத்தில் இரண்டு பகுதிகளுக்கு மையமாக இரண்டு கட்டைகளையும் ஓர் அடி ஆழக் குழி வீதம் தோண்டி அதில் இந்தக் கட்டைகளை நாட்டி சுற்றிலும் கல் போட்டு கெட்டி செய்துவிட வேண்டும். இந்த இரண்டு கட்டைகளுக்கும் மத்தியில் சுமார் 45 செ.மீ. அளவு இடைவெளி இருக்க வேண்டும்.

இந்த வேலை முடிந்தபின் இரண்டு கம்பிகளையும் எடுத்து இரண்டு கட்டைகளிலுமுள்ள கொண்டிகளில் மாட்டி விட்டால் இரண்டு கம்பிகளும் கையை நீட்டியது போன்ற நிலையிலிருக்கும். இந்தச் சமயம், அதன் மேல் ஒரு நீளப் பலகையைப் போட்டு, அதன் மேல் ஒருவர் ஏறிப் படுக்க வேண்டும். இப்படிப் படுத்தால், இந்தக் கம்பி, ஓர் ஆளைத் தாங்கக்கூடியதாய் இருக்க வேண்டும்.

இந்தக் கட்டைகளை நாட்டிய பின்தான் மேடை அமைக்க வேண்டும். மேடை அமைத்தபின் இந்தக் கட்டைகளுக்கு முன்பாக உயரே உள்ள பரண் மட்டத்திலிருந்து, மேடை தரைமட்டம்வரை வரக்கூடியதும், நீள வசத்தில் சுருக்கம் சுருக்கமாக உள்ளதுமான ஓர் கறுப்புத் திரை தயாரித்து, அதன் மத்தியில் வெண்ணிறமான ஒரு அபாயக் குறியும் போட்டு, அதன் தலைப்பு ஓரத்தைப் பரணில் பலமாகக் கட்டிவிட வேண்டும். இந்தக் காட்சி தவிர, மற்றக் காட்சிகள் நடைபெறும் பொழுது இந்தத் திரையைச் சுருட்டி பரணில் கட்டிவிட வேண்டும்.

இந்தத் திரையில் மற்றொரு வேலையும் செய்ய வேண்டும். அதாவது திரையைத் தொங்கவிட்டால் கட்டையிலிருந்து கை போல நீண்டிருக்கும் கம்பியின் மேல் நின்று கீழே விழும் இடத்தில் அதை மேல் கீழாக நீளவசத்தில் கிழித்துவிட்டு, திரை மேடை தரை மட்டம் வரை தொங்கும்படி செய்ய வேண்டும். திரையை விட்டால், திரையிலுள்ள கிழிசல் கம்பியின் மேல் விழ, கிழிசல் வழியாக கம்பி நீண்டிருக்க, திரை மட்டத்திற்கு நின்றுவிட வேண்டும். இந்த வகையில் திரையைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

இந்த வேலை முடிந்தபின் கம்பியை திரைக்கு முன் நீட்டி வைத்து, அதன் மேல் ஒரு பலகையை வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதன் மேல் ஆளைப் படுக்க வைத்தபின் திரைக்கும், படுத்திருக்கும் ஆளுக்கும் இடையே 15 செ.மீ. அளவு இடைவெளி இருக்க வேண்டும்.

5 மி.மீ. கனமுள்ள ஓர் உருக்குக் கம்பி அல்லது இரும்புக் கம்பியை எடுத்து சுமார் 60 செ.மீ. குறுக்களவுள்ள ஒரு வட்ட வளையம் தயாரிக்க வேண்டும். இந்த வளையத்தை பலகையில் படுத்திருப்பவரின் தலைப் பக்கமிருந்து கால் பக்கம் எடுக்கக்கூடிய அளவில் இருக்க வேண்டும். பார்வைக்கு ஒரே கம்பி போலவே இருக்க வேண்டும். இந்த வளையத்தின் இரு முனைகளும் வாய் பொருந்தி இருக்க வேண்டும். இதனைப் பொருத்தி வாயை முன்பக்கம் வைத்து, பின் பக்கம் வளைவை இரு கைகளினாலும் இலேசாக நிமிர்த்திப் பிடித்தால், வளையத்தின் வாய் சுமார் மூன்று செ.மீ. அகலம் திறக்க வேண்டும். இந்த விதமாக ஒரு கம்பி வளையம் தயாரித்து அதன் மேல் கறுப்பு, வெள்ளைக் கட்டுகள் போட வேண்டும். இதை வெள்ளை, கறுப்பு வர்ணத்தால் போட வேண்டும்.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை.
> *-காதில பூ கந்தசாமி-*

என்ன செய்துகொண்டிருக்கிறாங்கள் இவங்களெல்லாம். ஏதோ எம்.பி ஆகிவிட்டால் வெட்டிக் கிழிச்சிடலாமெண்டு தொண்டை கிழியக் கத்திக் கத்தி வாக்கு வேட்டை நடத்திப் போட்டுப் போய், பஞ்சு மெத்தையில படுத்து நித்திரை கொண்டிட்டாங்களோ? அங்க அவரொருத்தர், சம்பந்தனருக்கு ஊரில தங்கியிருக்க இருப்புக் கொள்ளாதாம், எம்பஸிகளுக்கு ஆளனுப்பி பாஸ்போட்டில விசாக் குத்திக்கொண்டு வெளிநாடு சுத்திறதுதான் வேலை. கேட்டால் எல்லாம் பிரசார அலுவலாத்தான் பயணஞ்செய்யிறதா பவிசு காட்டுறார். அங்க ஒரு பிரசாரமுமில்லை மண்ணுமில்லை. குடும்பத்தோட கொண்டாடிவிட்டு வரவும் தமிழற்ற பிரச்சினைதான் வாச்சிருக்குது.

என்ன, வலு ஆவேசமாப் பேசிறனெண்டு பாக்கிறியளோ. பின்ன என்ன? இவை இங்க இளிச்சுக்கொண்டிருக்க அவன் டென்மார்க்காறன் தடை விதிக்கப் போறதா அறிவிச்சிட்டான். தான் மட்டுமில்லை, ஐரோப்பிய யூனியனும் தடை விதிக்க வேணுமெண்டு அவன் வலியுறுத்திற அளவுக்கு விசயம் போயிருக்கு. இவை ஒரு இருபத்திரெண்டு எலிக் குட்டிகள் பாராளுமன்றத்துக் கன்ரீன் சாப்பாடே சொர்க்கமெண்டிட்டு, உலக நாடெல்லாம் தங்களுக்குத்தான் சப்போட்டெண்டு தமிழாக்களுக்குப் பூச் சுத்திக்கொண்டிருக்கினம்.

இந்தச் சமாதான காலத்திலயும் தடை செய்ய வெளிக்கிடுறதெண்டால், அதுவும் இலங்கையே தடை நீக்கியிருக்கேக்க இன்னொரு நாடு, தடைசெய்யத் துடிக்குதெண்டால் நிலைமையை யோசிச்சுப் பாருங்கோ. சமாதானப் பேச்சைத் துடங்கினதே சர்வதேசத் தடைகளை நீக்குவிக்கத்தான். ஆனால் தடை விதிச்ச நாடுகள் ஒண்டுகூட இவ்வளவு காலமாகியும் தடைய நீக்கேல்லை. அதுக்கு மேலால இப்ப சமாதான உடன்பாடு அமுலில இருக்கேக்கையே தடைசெய்ய வெளிக்கிட்டிட்டாங்களெண்டால் சமாதானத்துக்கு வந்ததிலயே பிரயோசனமில்லையே.

அதிலயும் இத்தனை அமளி துமளிப்பட்டு, கள்ள வோட்டுப் போடுறானெண்ட கெட்ட பெயரையும் சர்வதேசக் கண்காணிப்புக்காறரெல்லாரிட்டையும் வாங்கிக் கட்டிக்கொண்டு, எவரெவரையோ எம்.பி ஆக்கிப்போட்டுப் போறதுக்கு என்ன வில்லங்கம் வந்தது? எம்.பி ஆக்கிவிட்டால் எம்பிக் குதிச்சு ஏதேனும் சாதிப்பாங்களெண்டு பாத்தால், இதுகள் சாரைப் பாம்பு கணக்காச் சுருண்டு படுத்துக் கிடக்குதுகளே!

அவரொருத்தர் ரவியான ராயராம், தேர்தலுக்கு முன்னம் பேசின பேச்சைக் கேக்க வேணும். தாங்கள் இந்த முறை படிச்சாக்களைப் பாத்துத்தான் தேர்தலில நிறுத்துவினமாம். ஏதோ இவர் தான் நிறுத்திற மாதிரி. அப்ப, படிப்புப் பாடமெல்லாத்தையும் விட்டிட்டுப் போராடப் போன பெடியளெல்லாம் மடையரெண்ட நினைப்பு. பெடியளின்ர ஆதரவில சீற்றுப் பிடிக்க நிண்டுகொண்டு அவையளையே மட்டந்தட்டிற பேச்செல்லே பேசினார். தாங்கள் ஏதோ படிச்ச மனிசராம். படிச்சவைதான் இப்ப கிழிச்சுப் போட்டு நிக்கினம். டென்மார்க்காறன் தடைசெய்ய வெளிக்கிடும்வரை இந்தப் படிச்ச லோயர்மார் எங்கயாம் வாய் பாத்துக்கொண்டிருந்தவை?

உவை எம்பஸிவளியபோய் என்ன பேசிறவையெண்டு யாருக்குத் தெரியும்? தனியத் தானே சந்திக்கினம். அவை வாயத் திறக்க முந்தி அவன் எங்கெங்கையோ இருந்து இன்பமேசன் எடுத்து வைச்சுக்கொண்டு ஆயிரம் கேள்வி கேப்பான். இவை மறுத்தால் மரியாதை பேயிடுமெண்டிட்டுப் பேசாமல் தலையாட்டிப்போட்டு இங்கால பேப்பருக்குத்தான் பெரும் அறிக்கை விடுவினம்.

இந்தப் பேப்பர்காறனும் எல்லாத்தையும் வெண்டவன். உலகம் முழுக்கத் எங்களுக்காகத்தான் உருளுறதாக் கதை விட்டுக் கதை விட்டுச் சனத்தைப் பொய்யிலயே புதைச்சு வைச்சிட்டான். உண்மை இருந்தாப்போல வந்து இடி போல இறங்கேக்க அடிபட்டுச் சாகிறது சனந்தானே. நல்லதோ கெட்டதோ. உள்ள நிலவரமென்னவெண்டு உண்மையைச் சொன்னால்தானே சனம் மனதையெண்டாலும் பக்குவப்படுத்திக்கொள்ளும். இது எல்லாத் திசையும் வெள்ளிதிசைதானெண்டு வெளுத்து வாங்கிக்கொண்டேயிருந்தால் நிசத்தில நாங்கள் எங்க போய்க்கொண்டிருக்கிறமெண்டது எவருக்குத் தெரியும்?

எங்கட பேப்பர்காறர் காட்டிக்கொண்டு வந்த பிலிம்மைப் பாத்தால் இத்தறுதிக்கு நாங்கள் ஐ.நா சபையிலயும் தமிழீழக் கொடியை பறக்கவிட்டு, எல்லா நாடுகளின்ர அங்கீகாரமும் பெற்று, கையோட அபிவிருத்திக்கெண்டு பெரும் நிதியுதவிகளையும் அள்ளி வந்திருக்க வேணும். ஆனால் இங்க பாத்தால் தடைசெய்யிற அளவுக்கு விசயம் வில்லங்கமாய்ப் போயிருக்கு. எவனெண்டாலும் ஒரு பேப்பர்காறன் சாடையாத் தன்னும் சொல்லிக் காட்டினானா, விசயம் பிழைக்கப் போகுதெண்டு? நம்பகமான பேப்பரெண்டால் தடைசெய்யிற அளவுக்கு நிலைமை போகுதெண்டவுடன எலாமடிச்சிருக்கவெல்லே வேணும். இது கப்பலில ஓட்டை விழுந்த பிறகும், பயணம் நல்ல இதமாப் போகுதெண்டு அறிவிச்சுக் கொண்டிருந்தால் சனந்தானே சாக வேணும்?

இனிக் கிடந்து-தடை செய்தது பிழையெண்டு ஆயிரம் கத்துக் கத்துவினம். தடை செய்யாத மாதிரி நடக்கிறதுக்கு வழிகாட்டாமல், பிழை சரிகளை மூடிமறைச்சுப் பெரும் புகழாரம் மட்டும் சூட்டிக்கொண்டு நிண்டுபோட்டு, இனிக் கிடந்து கத்தி என்ன பயன்? பேப்பர்காறருக்கும் பிரச்சினை தெரியாதெண்டு நினைக்கிறியளோ? அதெண்டால் பச்சைப் பம்மாத்து. தெரிஞ்சும் தெரியாதது போல நடிக்கினம். இல்லாட்டால் இங்க ஏதோ தமிழுக்காக உயிர் குடுத்து எழுதிறதாக் காட்டிக்கொண்டிருந்த பத்திரிகையாளர்களெல்லாம் ஒரு எப்பன் இடம் கிடைச்சவுடன அள்ளிச் சுருட்டிக்கொண்டு வெளி நாட்டுக்கு அசைலம் எடுத்துக்கொண்டு பறந்திட்டினமே. அவை தங்களுக்கு உள்ளூரத் தெரியிறதையும் வெளியால காட்டாமல் கயமைத்தனமாயெல்லே நடிச்சிருக்கினம். சரி, போகுது. இனிப் போய் இந்த எம்பிமாரிட்டயும் பத்திரிகைகளிட்டையும் கெஞ்சிக் கேப்பம்.

*"ஒரு பொய்யாவது சொல் கண்ணே.- எல்லாம் நல்லாய் நடக்குதென்று.*
*அந்தச் சொல்லில்... உயிர் வாழ்வோம்!"*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(14.10.2004 தொடங்கி 20.10.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

துலாம்- சூரியன், புதன், கேது, மேடம் - இராகு, கர்க்கடகம் - சனி, சிங்கம் - வெள்ளி, கன்னி - வியாழன், செவ்வாய்
சந்திரன் விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், பிரயாணக் கஷ்டம், குடும்ப கௌரவம், மன மகிழ்ச்சி, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் நன்மை.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் மந்தம், காரியானுகூலம், இனசன நன்மை, முயற்சி பலிதம், உத்தியோக சிரமம், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, அன்னியர் நட்பு, குடும்ப சுகம், தேக சுக நன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் சிக்கல், வீண் மனஸ்தாபம், அன்னியரால் தொல்லை, குடும்பக் கவலை, பிள்ளைகளால் கஷ்டம், உத்தியோக மகிழ்ச்சி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் மேன்மை, பெரியோர் உதவி, பண வரவு, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் மேன்மை, உயர்ந்த எண்ணம், உத்தியோகக் கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் பலிதம், வீண் செலவு, அன்னியர் நட்பு, மனக் குறையதிகம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் கஷ்டம், காரியத் தடை, மனக் கவலை, குடும்ப நன்மை, தேக சுகக் குறைவு, உத்தியோக முயற்சி, மனக் குறை நீங்கும், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை )
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, அன்னியர் நட்பு, குடும்ப சுகம், மன மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 04


**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் மந்தம், காரியத் தடை, இனசன நன்மை, வீண் பிரயாணம், பணச் செலவு, உத்தியோகம் பலிதம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் பலிதம், பண வரவு, காரியத் தடை, வீண் குறை கேட்டல், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் நன்மை, பண வரவு தடை, அன்னியர் உதவி, வெளியிட வாழ்க்கை, குடும்ப மேன்மை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**மீனம் :**
(பூரட்டாதி முன்முக்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம்,உத்தியோக நன்மை, புதிய முயற்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)



# பூப் பறிக்க வாரீங்களா?

**போ**லந்தில் நோவி டொமிஸ் கலாசார நிலையத்திற்காக கையினால் செய்யப்பட்ட உலகிலேயே மிகப் பெரிய பூக் கூடையை இங்கே காணலாம். 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்குமிடையில் உருவாக்கப்பட்ட இந்தப் பூக் கூடையின் கன அளவு என்ன தெரியுமா? 56 அடி. 8.5 அங்குலம் X 31 அடி 0.5 அங் X 25 அடி 3.5 அங்குலமாகும். நீங்களே கணக்கிட்டுப் பாருங்களேன். பூக் கூடையாக இருந்தாலும் மரங்களைக் கூட உள்ளடக்கும் விசாலம் கொண்டது இந்தக் கூடை. இப்படியும் ஒரு கூடையா?




# நாங்க ரெடி....

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் நடந்த மினி உலகக் கிண்ணத்துக்கான போட்டியின் அரையிறுதியில் இங்கிலாந்திடம் அதிர்ச்சித் தோல்வி கண்ட பிறகு, இந்திய அணியுடனான நான்கு டெஸ்ட் ஆட்டங்களுக்காக இந்தியாவுக்கு வருகை தந்திருப்பது தெரிந்ததே. இங்கிலாந்துடனான தோல்வியானது அவுஸ்திரேலிய அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தவில்லை. இந்தியாவை வெற்றி கொள்வோம் என்ற உத்வேகத்தோடு வந்தவர்கள் அதே போன்று தங்கள் திறமையையும் வெளிப்படுத்துகிறார்கள். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அவுஸ்திரேலிய அணி வீரர் மெத்யூ ஹைடன் முதல் டெஸ்டில் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதும், அணியின் ஏனைய வீரர்களான மைக்கல் கிளார்க், அடம் கில்கிறிஸ்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு சதத்தை விளாசித்தள்ளியுள்ளனர். அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸில் 474 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி எதிர்த்து முகங்கொடுக்க முடியாமல் ஆரம்பத்திலே சுருண்டுவிட்டதை இரசிகர்கள் ஜீரணிக்க முடியாமல் உள்ளனர். இந்திய அணி முதல் இனிங்ஸில் 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸுக்காக அவுஸ்திரேலிய அணி 400 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்ற நிலையில் ஆடுகிறது. ஒப்பீட்டளவில் இந்தியாவின் பக்கம் தோல்வியே அண்மித்துக்கொண்டிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது.

# ஆலோசனை

கிரிக்கெட் ஆட்டங்களைப் பொறுத்தவரை எந்தவொரு நாடும் சொந்த மைதானத்தில் விளையாடும்போது எதிரணிக்குச் சவாலாக அமைந்துவிடுகிறது. உதாரணத்திற்கு இலங்கையில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை அணி எவ்வாறு விளையாடியது என்பது மிகப் பொருந்தும். இந்திய அணிக்கும் அவ்வாறானதொரு வாய்ப்புக் கிடைக்குமென கிரிக்கெட் ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்பட்டபோதும் பலம்பொருந்திய அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்வது சவாலாகவே இருக்கும் என்பது ஏனைய தரப்பாரின் ஊகம். சச்சின் டெண்டுல்கார் தோள்பட்டை உபாதை காரணமாக போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை. அணியின் தலைவரும் உப தலைவரும் கூட பிரகாசிக்கத் தவறியது இந்திய இரசிகர்களுக்கு ஏமாற்றம்தான். 100 கோடிக்கு மேல் சனத்தொகை இருந்தும், சிறந்த கிரிக்கெட் ஆட்டத்திற்காக பதினொரு பேர் இல்லையே என இந்திய இரசிகர்களின் புலம்பலில் நியாயம் இல்லாமல் இல்லை.



## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து / 20.10.2004




மதுசாந் - கபிசாந்

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மசீலன் - சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான மதுசாந் - கபிசாந் இருவரும் தமது முதலாவது பிறந்ததினத்தை 20.10.2004 அன்று ஊரெழு கிழக்கிலுள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இவர்கள் இருவரும் ஊரெழு கிழக்கு ஸ்ரீ ஞானவைரவர் அருள் பெற்று பல்கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: மாமன்மார்
சுதர்சன் - லண்டன்
சுரேஸ்தரன் - ஜேர்மனி
சுகுணன் - யாழ்ப்பாணம்

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



15 10 2004

செல்வி சு. ஆர்த்தி

மானிப்பாய் (சுதுமலை) சுகுமாரன் - அக்கரைப்பற்று கீதா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆர்த்தி தனது முதலாவது பிறந்த நாளை 15.10.2004 அன்று சுவிஸ் சூரிச் நகரிலுள்ள தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் உள்ள அம்மம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், ஆசை மாமா, அக்காமார், அண்ணாமார், தம்பி, லண்டனில் வசிக்கும் பாட்டி தாத்தா, மாமா, மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், ஜேர்மனில் வசிக்கும் சின்ன மாமி, மாமா, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நிறைவோடும் மகிழ்வோடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து பேர்மிங்காமை வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் - ரேவதி தம்பதிகளின் செல்வப் புதல்வி தனுசியா தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் 06.10.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். குழந்தை தனுசியாவை அன்பு அப்பா - அம்மா, அக்கா அனுசியா, லண்டன் சின்னப் பெரியப்பா - பெரியம்மா, அண்ணா காவியன், அக்காமார்களான இலக்கியா, அகல்யா, தங்கை கவிநயா, காரைநகர் அம்மப்பா - அம்மம்மா, இளவாலை பெரியப்பா - பெரியம்மா, பபி அக்கா, கரன் அண்ணா, வன்னி சின்னப் பெரியப்பா, வன்னி மாமா, அத்தை, விது மச்சாள், கோபி மச்சான், அபி மச்சான், சுவிஸ் பெரியப்பா - பெரியம்மா, தர்ஷன் அண்ணா, சுவிஸ் மாமா - மாமி, வவுனியா சின்ன மாமா, குட்டி மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சுழிபுரம் பறாளாய் விநாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- திரு - திருமதி. ஜெயபாலன்
பேர்மிங்காம், U.K.



செல்வி ஜெ. தனுசியா / 06.10.2004



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஒக். 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.